நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம

பல திருமணங்கள் செய்ததேன்?



மௌலவீ அல்ஹாஜ் M.A. ஷைகு ஹுஸைன் பா

பொருளடக்கம்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்

பல திருமணங்கள் செய்ததேன்?

ஆசிரியர் : வடகரை

மௌலவீ அல்ஹாஜ் M.A. ஷைகு ஹுஸைன் பாகவீ

Publishers:

Al Baree Publications

No.11, 1st Street
Sathiq Basha Nagar
Alwarthiru Nagar, Madras - 87.

முதற்பதிப்பு: ஹிஜ்ரீ 1408.
ரபியுல் ஆகிர் 12.
கி.பி.1987, டிஸம்பர் 4
இரண்டாம் பதிப்பு: ஹிஜ்ரீ 1411,
ஜமாதுல் அவ்வல் 23.
கி.பி.1990, டிஸம்பர் 12
மூன்றாம் பதிப்பு: ஹிஜ்ரீ 1416 ரமழான் மாதம் 17
கி.பி.1996 பிப்ரவரி 7

ஹதியா: **25–00**

இந்நூல் கிடைக்குமிடங்கள்:
No.15 ந.கோ. தெரு
வடகரை Po, தென்காசி TK
நெல்லை DT
Pin 627 812.

★ ★ ★

No.11, முதல் தெரு
சாதிக்பாஷா நகர்
ஆழ்வார் திருநகர்
சென்னை 600 087.

கோவை (கோட்டை) இம்தாதுல் உலூம் அரபிக் கல்லூரியின் முதல்வரும் எனது ஆசிரியைத் தந்தையுமான மௌலானா மௌலவீ M.அப்துல் ஜப்பார் ஸித்தீக்கீ (பாஜிலே தேவ்பந்து) அவர்கள் மனமுவந்து அளித்த

மதிப்புரை

“நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பல திருமணங்கள் செய்ததேன்?” என்ற நூலின் கையெழுத்துப் பிரதி முழுதையும் படித்துப் பார்த்தேன். நூல் ஆசிரியர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ், M.A.ஷேக் ஹுஸைன் பாக்கவி (வடகரை) அவர்களால் தொகுக்கப்பட்ட இந்த நூல் எளிய நடையில் அமைந்துள்ளது.

ஆங்காங்கே ஆதாரங்களையும் குறிப்பிடுவது நூலின் தனிச் சிறப்பு!

பலதார மணம் பற்றி இஸ்லாத்தின் மாற்றுக் கருத்துள்ளவர்கள், பொதுவாக முஸ்லிம்கள் பற்றியும், குறிப்பாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பற்றியும் தங்களின் கருத்துக்களை மாற்றி தெளிவுபெற வாய்ப்புள்ளது.

பலதார மணம் பொதுவாக மனித வாழ்க்கைக்கும், பெண்களின் உடற்கூறு அமைப்புக்கும் தேவைதான் என்பதை உணர்வதுடன் தற்காலத்தில் ஆண், பெண் தூயவாழ்வு பெற மிக மிகத் தேவை என்பதை அவர்களின் விகிதாச்சார எண்ணிக்கை மூலம் தெளிவான சிந்தனையுடன் யோசித்தால் தெளிவு பெற முடியும்.

அல்லாஹ்! நூலாசிரியரின் ஆரம்ப முயற்சிகளுக்கு மக்களிடம் ஆதரவைப் பெற வைப்பதன் மூலம் இது போன்று பல வெளியீடுகள் வர ஆவன செய்யப் பிரார்த்திக்கிறேன். மேலும் இம்மை மறுமையில் நற்பலன் அருளவும் இறைஞ்சுகின்றேன்.

வஸ்ஸலாம்

மௌலவீ M.அப்துல் ஜப்பார் ஸித்தீக்கீ

கோட்டை கோவை 2-4-87 (பாஜிலே தேவ்பந்த்)

மதிப்பிற்குரிய **A.K. ரிபாயி சாஹிப்** B.A.,Ex.M.P. அவர்கள் மனமுவந்து அளித்த

அணிந்துரை

அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக அனுப்பப் பட்ட நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்க்கை பலதரப்பட்டது; பல்வகைப்பட்டது. மனித வாழ்க்கையின் சகல அம்சங்களுக்கும் அன்னாரது வாழ்க்கையில் முன்மாதிரிகள் இருக்கின்றன. நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் விட்டுச்சென்ற, தொட்டுச் சொல்லாத பிரச்சனைகளே கிடையாது. அதனால் தான் இறைவனே தனது திருமறையில் "அழகிய முன்மாதிரிகள் தனது இறுதி நபியின் வாழ்க்கையில் இருக்கின்றன" எனப் பிரகடனப்படுத்தியுள்ளான். அது முழுமை பெற்ற வாழ்க்கை. சம்பூரணமான வழிமுறை.

நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இல்லறம் குறித்து மௌலவீ அல்ஹாஜ் எம்.ஏ.ஷேக் ஹுஸைன்பாகவி அவர்கள், புதிய கோணத்தில் இருந்து இந்நூலை எழுதி இருக்கிறார்; புதிய பார்வையை புகுத்தி இருக்கிறார். இது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். பலதார மணம் குறித்துப் பலருக்கு பலவகை சந்தேகங்கள் எழலாம், பல புதிர்கள் தோன்றலாம். அவற்றிற்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் இந்நூலாசிரியர் இந்நூலைப் படைத்திருக்கிறார். எதிரிகள் வாயடைத்துப் போகும் வண்ணம் நல்ல பல ஆதாரங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார்.

இன்றைய நாகரீக உலகில், பலதார மணம் கண்டிக்கப் படுகிறது; சட்டங்கள் மூலம் அதற்குத் தடைகள் விதிக்கப் படுகின்றன. ஆம்! எல்லாம் ஏட்டளவில் தான். "ஏகதாரம்" தான் இருக்க வேண்டும் என பல நாடுகளும் சட்டங்களை

செய்து வைத்துக் கொண்டபோதிலும், நிஜவாழ்க்கையில் பெரும் பாலான மக்கள் இந்நியதியைக் கடைப்பிடிப்பதில்லை; ஏனைய பெண்களுடன் உடலுறவு வைத்துக் கொண்ட நிலையிலேயே இம்மாதிரிப் பட்டவர்கள் ஏகதாரம் பற்றி வாய் கிழியப் பேசுகிறார்கள்; மற்றவர்களுக்கும் உபதேசம் செய்கிறார்கள். இன்றைய நாகரீக உலகில் அந்தரங்க வாழ்க்கை என்பது வேறு; பொது வாழ்க்கை என்பது வேறு. நடைமுறைக்கு ஒத்துக் கொள்ளாத, செல்லரித்துப்போன, உளுத்துப்போன வாழ்க்கை திட்டத்தை, அதை விரும்பாத மக்கள் கூட்டத்தின் மீது திணிக்கப் பல நாடுகளும் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றன.

இம்மாதிரி போலி வாழ்க்கைகளை களைத் தெரிந்ததுதான் இஸ்லாம். இத்திட்டத்தை நடைமுறையில் செய்து காட்டியது நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே! இயற்கையோடு ஒத்த வாழ்க்கையை அண்ணலெம் பெருமானார் அவர்கள் நடத்திக் காட்டினார்கள். வாழ்ந்து காட்டினார்கள். ஒளிவு மறைவின்றி செய்து காட்டினார்கள்; முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்.

பலதார மணம் இஸ்லாத்தின் மூலம் ஒழுங்குப் படுத்தப்பட்டது; அதற்கு வரம்பு கட்டப்பட்டது. அது முறைப்படுத்தப்பட்டது; விதிமுறைகள் வகுக்கப்பட்டன. இந்த விபரங்களையெல்லாம் இந்நூலாசிரியர் தமது நூலில் நன்கு விளக்கி இருக்கிறார்; விவரித்து இருக்கிறார்.

"நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பல திருமணங்கள் செய்ததேன்?" என்னும் நூலை அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாவாநகரம். 627 812 இப்படிக்கு,
9–11–87 A.K. ரிபாயி

முன்னுரை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

الحمد لله ، والصلاة والسلام على رسول

الله نبينا محمد وآله وصحبه .

மனிதன் இம்மை, மறுமை இரண்டிலும் வெற்றிபெற வேண்டுமானால் அவன் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை முழுமையாக பின்பற்றி வாழ வேண்டும்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்க்கையில் அழகிய முன்மாதிரி உண்டு, என்று அல்லாஹு தஆலா கூறுகிறான். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் குணம் "குர்ஆன்" ஆக இருந்தது, என்று அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியுள்ளார்கள். எவர் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை பரிபூரணமாக பின்பற்றி வாழ்கின்றாரோ அவர் இரு உலகிலும் வெற்றி பெற்றவராவார். எவன், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை வெறுக்கின்றானோ, அன்னாரின் வழிமுறையை அது சரி இல்லை, இது சரி இல்லை என்று கூறுகின்றானோ அவன் இரு உலக அழிவுக்குள்ளாவான் என்பதில் சந்தேகமில்லை.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாத்தை எதிர்த்த அன்றைய கடும் விரோதிகளில் ஒருவர் கூட நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இச்சைக்காக பல திருமணங்கள் செய்தார்கள் என்று கூறியதில்லை. இன்றைய இஸ்லாத்தின் எதிரிகள் உண்மை நிலையை அறிந்தும் வேண்டுமென்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின்

பலதார மணத்தைக் குறை கூறுகின்றனர். அறிவற்றவர்களின் பொய்க் கூற்றை விட்டும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள் என்று இந்நூலைப் படிப்பவர்கள் உணர்வு பெறுவார்கள்.

ஆகவே விளக்கமில்லாதவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். வீம்புக்காக குறை கூறுபவர்கள் உண்மையை உணர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பல திருமணங்கள் செய்ததின் உண்மை நிலையை எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் இதை எழுதி, இதற்கு "நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பல திருமணங்கள் செய்ததேன்? "எனப் பெயர் வைத்தேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது சலவாத் கூறுவதால் ஏற்படும் சிறப்புகளை நாம் அறிந்திருக்கின்றோம். ஆகையால் இந்த நூலை ஒருவர் கேட்கும் போது, கொடுக்கும்போது இந்நூலின் பெயரே சலவாத் சொல்லக் கூடிய முறையில் அமைந்துவிட்டால் பல தடவை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது சலவாத் கூறிய பாக்கியம் கிடைக்கும். அதன் காரணமாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின்மீது கூறக்கூடிய சலவாத் முழுவதையும் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பெயராக வைத்தேன்.

மக்காவில் தலைசிறந்த ஆலிமாக, பேரறிஞராக விளங்கக் கூடிய மௌலானா முஹம்மது அலீ ஸாபூனீ ஹழ்ரத் அவர்கள் எழுதியுள்ள "ரவாஇஉல்பயான்", என்ற நூலைப் பார்த்தேன். அதில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் பல தார மணம் செய்துகொண்டதின் தத்துவங்களையும், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது தீயோர்கள் கூறக் கூடிய பொய் கூற்றுக்கும் ஆதாரப் பூர்வமான முறையில் விளக்கம் கூறியுள்ளார்கள், அவர்களின் இந்நூல் எனக்கு

மிகப் பெரிய பேருதவியாக இருந்தது. ஆகவே அப்பெரியார் எழுதிய கருத்துக்களை அப்படியே எழுதியுள்ளேன்.

மேலும், தப்ஸீர் மஆரிபுல் குர்ஆன், மிர்காத் ஷரஹ் மிஷ்காத், ஸய்யிதாத் பைத்துன் நுபுவ்வத், தப்ஸீர் குர்துபீ இவைகளிலிருந்தும் எழுதியுள்ளேன்.

முஸ்லிம் அல்லாத பலர் இஸ்லாத்தை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பலதார மணத்தை எதிர்க்கின்றனர். ஆகவே அவர்களும் உண்மை நிலையை உணர வேண்டும். அல்லாஹ்வினால் மனிதனுக்கு தேவையாக்கப்பட்ட ஒன்றை யாரும் தடுக்கக் கூடாது. அப்படி தடுப்பது ஒன்று, அல்லாஹ்வின் நோக்கத்தை தடுத்த குற்றமாகும். இரண்டாவது, மனிதனுக்கு செய்யும் துரோகமாகும். அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக செயல் படும்போது அழிவுக் குண்டான விபரீதங்கள் ஏற்படும் என்பதை அறிகிறோம். ஆகவே பலதார மணம் விரும்பத் தக்கது என்பதை சுட்டிக் காட்டவே பலதார மணம் செய்து கொண்ட ஹிந்துக் கடவுளின் அவதாரங்கள் என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீபாகவதம் என்ற நூலிருந்து 11 குறிப்புகளைத் தந்துள்ளேன். பல தலைவர்களும் பலதார மணம் செய்து கொண்டு வாழ்ந்ததையும் குறிப்பிட்டுள்ளேன்.

என் அன்பிற்குரிய ஆசிரியத் தந்தையும், கோவை இம்தாதுல் உலூம் அரபிக் கல்லூரியின் முதல்வருமான மௌலானா மௌலவீ M. அப்துல் ஜப்பார் சித்தீக்கீ (பாஜிலே தேவ்பந்த்) ஹழ்ரத் அவர்களின் உதவி மறக்க முடியாதது. இந்நூலின் கையெழுத்துப் பிரதியை ஹழ்ரத் அவர்களிடம் காட்டி மதிப்புரை கேட்டபோது தங்களது முக்கியமான பணிகளை ஒத்தி வைத்து விட்டு இந்நூலை முழுதும் பார்வையிட்டு மதிப்புரை வழங்கினார்கள். ஹழ்ரத் அவர்களுக்கும், மேலும் இந்நூலை நல்ல முறையில் பார்வையிட்டு அழகிய முறையில் "அணிந்துரை" வழங்கிய

A.K.ரிபாயி சாஹிப், B.A., Ex.M.P. அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவர நல்ல ஆலோசனைகள் கூறிய, உடன் குடி M.M. யூசுப் B.PHARM அவர்ளுக்கும், மேலும் இந்நூலுக்கு நல்ல முறையில் ஆலோசனை, குறிப்புகளையும் தந்துதவிய மௌலவீ நண்பர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்நூலில் படிப்பினைகள் நிறைந்து காணப் படுகின்றன. ஆழ்ந்து படிப்பவர்களுக்கு இது புலனாகும்.

எங்கள் ரப்பே! உனது பேரருளால் இந்நூலை எழுதியுள்ளேன். இச்சிறிய சேவையை பரிபூரணமாக ஏற்றுக் கொள்வாயாக! இதை எழுதி வெளியிடுவதில் குற்றம் குறை இருப்பின் உனது கருணையால் மன்னிப்பாயாக! இதை அனைவரும் படித்து பயன் பெறக் கூடிய நூலாக ஒப்புக் கொள்வாயாக! யா அல்லாஹ்! நாங்கள் உனக்கும், உனது ஹபீப் எங்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் முற்றிலும் வழிப்பட்டு நடக்கக்கூடிய நல்ல அடியார்களாக ஆக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எனக்கும், என் பெற்றோர்களுக்கும், என் ஆசிரியத்தந்தை அனைவருக்கும், முஃமினான, முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் உன் மன்னிப்பைத் தந்து இம்மை, மறுமை இரண்டிலும் உன் அன்பைப் பெற்ற நல்லடியார்கள் கூட்டத்தில் சேர்த்து வைப்பாயாக, ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதிவ் வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

(தென்காசி) வடகரை 627 812 தங்களன்புள்ள
ஹிஜ்ரீ 1408 ரபியுல் ஆகிர் 12 MA.ஷேக்ஹுஸைன்
கி.பி. 1987 டிசம்பர் 4.

பொருளடக்கம்

திருமணம் அவசியம்

وَأَنكِحُوا الْأَيَامَىٰ مِنكُمْ وَالصَّالِحِينَ مِنْ عِبَادِكُمْ وَإِمَائِكُمْ ۚ إِن يَكُونُوا فُقَرَاءَ يُغْنِهِمُ اللَّهُ مِن فَضْلِهِ ۗ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ ﴿٣٢﴾

அல்லாஹுத் தஆலா குர்ஆன் ஷரீபில் கூறுகிறான்; உங்களில் வாழ்க்கைத் துணையில்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும், இன்னும் உங்களிலுள்ள ஆண் அடிமைகள், பெண் அடிமைகளில் நல்லோர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தன்னுடைய அருளைக் கொண்டு அவர்களைச் சீமான்களாக ஆக்கி வைப்பான். அல்லாஹ், (தனது அருளை வழங்குவதில்) விசாலமானவனும், நன்கறிந்தவனுமாக இருக்கிறான்.

(அல்குர்ஆன்.24-32)

இவ்வுலகில் படைக்கப்பட்ட மனிதன், நபியாக இருந்தாலும், இறைநேசத்தைப் பெற்ற வலியாக இருந்தாலும் சாதாரண மனிதனாக இருந்தாலும் மனிதனுக்கு ஏற்படுகின்ற அவசியத் தேவைகளிலிருந்து அப்பாற்பட்டவராக இருக்க முடியாது. பசி, தாகம், உண்பது, உறங்குவது, மலஜலம் கழிப்பது, இன்னும் இதுபோன்ற அவசியத் தேவைகள் ஏற்பட்டே ஆகும். இவை தனக்குத் தேவையில்லை என்று எந்த மனிதனும் கூற முடியாது.

மனிதனுக்கு அவனுடைய வசதிற்கேற்றபடி சக்தி ஏற்படுகிறது.அவனுடைய உணவுக்கேற்றபடி அவனில் இந்திரியம் ஏற்பட்டு இச்சை உண்டாகிறது. மனிதன் நல்லவனாக இருந்தால் தனது இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒரு பெண்ணை ஆகுமான வழியில்

நாடுகிறான். அவன் தீயவனாக இருந்தால் தவறான வழிமூலம் தன் சக்தியை வெளிப்படுத்துகிறான். இதன் காரணமாக தந்தையில்லாக் குழந்தைகள் பிறக்கின்றனர். அவ்வாறு பிறந்த குழந்தைகள், சமூகத்தில் இழிவாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் வளர்ந்து வாலிப வயதை அடைந்த பின்பும் கூட பண்பு இல்லாதவர்களாக நற்குணமற்றவர்களாக, சமுதாயத்தில் பிரச்சினையை உண்டு பண்ணக்கூடிய தீயோர்களாக மாறிவிடுகின்றனர். மேலும் தவறிய பெண்களும் மதிப்பிழந்து சீரழிந்து திரிகின்றனர்.

ஆகவே, திருமணம் செய்து கொள்வது இவ்விதமான இழிநிலைகளிலிருந்து மனிதனைக் காப்பாற்றுகிறது. ஆகையால் அல்லாஹு தஆலா, திருமணம் செய்யுங்கள் என்று கூறுகின்றான்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் திருமணம் செய்து கொள்வது எனது (சுன்னத்) வழிமுறை என்று கூறியுள்ளார்கள்.

திருமணம் செய்து கொள்ளக்கூடிய முறை எல்லா மார்க்கங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள நல்லதொரு பண்பாகும். இது நபிமார்களின் நடைமுறையாகவும் இருக்கிறது.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணத்தைப்பற்றிக் கூறும்போது வாலிபக்கூட்டத்தினரே! உங்களில் திருமணம் செய்து கொள்ள சக்தியுடையோர் திருமணம் செய்துகொள்ளவும். நிச்சயமாக அது அவருடைய (தவறான) பார்வையை மூடக்கூடியதாகவும், கற்பைக் காப்பாற்றக் கூடியதாகவும் இருக்கும். திருமணம் செய்துகொள்ள வசதி இல்லாதவர் நோன்பு நோற்றுக் கொள்ளவும். அதுவே அவருக்கு விதையடிப்பதாகும் எனக் கூறினார்கள். (நூல்: புகாரீ, முஸ்லிம்)

பலதார மணம் விரும்பத் தக்கது

ஆண்களுக்குப் பெண்களை விட அதிக சக்தி உண்டு என்பதை யாரும் மறுத்து விட்முடியாது. ஒரு பெண் தனது 30, 40, வயதிற்குள் பல குழந்தைகளுக்குத் தாயாகி பலவீனமடைந்து விடுகிறாள். இதற்குமேல் அவளால் இன்பமான வாழ்க்கையை கணவனுடன் பகிர்ந்துகொள்ள முடியாமல் ஆகும் நிலைமை ஏற்படுகிறது. ஆனால், இந்த 30, 40 வயதில் ஓர் ஆண் மிக சக்தியுடையவனாக, அதிக இச்சையுடையவனாக இருக்கிறான். இந்தக் காலங்களில் தன்னுடைய இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆகுமான மனைவியை நாடுகிறான். அவளோ பல குழந்தைகளுக்குத் தாயாகி பலவீனமடைந்ததால் கணவனை திருப்திபடுத்த முடியாத நிலையில் இருக்கிறாள்.

ஆகவே, ஓர் ஆண் தன் விருப்பத்தின் பேரில் தன் (ஒரு) மனைவியை அனுபவிக்க முடியாத போது தவறான வழியை நாடுகிறான். அந்தத் தவறான வழியின் மூலம் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கிறான். எப்பொழுது இவன் தன் (ஒரு) மனைவியிடம் பெறமுடியாத இன்பத்தை தவறான வழி மூலம் வேறு பெண்ணிடம் பெற்றுக் கொண்டானோ அப்போதே தன் மனைவியை வெறுக்க ஆரம்பிக்கின்றான். மேலும் தான் உழைத்துத் தேடிய பொருளை பலவீனமடைந்துவிட்ட தன் மனைவிக்கும் மக்களுக்கும் வழங்காமல் தன் இச்சையை நிவர்த்தி செய்யக்கூடிய தவறான பெண்ணுக்கு வழங்குகிறான். இதனால் குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் ஆரம்பிக்கின்றன.

தவறிய பெண் கர்ப்பமடைகிறாள். குழந்தையை பெற்ற பின்பு குழந்தையின் தந்தை யார்? என்று மக்கள் கேட்பார்களே என்று பயந்து, தனது இழிவான செயல்

தெரிந்து விடுமே என்ற பயத்தினால் தான் பெற்ற குழந்தையை, கிணற்றிலும், குப்பைத்தொட்டியிலும் வீசிவிடுகிறாள்.

அல்லது பெற்ற இடத்திலே அங்கும் இங்கும் செல்வதுபோல் பாவனை செய்து குழந்தையை விட்டு விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறிவிடுகிறாள்.

அழகு மிக்க எத்தனையோ குழந்தைகள் விபச்சாரத்தின் மூலம் பிறந்த காரணத்தால் கழிப்பிடங்களிலும் நடைபாதை களிலும் கைவிடப்பட்டிருப்பதை "செய்தித்தாள்கள்" கூறுவதையும் அறிகிறோம்.

இன்று, இந்த உலகம் முழுவதும் மனித எண்ணிக்கையை கணக்கெடுக்கும்போது ஆண்களை விட பெண்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஓர் ஆண் ஒரு பெண்ணைத் தான் மணம் முடிக்கவேண்டும், பலதார மணம் செய்யக்கூடாது! என்றால் பல பெண்கள் இந்த உலகில் வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்கமுடியாத நிலை ஏற்படுகிறது.

இஸ்லாம் கூறுகின்றபடி ஓர் ஆண் தன் சக்திக்கு ஏற்ற முறையில் ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று, அல்லது நான்கு, இந்த முறையில் திருமணம் செய்திருந்து ஒரு மனைவியிடம் முடியாவிட்டாலும் தவறான வழியை நாடாமல் மற்ற மனைவிமார்கள் மூலம் தன் எண்ணத்தை கண்ணியமாக அடைந்து கொள்கிறான். இதனால் தவறான துர்க் குணமுடைய கெட்ட பெண்கள் ஏற்படாம்லிருக்கவும், தவறான, பண்பற்ற குழந்தைகள் பிறக்கக்கூடிய இழிவான நிலையை விட்டும் பாதுகாப்பு கிடைக்கிறது. மேலும் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இருந்து, ஓர் ஆணுக்கு ஒரு பெண் என்ற கட்டாயத்தால் வாழ்க்கையை அனுபவிக்க

முடியாமலிருக்கக் கூடிய பெண்களுக்கும் நல்வாழ்வு கிடைக்கிறது.

மேலும் பெண்களுக்கு ஏற்படுகின்ற பல காரணங்களை கவனிக்கும் போது ஓர் ஆணுக்கு பல மனைவிகள் தேவை என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

பலதார மணத்தை விரும்பிய நாடுகள்

ஓர் ஆணுக்குப் பல மனைவிகள் இருப்பது இஸ்லாத்திற்கு முன்பே உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் ஆகுமென கருதப்பட்டு வந்தது, அரேபியா, இந்தியா, ஈரான், மிஸ்ரு, பாபில் இன்னும் இதுபோன்ற நாடுகளிலுள்ள அனைத்து மக்களுக்கிடையில் பலதார மணம் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது.

(நூல்: மஆரிபுல் குர்ஆன்)

மிஸ்டர் டியூன்பூரட் என்பவர் கிருஸ்துவ அறிஞராவார். இவர், கிருஸ்துவர்களுக்கு அளிக்கப்பட்ட இன்ஜில் வேதத்தில் ஓர் ஆணுக்கு பலதார மணம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததையும் அ ந நடைமுறைப் படுத்துவது அவசியம் என்றும் பல ஆதாரங்களைக் கூறியுள்ளார். அதே கருத்தை ஆதரித்து நிக்ஸன், ஜான் மில்டன், அப்ஜிக் டீலர் போன்ற பாதிரிமார்களெல்லாம் பலதாரமணம் அவசியம் என்பதை வலியுறுத்தி பல ஆதாரங்களைக் கூறியுள்ளார்கள்.

(நூல்: மஆரிபுல் குர்ஆன்)

மத்திய ஆப்பிரிக்காவில் பல மனைவியரை வைத்திருப்பவன் பெரிய செல்வந்தனாகக் கருதப்பட்டான்.

(நூல்: பெண்கள் உலகம்)

பலதாரத்தோடு வாழ்ந்த ஹிந்து கடவுளின் அவதாரங்கள்

ஹிந்து மதத்தினரால் கடவுளின் அவதாரங்கள் என்று கூறக்கூடிய கிருஷ்ணன் இன்னும் மற்றவர்களும் பலதார மணம் செய்து கொண்டதை வரலாற்று நூல்களில் காண்கின்றோம்.

1) ருத்திரருக்கு பத்துப் பெயர்களை சூட்டியதோடு பதினொரு பத்தினிகளையும் பிரம்மதேவர் வழங்கினார். இந்த பதினொரு பத்தினிகளுடன் சேர்ந்து சந்ததிகளை நீர் உண்டு பண்ணும் என்று பிரம்ம தேவர் கட்டளையிட்டார்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்.77)

2) பிரம்ம தேவரின் புதல்வர் மரீசி முனிவருக்கு கசியபர் என்று ஒரு புதல்வர் இருந்தார். அந்த கசியபருக்கு தட்சப் பிரஜாபதி என்பவர் தம் புதல்வியர் பதின்மூவரைத் திருமணம் செய்து கொடுத்தார். கசியபரின் பதின்மூன்று மனைவியரில் திதி என்பவள் ஒருத்தி.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்.82)

3) தக்ஷப் பிரஜாபதி மூலம் பிரஹூதி என்பவள் பதினாறு புதல்வியரைப் பெற்றாள். இந்தப் பெண்களில் பதின்மூன்று பேர்களை தருமத்திற்கும், ஒரு பெண்ணை அக்கினி பகவானுக்கும், மற்றொரு பெண்ணை பிதிருக்களுக்கும், சதி என்னும் புதல்வியைப் பரமசிவனுக்கும் தக்ஷப் பிரஜாபதி திருமணம் செய்து கொடுத்தார்;

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்–110)

4) உத்தானபாதருக்கு சுருசி, சுநீதி என்ற இரு மனைவியர் இருந்தார்கள். சுநீதிக்கு துருவன் என்ற மகனும் சுருசிக்கு உத்தமன் என்ற மகனும் பிறந்தார்கள். சுருசி

என்னும் இளைய மனைவியை உத்தான பாதன் அதிகம் நேசித்தான். துருவனின் தாய் சுநீதியை அவன் நேசிக்கவில்லை

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்–124)

5) துருவன் பிரமி என்பவளையும், இளை என்பவளையும் திருமணம் செய்து கொண்டான். பிரமிக்கு வக்ஸான், கல்பன் என்ற இரு குமாரர்கள் பிறந்தார்கள். இளை என்பவளுக்கு உத்கலன் என்னும் மகனும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்–132)

6) தக்ஷர் ஆறுதல் அடைந்து தன் மனைவியிடம் அறுபது புதல்வியரை உண்டு பண்ணினார். இந்தப் பெண்கள் தங்கள் தந்தை தக்ஷரிடம் பிரியத்தோடு நடந்து கொண்டார்கள். தம் புதல்வியரில் பதின்மரைத் தருமனுக்கும், பதின்மூன்று பெண்களைக் கசியப் பிரஜாபதிக்கும், இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும் திருமணம் செய்து கொடுத்தார். மீதமுள்ளவர்களில் ருத்திரனுக்கு இரண்டும், அங்கிரஸுக்கு இரண்டும் கிருசாச்வருக்கு இரண்டும், மீதமுள்ள பெண்களைத் தார்க்ஷன் எனப்படும் கசியபருக்கும் திருமணம் செய்து கொடுத்தார்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்–184)

7) சூரசேனம் என்னும் நாட்டில் சித்திரகேது என்று ஒரு அரசன் இருந்தான். அவன் விரும்பக்கூடிய அனைத்தையும் பூமாதேவி அவனுக்குக் கொடுத்தாள். அவனுக்கு கோடி மனைவியர் இருந்தனர்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம்–194)

8) சூரசேனன் என்னும் பெயர் கொண்ட அரசன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பரிபாலித்து வந்தான். இவருக்கு வசுதேவன் என்று ஒரு மகன் இருந்தார்.

வசுதேவருக்கு ஏற்கெனவே ரோகிணி உட்பட ஆறு மனைவியர் உண்டு. கடைசியாக அவர் தேவகி என்னும் பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம் –260)

9) கிருஷ்ணன் ருக்மணியை தமது தலைநகரத்துக்கு அழைத்துச் சென்று முறைப்படி திருமணம் செய்து கொண்டார்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம் –316)

10) பகவான் கிருஷ்ணன் முறைப்படி சத்தியபாமாவை திருமணம் செய்து கொண்டார்.

(நூல்: ஸ்ரீமத் பாகவதம் –319)

11) கிருஷ்ணனுடைய மனைவியர் பதினாயிரம் பேருக்கும் தனித்தனியே ஒரு அரண்மனை அந்தப்புரத்தில் இருந்தது

(நூல்: ஸ்ரீமத் பாகவதம் –333)

(மேலே எழுதப்பட்ட 11, குறிப்புகளும், அ.லெ. நடராஜன் அவர்கள் எழுதிய ஸ்ரீமத் பாகவதம் என்னும் நூலிலிருந்து எடுத்தெழுதப்பட்டது. இந்நூலுக்கு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சந்திரசேகர சரஸ்வதி அவர்கள் மதிப்புரையும் எழுதியுள்ளார்கள். (ஸ்ரீமுகம்) மார்கழி 1982–ல் வெளியிடப்பட்டது.)

பலதார மணம் செய்துகொண்ட தலைவர்கள்

மேலும் ஹிந்துக்களுடைய தலைவர்களில் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங்களைச் செய்துள்ளார்கள்.

1. ராம் சுந்தர்ஜீ உடைய தகப்பனார் மகாராஜா தஸ்தரத் என்பவர் மூன்று பெண்களைத் திருமணம் செய்தார்.

2. கிருஷ்ன்ஜீ என்பவர் நூற்றுக்கணக்கான பெண்களைத் திருமணம் செய்தார்.

3. ராஜா பாண்டு என்பவர் இரண்டு பெண்களைத் திருமணம் செய்தார்.

4. ராஜா ஷந்தன் என்பவர் இரண்டு பெண்களைத் திருமணம் செய்தார்.

5. பிஜித்ராயிஜ் என்பவர் இரண்டு மனைவிகளோடும் ஓர் அடிமைப் பெண்ணோடும் வாழ்ந்தார்.

ஆதாரம்: ரஹ்மத்துல் லில் ஆலமீன், பாகம் 2, பக்கம் 156, தாரீகுல் இஸ்லாம், பாகம் 3, பக்கம் 34)

எல்லா மதங்களிலும் உண்டான முக்கியமானவர்களில் அதிகமான பேர் பல திருமணங்களைச் செய்துள்ளார்கள். கடவுளின் அவதாரங்கள் என்று கூறப்படக்கூடிய வேறு பலரும் அவர்களைப் பின்பற்றியவர்களும், ஏன்? பலதார மணத்தை சொல் அளவில் எதிர்க்கக்கூடியவர்கள் கூட செயல்ரூபத்தில் பல மனைவிகளோடு வாழ்ந்து கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

சமீபத்தில் ஐரோப்பிய நாடுகள் தன்னுடைய முந்தைய நிலைகளுக்கு மாற்றமாக (பலதார மணம்), அதை எதிர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். இவர்கள் முயற்சிகளின் காரணமாக ஓர் ஆண் பலதார மணம் செய்வது தடுக்கப்பட்டது. இருப்பினும், இயற்கையான தேவையே அதாவது ஓர் ஆணுக்கு பலதாரம் அவசியம் என்பதே மிகைத்து விட்டது. (நூல்: மஆரிபுல் குர்ஆன்)

பலதார மணத்தை ஒழுங்குபடுத்திய இஸ்லாம்

இஸ்லாத்திற்கு முன்பு பலதார மணம் கட்டுப்பாடு இல்லாமல் இருந்து வந்தது. எந்த நாடும் எந்த சமூகமும் எந்த மதவாசிகளும் இதற்கு ஓர் அளவை நிர்ணயம் செய்யவில்லை. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் கூட இந்த நிலை நீடித்திருந்தது. ஓர் ஆண், தன் இச்சைக்காக பல பெண்களைத் திருமணம் செய்து கொள்வார். ஆனால் அப்பெண்களின் உரிமைகளை நிறைவேற்றமாட்டார். ஆகவே பெண்கள் கைதிகளைப் போன்று நடத்தப்பட்டார்கள்.

இறுதியாக குர்ஆன்ஷரீப், இந்த மிகப் பெரிய இழிநிலையை மாற்றியமைத்து, ஓர் அளவையும் ஏற்படுத்தியது. அதாவது ஒரே காலத்தில் நான்கு பெண்களைவிட அதிகமான பெண்களைத் திருமணம் செய்யக்கூடாது என்றும், திருமணம் செய்யப்பட்ட (நான்கு) பெண்களுக்கு மத்தியில் நீதமாக, சமத்துவமாக நடந்துகொள்ளவேண்டும் என்றும், அப்பெண்கள் ஒவ்வொருவரின் முழு உரிமையும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் குர்ஆன் வலியுறுத்தியது அதற்கு மாற்றம் செய்பவர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் செய்துள்ளது.

மனைவியர்களுக்கு மத்தியில் நீதி, நேர்மை கடைப் பிடிக்கப்படவேண்டும்.

وَاِنْ خِفْتُمْ اَلَّا تُقْسِطُوْا
فِى الْيَتٰمٰى فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِّنَ النِّسَآءِ مَثْنٰى
وَثُلٰثَ وَرُبٰعَ‌ ۚ فَاِنْ خِفْتُمْ اَلَّا تَعْدِلُوْا فَوَاحِدَةً
اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ‌ ؕ ذٰ لِكَ اَدْنٰٓى اَلَّا تَعُوْلُوْا ؕ‏ ﴿۳﴾

அல்லாஹு தஆலா குர்ஆன் ஷரீபில் கூறுகின்றான்;

அனாதைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, அவர்கள் விஷயத்தில் நீதமாக நடக்க முடியாது என்று நீங்கள் பயந்தால் மற்ற பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாகவோ, அல்லது மும்மூன்றாகவோ, அல்லது நான்கு நான்காகவோ நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். (அவ்வாறு பலரைத் திருமணம் செய்தால் அப்போதும் அவர்களுக்கு மத்தியில் நீதமாக நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு) நீங்கள் நீதமாக நடக்க முடியாது என்று பயந்தால்,ஒரு பெண்ணையே, அல்லது உங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் (அடிமைப்) பெண்ணையே, (திருமணம் செய்து) கொள்ளவேண்டியது, நீங்கள் அநீதி செய்யாமலிருப்பதற்கு இதுவே சுலபமான வழியாகும். (அல் குர்ஆன்.4–3)

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இந்த ஆயத்திற்கு பரிபூரணமான முறையில் சந்தேகங்களை

நிவர்த்தி செய்யும் வகையில் விளக்கம் கூறியுள்ளார்கள்.

மேலே கூறப்பட்ட வசனம் அருளப்பட்ட பிறகு ஹழ்ரத் ஹைலான் இப்னு அஸ்லமதுஸ் ஸகபீ என்பவர் இஸ்லாத்தைத் தழுவினார். அந்நேரம் அவரின் கீழ் பத்துப் பெண்கள் மனைவியாக இருந்தார்கள். அப்பெண்களும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அப்பொழுது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவரிடத்தில் நான்கு மனைவியரை மட்டும் வைத்துக் கொண்டு மீதம் உள்ளவர்களை விவாகரத்து செய்து விடும்படி கூறினார்கள். அவரும் அவ்வாறே நடந்து கொண்டார்.

(மிஷ்காத்.247. திர்மிதீ இப்னுமாஜா)

முஸ்னது அஹ்மது என்ற கிரந்தத்தில் இந்த சஹாபி சம்பந்தமாக வேறொரு நிகழ்ச்சியும் கூறப்படுகிறது. அதாவது ஹழ்ரத் ஹைலான் இப்னு அஸ்லமதுஸ் ஸகபீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கட்டளைப்படி நான்கு மனைவியர்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதி மனைவியர்களைத் தலாக் கூறிவிட்டார்கள். பின்பு ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் அந்த நான்கு மனைவிமார்களையும் தலாக்கூறி, தனது அனைத்து சொத்துக்களையும் தன் மக்களுக்குப் பங்கிட்டு கொடுத்து விட்டார்கள்.

இவரது இந்தச் செயல் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தெரிந்தவுடன் அவரை அழைத்து, நீங்கள் உங்கள் மனைவிமார்களுக்குப் பொருள் கிடைக்கக்கூடாது என்பதற்காக அவர்களைத் தலாக் கூறிவிட்டீர்கள். இது மிகப்பெரிய குற்றமாகும். ஆகவே உடனடியாக அந்தப் பெண்களை மீட்டுக்கொண்டு உங்கள் மக்களிடம் கொடுத்த சொத்துக்களைத் திரும்பப்

பெற்றுக்கொள்ளுங்கள். இல்லையேல் உங்களுக்கு கடுமையான தண்டனை கொடுப்பேன் என எச்சரிக்கைச் செய்தார்கள். உடனே அந்த சஹாபி ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உத்தரவை ஏற்றுக் கொண்டு (ரஜயீ) தலாக் விடப்பட்ட தன் (நான்கு) மனைவிமார்களைத் திரும்ப அழைத்துக் கொண்டார்கள்.

ஹழ்ரத் உமைரத்துல் அஸதீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது எனக்கு எட்டு மனைவிமார்கள் இருந்தார்கள். இதை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சொன்னேன். அவர்களில் நான்கு பேரைத் தேர்ந்தெடுத்துக் கொள். (மீதம் உள்ள பெண்களைத் தலாக் கூறிவிடு) என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: இப்னு கஸீர்)

ஹழ்ரத் நவ்Fபல் இப்னு முஆவியதத் தைலமீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; நான் இஸ்லாத்தைத் தழுவியபோது எனக்கு ஐந்து மனைவிகள் இருந்தார்கள். அவர்களில் உனக்கு விருப்பமான நான்கு பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஒரு பெண்ணைத் தலாக்கூறி விடு என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல்: இப்னு கஸீர்)

5வது திருமணம் செய்வோர் மீது இமாம்கள் கூறும் தண்டனை

எவர், தனக்கு நான்கு மனைவிகள் இருந்து ஐந்தாவதாக திருமணம் செய்தால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இமாம்கள் கூறுகின்றனர்.

நான்கு மனைவிகள் (உயிரோடு) இருந்து 5வதாக திருமணம் செய்வது கூடாது என்று அறிந்த ஒருவர் வேண்டுமென்றே ஐந்தாவதாக திருமணம் செய்தால் அவர் மீது ஹத் (குற்றத்திற்குரிய தண்டனை) நிறைவேற்றப்பட வேண்டும் என்று இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் ஷாFபி இய்யி ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகிய இவ்விரு இமாம்களும் கூறுகின்றனர்.

ஐந்தாவதாக வேண்டுமென்றே திருமணம் செய்தவனை கல்லால் அடித்து (ரஜ்மு) கொலை செய்ய வேண்டும் என்று இமாம் ஜுஹ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

(நூல்: தப்ஸீர் குர்துபீ)

யார் மதக் கோட்பாடுகளையும் பேணுதலான வாழ்க்கை முறைகளையும் நிலைநாட்ட விரும்புகிறார்களோ, இன்னும் உலகிலிருந்து விபச்சாரத்தை முற்றிலும் ஒழித்துவிட விரும்புகிறார்களோ அவர்கள் பலதாரமணத்தை செயல்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை. பலதார மணத்தால் விபச்சாரம்' முற்றிலும் நீக்கப்படுகிறது.

எந்த சமூகத்தில் பலதார மணம் அனுமதி அளிக்கப்படவில்லையோ அங்கு விபச்சாரம் பெருகி யுள்ளதைப் பார்க்கலாம். ஐரோப்பியர்களில் பலதார மணம் மறுக்கப்பட்டதால் அங்கு விபச்சாரம் சர்வ சாதாரணமாக நடந்த கொண்டு இருக்கிறது. இந்த இழிநிலையைப் பார்த்தும்கூட இவர்கள் ஆகுமான வழியில் உண்டான பலதார மணத்தை வெறுக்கிறார்கள். ஆகாத விபச்சாரம் பெருகுவதை வெறுக்காமல் ஆதரிப்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். இது எவ்வளவு பெரிய வேடிக்கையாக இருக்கிறது.

(நூல்: தப்ஸீர் மஆரிபுல் குர்ஆன்)

சந்தேகமும் அதற்குப் பதிலும்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்ததை இஸ்லாத்தின் விரோதிகள், குறுகிய அறிவு படைத்தவர்கள் குறை கூறுகின்றனர். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் நுபுவ்வத் (அல்லாஹ்வின் ரஸூலாக-தூதராக இருப்பது) விஷயத்திலும் அவர்களின் உயர்ந்த அந்தஸ்திலும் குறை கூறுவதையும், பல பொய்யான வீணாண வாதங்களைச் செய்வதையுமே தொழிலாகக் கொண்டவர்கள், உண்மை, சத்தியம் இது என்று தெளிவாக தெரிந்தும்கூட அதை ஏற்க மறுக்கக் கூடிய இஸ்லாத்தின் விரோதிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் திருமண விஷயத்தின் உண்மை நிலையை அறிந்தும் அதை மறைத்தும், தவறான அர்த்தமற்ற வாதங்களைப் பேசுகிறார்கள்.

இவர்களின் இந்த அற்பமான வாதத்தின் மூலம் உண்மையான முஸ்லிம்களை குழப்பதிலாழ்த்துவதற்காகவும், மற்ற மனிதர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கொண்டு ஈமான் கொள்ளாமலிருப் பதற்காக வேண்டியும் இவ்வாறு பேசுகின்றனர்.

குதர்க்கம் செய்யக்கூடிய இவர்களின் வார்த்தைகளைக் கேட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் முன்சென்ற எல்லா நபிமார்களையும் அவர்களின் உன்னத வழிமுறையை ஏற்க முடியாத அன்றைய இஸ்லாத்தின் விரோதிகள் பல குறைகளையே கூறிவந்துள்ளனர்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும் ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதிகளாக நாம் ஆக்கியிருந்தோம். அவர்களில் சிலர் மற்றவரை ஏமாற்றும் பொருட்டு, அலங்காரமான வார்த்தைகளை இரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தனர். (நபியே)! உம்முடைய இறைவன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்து இருக்க மாட்டார்கள். எனவே அவர்களையும் அவர்கள் கூறும் பொய்க் கற்பனைகளையும் விட்டு விடுவீராக! (அல்குர்ஆன்.6–112)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்ததில் உண்டான உயர்ந்த தத்துவங்களை உண்மை முஸ்லிம்களாகிய நாம் அறிந்திருந்தால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது இட்டுக் கட்டக்கூடிய இஸ்லாத்தின் விரோதிகளான பொய்யர்களுக்கு நாம் பதில் சொல்ல முடியும்.

குறுகிய அறிவுடையோர் கூறுகின்றனர், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் காம இச்சையுடைய மனிதர். ஒரு திருமணத்திற்கு மேல், அவரது சஹாபாக்களுக்கு நான்கு பெண்களைத் திருமணம் செய்யலாம். அதற்கு மேல் திருமணம் செய்யக்கூடாது என்று கூறி, தான் மட்டும் நான்கிற்கு மேல் 10 அல்லது அதைவிட அதிகமான பெண்களைத் திருமணம் செய்து தனது இச்சையை நிறைவேற்றிக் கொள்கிறார்!

மேலும் நபீ ஈஸா அலைஹிஸ் ஸலாம், ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், இவ்விருவர்களுக்கு மத்தியில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. அதாவது நபீ ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மனோ இச்சையை அடக்கியவர் என்றும் நபீ

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் காம இச்சைக்காக பல திருமணம் செய்தார்கள் என்றும் இஸ்லாத்தின் விரோதிகளான பொய்யர்கள் கூறுகின்றனர்.

உண்மையை மறுக்கும் பொய்யர்கள்

அல்லாஹு ஆலா குர்ஆன் ஷரீபில் கூறுகின்றான்:

مَا لَهُمْ بِهِ مِنْ عِلْمٍ وَّلَا لِاٰبَآئِهِمْ ؕ كَبُرَتْ كَلِمَةً تَخْرُجُ مِنْ اَفْوَاهِهِمْ ؕ اِنْ يَّقُوْلُوْنَ اِلَّا كَذِبًا

(பொய்யர்களான) அவர்களுக்கோ, இன்னும் அவர்களுடைய மூதாதையர்களுக்கோ இதைப்பற்றி எவ்வித அறிவுமில்லை. அவர்களுடைய வாய்களிலிருந்து புறப்படும் (இந்த) வார்த்தைகள் பெரும் பாபமானதாகும். அவர்கள் கூறுவது பொய்யேயன்றி வேறில்லை.

(அல் குர்ஆன்.18–5)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பெண்கள் மீது இச்சையுள்ள மனிதராக இருக்கவில்லை. நான் (முஹம்மது) உங்களைப் போன்ற மனிதனே (18–110).

எனவே மனித தேவைகளை நிறைவு செய்பவனே மனிதனாவான். உண்பது, உறங்குவது குடும்ப வாழ்க்கை போன்ற மனித தேவைகளை நிறைவு செய்யாதவன்–நிறைவு செய்யும் தேவை இல்லாதவன் உண்மையில் மனிதனாக இருக்க மாட்டான். மாறாக மலக்காகத்தான் இருக்க முடியும். ஆகவே மனிதனுக்கு தேவையான குடும்ப வாழ்க்கையை பொதுவான மனிதனைப் போன்று பல இலட்சியங்களுக்காக மனம் முடித்து வாழ்ந்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்களின் வாழ்க்கை அழகிய முன்மாதிரி

நபீ ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் இஸ்லாத்தின் அனைத்து கடமைகளை சொல்லாலும் செயலாலும் உலக மக்களுக்கு விளக்கி காட்டியுள்ளார்கள். மனிதனின் வாழ்க்கையின் எந்த துறையானாலும். குடும்ப வாழ்க்கை, பொது வாழ்க்கை, இறைவணக்கம் போன்ற அனைத்து அம்சங்களிலும் நபீ ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் மக்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். இந்த உம்மத்துக்கு தேவையான கணக்கற்ற சட்டங்கள் நபீ ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் மூலமே கிடைத்துள்ளன.

சத்தியத்தின் வழியை உலக மக்கள் முழுமையாக பின்பற்றி நடக்கவேண்டும் என்பதற்காக பல சூழ்நிலையில் பல பெண்களை நபீ ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்தார்கள். கிருஸ்துவர், தங்கள் நபியை தேவ குமாரர் என்று (தவறாக) சொல்வது போன்று பெருமானார் ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் கடவுளாகவோ, கடவுளின் குமாரராகவோ இல்லை. மற்ற மனிதர்களைப் போன்று மனிதர்தான் . ஆனால் சராசரி மனிதனைப் போன்று இல்லை. அல்லாஹுˉ தஆலா பெருமானார் ஸல்லல்லாஹுˉ அலைஹி வ ஸல்லம் அவர்களை தனது இறுதி நபியாக ஆக்கியதைக் கொண்டும், குர்ஆன் ஷரீபை அருளியும், இன்னும் பல அற்புதங்களைக் கொடுத்தும் சிறப்பாக்கியுள்ளான்.

பல திருமணங்கள் செய்து கொண்ட நபிமார்கள்

முன் சென்ற நபிமார்களின் வாழ்க்கைக்கு மாற்றமாக எந்த நூதன வாழ்க்கையையும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வாழவில்லை. முன் சென்ற நபிமார்கள் பல திருமணங்கள் செய்தார்கள். அதைப் போன்றுதான் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் பல திருமணங்கள் செய்தார்கள். முன் சென்ற நபிமார்கள் பல திருமணங்கள் செய்தார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். ஆனால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது இட்டுக்கட்டக் கூடிய பொய்யர்கள் உண்மையை மறைத்துப் பொய் பேசுகிறார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்;

وَلَقَدْ اَرْسَلْنَا رُسُلًا مِّنْ قَبْلِكَ وَجَعَلْنَا لَهُمْ اَزْوَاجًا وَّذُرِّيَّةً ؕ

(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பிவைத்தோம். அவர்களுக்கும் மனைவியரையும் சந்ததிகளையும் நாம் ஏற்படுத்தியிருந்தோம்.

(அல் குர்ஆன். 13–38)

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல திருமணங்கள் செய்ததை யூதர்கள் பழித்துக் கூறினார்கள். இவர்கள் (முஹம்மது) கூறுவது போல், தான் நபியாக இருந்தால் பெண்ணாசை, உலகாசையிலிருந்து விலகி, சதாவும் தனது கொள்கையை எடுத்துக் கூறுவதில் அல்லவா

இருக்க வேண்டும்? என்றும் கூறினார்கள். அவர்களின் தவறான இக்கூற்றுக்கு மறுப்பாகவே அல்லாஹு தஆலா மேற்கூறப்பட்ட ஆயத்தை இறக்கி வைத்தான்.

பலதார மணத்தை இழிவாகக் கூறக்கூடிய யூதர்கள் அவர்களிடம் அனுப்பப்பட்ட நபீ இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம், நபீ மூஸா அலைஹிஸ் ஸலாம், நபீ தாவூது அலைஹிஸ் ஸலாம், நபீ சுலைமான் அலைஹிஸ் ஸலாம் ஆகிய நபிமார்களெல்லாம் தாங்கள் நபிமார்களாக இருந்தும் பல திருமணங்களைச் செய்து வாழ்ந்துள்ளார்கள்.

நபீ இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மூன்று பெண்களைத் திருமணம் செய்துள்ளார்கள்.

நபீ யஃகூப் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்துள்ளார்கள்.

நபீ மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நான்கு பெண்களைத் திருமணம் செய்துள்ளார்கள்.

நபீ தாவூது அலைஹிஸ் ஸலாம் அவர்கள் 9 பெண்கள் அதைவிட அதிகமாகவும் திருமணம் செய்துள்ளார்கள்.

(நூல்: தாரீகுல்இஸ்லாம். பாகம்3, பக்கம்34)

மஞ்சக் காமாலை நோயினால் பீடிக்கப்பட்டவனுக்கு அவன்பார்க்கும் பொருளெல்லாம் அவனுக்கு மஞ்சளாகவே தெரியும். இதைப்போன்று எதைப் பார்த்தாலும் தீய எண்ணத்தோடு பார்த்துப் பழக்கப்பட்ட தீயோர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உயர்ந்த நடைமுறையைப் பார்த்தாலும் அத்தீயோர்களுக்குத் தவறாகவே தெரியும்.

அல்லாஹுஆலா கூறுகின்றான்;

நிச்சயமாக (அநியாயம் செய்யக் கூடியவர்களின் புறக்) கண்கள் குருடாகவில்லை. எனினும் நெஞ்சுள்ளே இருக்கும் இதயங்(அகக்கண்)கள் தாம் குருடாகின்றன.

(அல் குர்ஆன். 22-46)

சந்தேகத்திற்கு மறுப்பு

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்ததில் அற்புதமான இரண்டு கருத்துகளைக் கவனித்துப் பார்த்தால் இஸ்லாத்தின் விரோதிகள் உண்மை நிலையை விளங்கிக் கொள்ள முடியும். அவ்விரண்டு கருத்துக்களையும் அலட்சியமாக கருதாமல் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

ஒன்று: பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வயோதிக வயதை அடைந்த பின்புதான் அதாவது 50, வயதிற்குப் பின்பு தான் பல பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். மனிதனின் காம இச்சையின் உச்சநிலை சரியான வாலிப வயதான 25 முதல் 35 வரைதான். ஆனால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோ இக்கால கட்டத்தில், முன்பு இரு தடவை மணமுடிக்கப்பட்டு குழந்தைகள் பெற்று கிட்டத்தட்ட ½ கிழவியான ஓர் மாது அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மட்டுமே மணமுடித்து வாழ்ந்து வந்தார்கள்.

இரண்டு: பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் எல்லா மனைவிமார்களும் விதவைகளே. ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தவிர.

இந்த அற்புதமான இரண்டு கருத்துக்களினால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்

மீது தீயோர்கள் கூறக்கூடிய கருத்து தவறு என்பதை உணர முடியும்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வாழ்க்கையின் அனைத்து செயல்களும் மக்கா வ⁻ சிகளுக்கு நன்கு தெரியும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்;

நாம் எவர்களுக்கு வேதத்தை வழங்கினோமோ அவர்கள் தங்களுடைய மக்களை நன்கறிவதுபோல் (நமது தூதரான) அவரை (முஹம்மதை) நன்கறிவர்.

(அல் குர்ஆன்: 2–146)

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த தவ்ஹீதை (ஏகத்துவம்) எதிர்த்த கடும் விரோதிகள் கூட நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை கவிஞர், சூனியக்காரர், பைத்தியக்காரர் என்று சொன்னார்களே தவிர, இவர் இறையச்சத்திற்கு மாற்றமாக பல பெண்களைத் திருமணம் செய்தார் என்றோ, இச்சைக்கு அடிமைப்பட்டு பலதார மணம் செய்தார் என்றோ கூறியது இல்லை. அவ்வாறு கூறுவதற்கு அவர்களுக்குத் தைரியம் வரவில்லை. வாலிபத்தின் அனைத்துக் கட்டங்களையும் இறை வணக்கத்திற்காக செலவிட்டு வாழ்க்கையின் இறுதி கட்டத்தில் பல காரணங்களுக்காக பல திருமணங்கள் செய்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மனோஇச்சைக்காக, பல பெண்களைக் கொண்டு இன்பம் அனுபவிக்கவேண்டும் என்பதற்காக பல திருமணம் செய்தார்களென்றால் தங்கள் வாலிப வயதில் பல திருமணம் செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்களோ 50 வயதிற்கு மேல் தான் பல பெண்களைத் திருமணம் செய்தார்கள். மேலும்

கன்னிப் பெண்களைத் திருமணம் செய்யாமல் விதவைப் பெண்களையே திருமணம் செய்து கொண்டார்கள்.

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்கள் மீது நறுமணத்தின் அடையாளம் இருக்கும் நிலையில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்: ஜாபிரே! திருமணம் செய்தீர்களா?

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு: ஆம்!

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்: கன்னிப் பெண்ணா? விதவைப் பெண்ணா?

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு: விதவைப் பெண்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்: கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்திருக்கக் கூடாதா? நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சல்லாப விளையாட்டு விளையாடுவீர்களே! ஒருவருக்கொருவர் சிரித்துக் கொள்வீர்களே! என்றார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் தோழரான ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கன்னிப்பெண்ணைத் திருமணம் செய்திருக்கக் கூடாதா? என்று கேட்டிருக்கிறார்கள்.

கன்னிப்பெண் மூலம் எப்படிப்பட்ட இன்பம் கிடைக்கும் என்பதும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கன்னிப்பெண்களைத் திருமணம் செய்யாமல் விதவைப் பெண்களையே திருமணம் செய்தார்கள். பல திருமணத்தின் மூலம் இன்பமே

நோக்கமாக இருந்திருந்தால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எப்படிப்பட்ட பெண்களைத் திருமணம் செய்திருப்பார்கள்?

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், உடல் இச்சையை மட்டும் நோக்கமாகக் கொண்டு பலதார மணம் செய்ததாகக் கூறுவதானால் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஏககாலத்தில் பத்து மனைவிகள் மட்டுமல்ல! இன்னும் பல மனைவிகள் தேவைப்படுமென்ற முடிவுக்கு வரவேண்டியதிருக்கும்.

அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மருமகனார் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உடல் வலிமை பற்றி பிரசித்தம். தாயிப் கோட்டையின் வாயில் கதவு சாதாரணமாக 40 நபர்களால் மட்டுமே ஒன்று கூடி தூக்குமளவு கனம் உள்ளதை ஹழ்ரத் அலீ அவர்கள் தங்கள் இரு கரங்களால் தூக்கி கழட்டி விட்ட விந்தையை வரலாற்றில் காணும் நாம், அவர்களின் திருவாயால் கூறுகின்றார்கள், "அண்ணல் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை அன்புடன் கட்டி அணைப்பார்களானால் எனது விலா எலும்புகள் நொறுங்குவது போன்ற வலியின் உணர்வு பெறுவேன்" என்று கூறுகிறார்கள். அன்புடன் அணைப்பது என்பது தனது பலத்தை காட்டியல்ல; இலேசாக அணைப்பதே! இந்த அணைப்புக்கு இவ்வித நிலை என்றால்!!!

அண்ணல் நாயகத்தின் உடல் வலிமையை இந்த நிகழ்ச்சியின் மூலம் சிந்தித்துப் பார்ப்போமானால் எத்தனை நபர்களின் உடல் பலம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்! எத்தனை நூற்றுக் கணக்கான மனைவிகளுடன் குடும்பம் நடத்தி இருக்க வேண்டும்!!

சங்கைக்குரிய உத்தம சஹாபாக்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்காக தங்களின் உயிரைக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தார்கள். அப்படிப்பட்ட அந்த சஹாபாக்களிடம் தங்களுக்கு அழகான பெண் வேண்டும் என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கேட்டிருந்தால், ஏன் சமிக்ஞை மூலமாகவது அறிவித்திருந்தால் அரபு நாட்டிலேயே அழகான கன்னிப் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்திருப்பார்கள்!

ஆகவே இந்தக் காரணங்களையெல்லாம் அறிவுள்ள மனிதன் சிந்தித்துப் பார்த்தால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது இஸ்லாத்தின் விரோதிகளால் சொல்லப்படுகின்ற தீய கருத்துகளெல்லாம் அப்பட்டமான பொய் என்பது தெளிவாகத் தெரியும்.

ஆகவே, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்தது நல்ல முடிவுகளுக்காகவே, அவதூறு கூறக்கூடிய இஸ்லாத்தின் விரோதிகள் தங்களது குருட்டுத்தனமான பிடிவாதங்களை விட்டுவிட்டு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்ததில் உயர்ந்த இலட்சியம் இருப்பதையும் தங்களது சுகங்களை மற்றவர்களுக்காக அற்பணித்து இஸ்லாத்தின் நல்லதொரு இணக்கத்திற்காகவே பல திருமணங்கள் செய்தார்கள், என்பதை எதிரிகள் (சிந்தித்தால்) உணர்வார்கள். பல திருமணம் செய்ததின் மூலம் எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மனித சமுதாயத்திற்கு சிறப்பையும் உயர்வையும் கொடுத்தார்கள்.

(அல்லஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதிவ் வ அலா ஆலி ஸய்யிதினா முஹம்மதிவ் வ பாரிக் வ ஸல்லிம் அலைஹி)

எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் செய்து கொண்ட பல திருமணங்களின் தத்துவம்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல பெண்களைத் திருமணம் செய்ததில் எத்தனையோ தத்துவங்கள் இருக்கின்றன. அவைகளை சுமார் நான்கு தத்துவங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

1) கற்றுக் கொடுத்தல் என்ற தத்துவம்.

(பெண் சமுதாயத்திற்கு பல ஆசிரியைகளை உருவாக்குதல்)

2. சன்மார்க்க வழியை ஏற்படுத்துதல் என்ற தத்தவம்.

3. கூட்டு வாழ்க்கை என்ற தத்துவம்.

4. மனிதர்களுக்கு மத்தியில் அன்பை ஏற்படுத்துதல் என்ற தத்துவம்.

1. கற்றுக் கொடுத்தல் என்ற தத்துவம்

(பெண் சமுதாயத்திற்கு பல ஆசிரியைகளை உருவாக்குதல்)

இந்த உலகத்தில் ஆண்களைப் போன்று சரிபங்கு பெண்களும் வாழ்கின்றனர். அல்லாஹு தஆலா ஆண்களுக்கு எவ்வாறு கடமைகளை ஏற்படுத்தியிருக்கின்றானோ அதைப் போன்று பெண்களுக்கும் கடமைகளை ஏற்படுத்தியுள்ளான்.

ஆண்கள் மார்க்கச் சட்ட திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. மேலும் சிக்கலான சில விஷயங்களையும் ஆண்கள் தெளிவாக கேட்டு தெரிந்து கொள்வார்கள். ஆனால் பெண்கள், மார்க்கச் சட்டதிட்டங்களைத் தெரிந்து கொள்வதற்குண்டான சந்தர்ப்பங்கள் மிகக்குறைவே, ஆண்களுக்கு உள்ளது போன்ற சூழ்நிலை பெண்களுக்குக் கிடையாது. மேலும் பெண்கள் அதிக வெட்கமுடையவர்கள். அல்லாஹு தஆலா பெண்களுக்கென்று குறிப்பாக சில கடமைகளை ஏற்படுத்தியுள்ளான். அவைகளைப் பற்றி தெளிவாக கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஆண்களே வெட்கப்படும்போது பெண்கள் எவ்வாறு வெட்கப்படாமலிருப்பார்கள்?

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சஹாபாக்களுக்கு மார்க்கச் சட்டங்களை சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு சொல்லிக்கொண்டே வந்தார்கள். அதைப் போன்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பெண்களுக்கும் அவர்களுடைய கடமைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். பெண்களுடைய சில குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி மார்க்க ரீதியில் தெரிந்து கொள்வதற்கு சாதாரணமாக ஆண்களே வெட்கப்படும்போது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எவ்வாறு வெட்கப் படாமலிருப்பார்கள்! ஆகையால் அப்படிப்பட்ட சில விஷயங்களைத் தங்கள் மனைவியர்கள் மூலம் கூறுவார்கள்.

ஹழ்ரத் அபூசயீது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்;

திரைக்குள் இருக்கும் கன்னிப் பெண்கள் வெட்கப்படுவதை விட பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அதிகமான வெட்கமுடையவர்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அதிகமான வெட்கமுடையவர்களாக இருந்த காரணத்தால் பெண்களின் சில சட்டங்களைப் பெண்கள் விளங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் பெண் சமுதாயம் கூச்சமின்றி அவர்களுடைய சட்டங்களை தெரிந்து நடப்பது அவர்களுடைய கடமை. ஆகையால் பெண்கள் தங்கள் கடமைகளை தெளிவாக தெரிந்து கொள்வதற்காக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், சில பெண்களைத் தங்களுக்கு மனைவிகளாக்கி, மனைவி மார்களுக்கு மார்க்கத்தின் அனைத்துக் கடமைகளையும் கற்றுக் கொடுத்து, அவர்கள் மூலம் பெண் சமுதாயத்தில் பல ஆசிரியைகளை ஏற்படுத்தினார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்;

ஓர் அன்சாரிப் பெண்மணி, பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம், பெண்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் எவ்வாறு சுத்தம் செய்வது? என்று கேட்டார். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சுத்தம் செய்யும் முறையைப் பற்றி சொன்னார்கள்; சுத்தமான நறுமணமுள்ள துண்டுத்துணியைக் கொண்டு அவ்விடத்தைச் சுத்தம் செய் என்றார்கள். அதைக் கொண்டு எப்படி சுத்தம் செய்வது என்று அப்பெண் கேட்டார். அதைக்கொண்டு சுத்தம் செய்! என்றார்கள். மீண்டும் (அப்பெண்) யா

ரஸூலல்லாஹ்! எப்படி சுத்தம் செய்வது என்று கேட்டார். சுப்ஹானல்லாஹ்! அதைக்கொண்டு சுத்தம் செய்! என்றார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எவ்வளவோ திரும்பத் திரும்பச் சுத்தம் செய்! என்று சொல்லியும் அப்பெண் விளங்கவில்லை. ஆகையால் நான் அப்பெண்ணை அங்கிருந்து அழைத்துக் கொண்டு சுத்தமான துண்டுத் துணியை "அவ்விடத்தில்" வை, இப்படி சுத்தம் செய், இரத்தம் வரும்போது அத்துணியைக்கொண்டு சுத்தம் செய்து கொள்! என்று சொல்லி துணி வைக்கும் அவ்விடத்தைத் தெளிவாகச் சொன்னேன். இதற்குப் பின்புதான் அப்பெண் விளங்கிக் கொண்டார் என்று ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

இதுபோன்ற மார்க்கச் சட்டங்களை மிகத் தெளிவாக பெண்கள் ஆண்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வெட்கப்படுவார்கள். ஆண்களும் தெளிவாக விளக்கிக் கூற முடியாது. ஆனால் இதை ஒரு பெண் அறிந்து அவர் மூலம் மற்ற பெண்கள் விளக்கம் பெறுவது மிக இலேசாகும்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்; அல்லாஹு தஆலா அன்சாரிப் பெண்களுக்கு கிருபை செய்வானாக! மார்க்க விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு அன்சாரிப் பெண்களுக்கு அவர்களின் வெட்கம் தடையாக இருக்கவில்லை.

அன்றைய காலத்தில் அன்சாரிப் பெண்கள் இரவின் இருளையும் பொருட்படுத்தாமல் மார்க்க விஷயங்களைத்

தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காக (ஹைலு) மாத விலக்கு, (நிபாஸ்) பேருகாலத் தீட்டு, (ஜனாபத்) பெருந்துடக்கு. இன்னும் மார்க்கச் சட்டங்களையெல்லாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்காக அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் வருவார்கள். இவ்வாறு மார்க்க விஷயங்களில் விளக்கம் தேடிவரக் கூடிய பெண்களுக்கு அருமை நபியின் மனைவியர்கள் அன்போடு வரவேற்று சிறந்த ஆசிரியைகளாக இருந்து கற்றுக் கொடுத்தார்கள்.

உண்மையில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவியர்களாக இருந்து அவர்களிடம் நேரடியாக மார்க்க விஷயங்களைத் தெரிந்து கொண்ட அன்னாரது மனைவியர்கள் அல்லாஹு தஆலாவின் தீன் விஷயத்தில் தலைசிறந்த அறிஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய வழிமுறை அவர்களுடைய சொல் மட்டும் இல்லை. மேலும், அருமை நபியின் சொல், செயல், ஆமோதிப்பது இவைகள் மூன்றும் சேர்ந்ததுதான், பெருமானார் ஸல்ல்ல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய வழிமுறைகளை இந்த உம்மத், முழு உலகமும் பின்பற்றுவது கடமையாக இருக்கிறது. ஆகையால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களது வாழ்க்கையைப் பற்றி அவர்களது மனைவிமார்களை விட வேறு யார் அறிந்து அதை பிறருக்கு அறிவிக்க முடியும்? அல்லாஹு தஆலா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் மூலம் இந்த

உம்மத்துக்கு மிகப் பெரிய உபகாரம் செய்துள்ளான். அவர்கள் திறமை மிக்க ஆசிரியைகளாக இந்த உலகிற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய சொல்லையும் செயலையும் மிகத் தெளிவாக சொல்லக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலமாக இந்த உம்மத்திற்கு 2210 ரிவாயத்களும், ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலமாக 378 ரிவாயத்களும், இன்னும் பல ரிவாயத்துகள் மற்ற மனைவிமார்கள் மூலமும் இந்த உம்மத்துக்கு கிடைத்துள்ளது.

2. சன்மார்க்க வழியை ஏற்படுத்துதல் என்ற தத்துவம்

அறியாமைக் காலத்திலிருந்த சில தவறான வழிமுறைகளை மாற்றுவதும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய திருமணங்களின் தத்துவமாகும். அறியாமைக் காலத்தில் அரபியர்கள் தங்களுக்குப் பிறக்காத மற்றவர்களின் பிள்ளைகளை வளர்ப்புப் பிள்ளைகளாக எடுத்துக் கொள்வார்கள். சொத்தில் பங்கு, உறவின் முறை, தலாக் இவ்வாறாக அனைத்துக் காரியங்களிலும் வளர்ப்புப் பிள்ளைகளை தங்களுடைய பிள்ளைகள் மூலம் என்னென்ன உறவு முறை ஏற்படுமோ அதைப் போன்று கருதி வந்தார்கள். வளர்ப்பு மகனைப் பார்த்து “நீ என் மகன்” “நான் உன் தந்தை” என் சொத்தில் உனக்குப் பங்கு உண்டு, உன் சொத்தில் எனக்கு பங்கு உண்டு. இவ்வாறு கூறுவார்கள். தன் பிள்ளைக்கு தன் மூலம் என்னென்ன சாதக, பாதகம்

ஏற்படுமோ அதைப் போன்று வளர்ப்புப் பிள்ளையையும் கருதி வந்தார்கள். இந்தப் பழக்கம் அரபு உலகம் முழுவதும் பரவி இருந்தது.

இந்த தவறான வழிமுறையை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. இஸ்லாம் மார்க்கம் இறுதியான மார்க்கம். உலகம் உள்ளவரை நிலைத்திருக்கக்கூடிய இம்மார்க்கத்தின் மூலம் அரபியர்களின் வளர்ப்புப் பிள்ளை விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க அல்லாஹ் நாடினான். ஆகையால் சர்வ வல்லமை படைத்த அல்லாஹு தஆலா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை நபியாக ஏற்படுத்துவதற்கு முன்பே ஹாரிதா உடைய மகன் ஜைது என்பவரை வளர்ப்பு பிள்ளையாக ஆக்கினான். அல்லாஹு தஆலாவின் நாட்டத்தின் பிரகாரம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஜைது என்பவரை வளர்ப்புப் பிள்ளையாக ஆக்கிக்கொண்டு அரபியர்கள் எவ்வாறு வளர்ப்புப் பிள்ளை விஷயத்தில் எதைக் கையாண்டார்களோ அதையே பின்பற்றி "ஜைதே நீ என் மகன் நான் உன் தந்தை" என்று சொன்னார்கள். இதனால் அரபியர்க்ள் தங்களின் வழமையைப்போல் ஜைது இப்னு முஹம்மது (முஹம்மதுடைய மகன் ஜைது) என்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் மாமி மகள் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இவ்விருவரும் சில காலமே சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

இவர்களுக்கு மத்தியில் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி தொடரவில்லை. ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள். ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஒரு காலத்தில் அடிமையாக இருந்தவர்கள் (ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குச் சொந்தமான பிறகு உரிமை பெற்றார்கள்). ஆகையால் தன்னுடைய அந்தஸ்தை விட குறைவாக இருந்த ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சேர்ந்து வாழ்வதற்கு விரும்பவில்லை.

ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கடினமான வார்த்தைகளாலும் பேசுவார்கள். இவ்வாறாக இவ்விருவரும் மகிழ்ச்சியின்றி வாழ்ந்தபோது அல்லாஹு தஆலாவின் நாட்டத்தின் பேரில் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை (தலாக்) விவாகரத்து செய்துவிட்டார்கள்.

ஜைது என்பவர் (நபியே) உங்களுக்கு உண்மையான மகனாக இருக்க முடியாது. ஆகையால் இதற்கு முன் ஜைனப் என்பவர் உங்களுக்கு மருமகளாக இருக்க முடியாது என்று அல்லாஹ் கூறினான். அறியாமை காலத்திலிருந்த தவறான (அதாவது வளர்ப்பு மகன் தன் மகனைப்போல. அவரின் மனைவி உண்மையான மருமகள் என்ற) வழிமுறையை மாற்றுவதற்காக அல்லாஹு தஆலா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தங்கள் மாமிமகள் தலாக் விடப்பட்ட ஜைனப்

அவர்களைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறினான்.

ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து கொண்டால், நயவஞ்சகர்கள், தீயோர்கள், முஹம்மது தன் (வளர்ப்பு மகனின் மனைவி) மருமகளை திருமணம் செய்து கொண்டார் என்று பழிச்சொல் பேசுவார்களே, என்று நினைத்து தயங்கினார்கள், பயப்பட்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மன(பயம்) நிலையை அறிந்த அல்லாஹு தஆலா,

وَتَخْشَى النَّاسَ وَاللَّهُ أَحَقُّ أَنْ تَخْشَاهُ

நபியே! மனிதர்களுக்குப் பயப்படுகிறீர். ஆனால் அல்லாஹ் தான் நீர் பயப்படுவதற்குத் தகுதியானவன்.

(அல் குர்ஆன் 33–37)

இந்த திருவசனத்தின் மூலம், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பயத்தைப் போக்கி. அல்லாஹு தஆலாவே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து வைத்தான்.

அல்லாஹ் கூறினான்,

فَلَمَّا قَضٰى زَيْدٌ مِّنْهَا وَطَرًا زَوَّجْنٰكَهَا لِكَىْ لَا يَكُوْنَ عَلَى الْمُؤْمِنِيْنَ حَرَجٌ فِىْۤ اَزْوَاجِ اَدْعِيَآٮِٕهِمْ اِذَا قَضَوْا مِنْهُنَّ وَطَرًا ؕ وَكَانَ اَمْرُ اللّٰهِ مَفْعُوْلًا ۝

ஆகவே ஜைது (மனம் மாறித் தன் மனைவியாகிய) அவளை விவாகரத்து செய்துவிட்ட பின்னர் நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம். ஏனென்றால் முஃமினீன்கள், தங்களால் வளர்க்கப்பட்டவர்கள், தங்கள் மனைவிமார்களை விவாகரத்து செய்து விட்டால் (அவர்களை வளர்த்த)வர்கள் அப்பெண்களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக்கூடாது என்பதற்காக (இது) நடைபெற்றே தீரவேண்டிய அல்லாஹ்வின் கட்டளையாக இருந்தது.

(அல் குர்ஆன் 33-37)

அல்லாஹு தஆலாவின் அற்புதமான இந்த தத்துவத்திற்குப் பின் “வளர்ப்பு மகன் தன் மகன்” என்ற அரபியர்களின் தவறான வழிமுறை ஒழிக்கப்பட்டது. அல்லாஹு தஆலா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மூலம் வளர்ப்பு மகன் பிரச்சனையில் அறியாமை காலத்திலிருந்த தவறான வழிமுறையை ஒழித்துவிட்டு உறுதியான நல்வழியை ஏற்படுத்தினான்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்; பெருமானார்

ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அடிமையாக இருந்து உரிமை பெற்ற ஹாரிதா உடைய மகன் ஜைது என்பவரை "முஹம்மதுடைய மகன் ஜைது" என்று நாங்கள் சொல்லிக் கொண்டு இருந்தோம். நீங்கள் (எடுத்து வளர்த்த) அவர்களை அவர்களின் தந்தையர்களின் பெயர்களைச் சொல்லி (இன்னாரின் பிள்ளையென) அழையுங்கள். அதுவே அல்லாஹு தஆலாவிடம் நீதமுள்ளதாக இருக்கும். (அல்குர்ஆன்: 33–5) என்ற இறைவசனம் இறங்கியதும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் "நீ ஹாரிதா உடைய மகன் ஜைது" என்று சொன்னார்கள்.

(நூல்: புகாரீ, முஸ்லிம்)

இன்னும்

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ ؕ وَكَانَ اللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمًا

முஹம்மது உங்கள் ஆண்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால் அவரோ, அல்லாஹு தஆலாவின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (நபி)யாகவும் இருக்கின்றார். மேலும், அல்லாஹு தஆலா எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன். (அல் குர்ஆன்.33–40) என்ற வசனத்தையும் இறக்கி வைத்தான்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்

அவர்களுக்கும் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் நடந்த திருமணம் அல்லாஹு தஆலாவினால் நடத்தப்பட்டது. அல்லாஹ்வின் விரோதிகள், தீயோர்கள் கூறும் அவதூர்களை விட்டும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள்.

அரபியர்களின் தவறான வழிமுறையை மாற்றுவதற்காகவும் உன்னதமான உயர்ந்த நோக்கத்திற்காகவும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை (அல்லாஹ்வின் கட்டளையின்பேரில்) மணந்து கொண்டார்கள். இத்திருமணத்தின் நோக்கத்தை அல்லாஹு தஆலாவே கூறுகிறான். முஃமினீன்கள், தங்களால் வளர்க்கப் பட்டவர்கள் தங்களின் மனைவிமார்களை விவாகரத்துச் செய்து விட்டால் அ(வர்களை வளர்த்த)வர்கள் அப்பெண் களை மணந்து கொள்வதில் யாதொரு தடையுமிருக்கக் கூடாது என்பதற்காக. (இத்திருமணத்தை நடத்தினோம் என்று அல்லாஹு கூறுகிறான்)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து வைப்பதில் அல்லாஹு தஆலாவே பொறுப்பேற்றுக்கொண்டான்.

அன்னை ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் இன்னும் அவர்களின் மற்ற மனைவிமார்களிடம் பெருமையா (சந்தோஷமா)க உங்களையெல்லாம் உங்களுடைய குடும்பத்தார்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ

ஸல்லம் அவர்களுக்குத் திருமணம் செய்துகொடுத்தார்கள். ஆனால் என்னை அல்லாஹ்வே ஏழாவது வானத்திற்கு மேலிருந்து அவர்களுக்கு திருமணம் முடித்து வைத்தான். என்று கூறுவார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்ததில் உயர்ந்த நோக்கம், இலட்சியம் இருப்பதையும் அரபியர்களின் தவறான வழிமுறையை மாற்றி, சன்மார்க்க தத்துவத்தின் வழியை ஏற்படுத்தவே திருமணம் செய்து கொண்டார்கள் என்பதை, இஸ்லாத்தின் விரோதிகள் அறிவோடு சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் உணர்வார்கள்.

3. கூட்டு வாழ்க்கை என்ற தத்துவம்

சஹாபாக்களில் மிகச் சிறந்தவர்கள் நான்கு பேர்

1. சய்யிதினா ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

2. சய்யிதினா ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்

3. சய்யிதினா ஹழ்ரத் உத்மான் ரழிய்ல்லாஹு அன்ஹு அவர்கள்.

4. சய்யிதினா ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மரணத்திற்குப் பின் இவர்களே ஒருவர்பின் ஒருவராக முஃமின்களின் தலைவர்களாக ஆனார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களால் சிறந்த காலம் என்று சொல்லப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தார்கள்.

இந்த நான்கு சஹாபாக்கள் இஸ்லாத்திற்காக, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்காக செய்த தியாகங்கள் மகத்தானது. இவர்களின் மகத்தான சேவைகளினால் இவர்களைச் சிறப்பித்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நான்கு சஹாபாக்களில் முதன்மையானவர்கள், ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களாக இருக்கும்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்திற்காக செய்த உபகாரம்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மற்ற சஹாபாக்களை விடவும் இவர்களே மிகப் பிரியமானவர்கள். இஸ்லாத்திற்காக, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்காக தங்களது பொருள், உடல், உயிர் அனைத்தையும் அர்ப்பணித்தார்கள். இஸ்லாத்திற்காக பலவிதமான இன்னல்களையும் தாங்கிக் கொண்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்; ஒருவர், நமக்குச் செய்த உபகாரத்திற்குப் பகரமாக நாம் உபகாரம் செய்துவிட்டோம். ஆனால் அபூபக்கர் நமக்குச் செய்த உபகாரத்தைத் தவிர. (அவருடைய உபகாரத்திற்குப் பகரமாக நாம் உபகாரம் செய்யமுடியாது) அவர் நமக்குச் செய்த உபகாரத்திற்குப் பகரமாக அல்லாஹ், மறுமை நாளில் அவருக்குப் பதில் உபகாரம் செய்வான். அபூபக்கர் அவர்களின் பொருள் எனக்குப் பிரயோஜனமாக இருந்தது போன்று மற்ற யாருடைய பொருளும் எனக்குப் பிரயோஜனமாக

இருக்கவில்லை. இஸ்லாத்தைப்பற்றி (ஆரம்பமாக) நான் எடுத்துச் சொன்னபோது ஒவ்வொருவரும் தடுமாற்றமான நிலை கொண்டிருந்தார்கள். ஆனால் அபூபக்கர் அவர்களைத் தவிர–அவரிடம் இஸ்லாத்தைப் பற்றி நான் சொன்னபோது (தடுமாற்றமில்லாமல்) உடனே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நான் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு ஒருவரை, கலீலாக (நண்பனாக–தோழனாக) ஆக்கிக் கொள்வேன் என்றிருந்தால் அபூபக்கர் அவர்களையே ஏற்படுத்திக்கொள்வேன். ஆனால், அல்லாஹ்வையே எனது கலீலாக (நண்பனாக–தோழனாக) ஆக்கிக் கொண்டேன்.

(நூல்: புகாரீ, முஸ்லிம்)

அபூபக்கர் அவர்கள் எனக்குச் செய்த எந்த உபகாரத்திற்கும் இவ்வுலகில் என்னால் பதில் உபகாரம் செய்ய முடியவில்லை என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் செய்த தவ்ஹீத்– ஏகத்துவ பிரச்சாரத்திற்காக அல்லும் பகலும் துணை நின்றார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை மக்கா காபிர்கள் கொலை செய்யத் தயாரானபோது அரண் போன்று துணை நின்றார்கள். இஸ்லாத்திற்காக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மக்காவை விட்டு வெளியேறிய போது நானும் உங்களோடு வருகிறேன் என்று தன் பொருள், மனைவி மக்கள், உற்றார் உறவினர்கள் அனைத்தையும் துறந்து வெளியேறினார்கள். அல்லும் பகலும், ஆரம்ப கால முதல் இறுதி காலம்வரை துணை நின்றார்கள்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உன்னதமான உயர்ந்த உபகாரத்திற்காக பதில் உபகாரம்

செய்ய முடியாவிட்டாலும் ஓரளவு அவர்களை சந்தோஷப் படுத்தக் கூடிய முறையில் அவர்களின் அருமை மகளார் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்தார்கள். இத்திருமணத்தின் மூலம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் குடும்ப வாழ்க்கை ரீதியிலும் மிக நெருக்கத்தைப் பெற்றார்கள்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பின் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஃமின்களின் தலைவராக ஆனார்கள். இவர்களின் சிறப்புகள் அனேகமுண்டு. இஸ்லாத்திற்காக இவர்களின் சேவை மகத்தானது அல்லாஹு தஆலா இவர்கள் மூலம் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் கண்ணியத்தையும் மதிப்பையும் தந்தான். இவர்கள் மூலம் இஸ்லாம் பல நாடுகளுக்கும் பரவியது.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மிகச் சிறந்த சேவைகளுக்காக அவர்களை சந்தோஷப்படுத்த பிரியப் பட்டார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவர்களது மகளை எவ்வாறு திருமணம் செய்து சந்தோஷப்படுத்தினார்களோ அதைப்போன்று ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவர்களின் அருமை மகள் ஹழ்ரத் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து சந்தோஷப்படுத்தினார்கள். ஏற்கனவே ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் மகள் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

கணவனை இழந்து விதவையாக ஆனதால் பெரிதும் கவலையடைந்திருந்தார்கள்.

மூன்றாவது கலீபா ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், நான்காம் கலீபா ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இவ்விருவர்களின் மகத்தான சேவைகளுக்காக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களின் அருமை மக்களை இவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து சந்தோஷப் படுத்தினார்கள். ஆகவே முதல் இரண்டு சஹாபாக்களுக்கு அவ்விருவர்களின் பெண் மக்களை தாங்கள் திருமணம் செய்து, பிந்திய இரு பெரும் சஹாபாக்களுக்கு தங்களுடைய பெண்மக்களை திருமணம் செய்து கொடுத்தார்கள். அந்த (நான்கு) சஹாபாக்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் அவர்களோடு மேலும் நெருக்கத்தையும் உறவையும் பெறுவதற்காகவுமே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டார்கள்.

4. மனிதர்களுக்கு மத்தியில் அன்பை ஏற்படுத்துதல் என்ற தத்துவம்

மனிதர்களுக்கு மத்தியில் அன்பையும் உறவையும் ஏற்படுத்துவதற்காகவும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல திருமணங்கள் செய்தார்கள்.

அரபியர்கள் பல பிரிவாக பிரிந்து பரந்து வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு மத்தியில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தஃவத்–இஸ்லாமிய அழைப்பு பிரச்சாரம் செய்தவுடன் ஒவ்வொரு கூட்டத்தார்களும் பல வழிகள் மூலம் அவர்களுக்கு இடையூறு செய்து எதிர்ப்பையும்

காட்டினார்கள். எதுவரையென்றால், கொலை செய்வதற்கும் தயாராக ஆனார்கள். இவ்வாறு தங்களுக்கு எதிரிகளாக இருந்த, மாறுபட்ட எண்ணமுடைய அராபியர்களை ஒன்றுசேர்த்து, மாறுபட்ட கொள்கையுடைய மனிதர்களின் உள்ளங்களை ஒரே உறுதியான இஸ்லாத்தின் கீழ் கொண்டு வருவதற்காகவே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 11 திருமணங்கள் செய்தார்கள்.

இவ்வாறு திருமணம் செய்வதின் மூலம், தங்கள் மீது முழு எதிர்ப்பையும் காட்டக்கூடியவர்கள் மனம் மாறி, ஒன்று சேர்ந்து தாங்கள் கொண்டுவந்த ஏகத்துவத் (இஸ்லாத்)தை ஏற்பார்கள் என்ற தத்துவத்திற்காகவும், தங்களுக்கு சோதனை வந்தால் திருமண உறவின் மூலம் சொந்தமான (மாறுபட்ட எண்ணமுடைய) அவர்கள் தங்களுக்கு உதவி செய்ய முன்வருவார்கள் என்பதற்காகவே அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், 11, பெண்களைத் திருமணம் செய்தார்கள்.

ஏனென்றால் ஒரு மனிதன் மற்ற குடும்பத்தில் திருமணம் செய்யும்போது அந்த குடும்பத்தினர் அனைவரும் இவனுக்கு உறவினர்களாக ஆகிவிடுகின்றனர். அம்மனிதன், தன்னுடைய பாதுகாப்பிற்காக அக்குடும்பத்தார்களை அழைத்தால் பாதுகாப்பிற்கு முன்வருவார்கள். மாறுபட்ட எண்ணமுடையவர்கள், யாரோ எவரோ என்று வாழ்ந்தவர்கள் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதின் மூலம் இணைப்பையும், அன்பையும், உறவையும் பெறுகின்றனர். மாறுபாடு கொண்ட கொள்கையுடைய இரு நாடுகள், திருமண உறவின் மூலம் இரு நாட்டிற்கும் மத்தியில் நல்ல இணக்கம் ஏற்படுவதை பார்க்கின்றோம். இது போன்ற இலக்ஷியங்களுக்காகவே அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பல திருமணங்கள் செய்தார்கள்.

உதாரணமாக:

அன்னை ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்கள் ‘பனீமுஸ்தலக்’’ தலைவர் ஹாரிஸ் என்பவரின் மகளாராக இருக்கும் ஹிஜ்ரீ 5ஆம் ஆண்டு இஸ்லாத்திற்கு எதிராக இவர்கள்(பனீமுஸ்தலக்) செய்த சதியால் நடந்த யுத்தத்தில் தோல்வியடைந்தார்கள். இவர்கள் அனைவரும் கைதியாக்கப்பட்டார்கள். ஜுவைரிய்யா அவர்களும் அவர்களுடைய குடும்பத்தார்கள். (100 குடும்பம்) கைதியாக்கப்பட்டு சஹாபாக்களுக்கு பங்கிட்டு கொடுக்கப் பட்டார்கள்.

கைதியான இவர்களை பங்கிட்டபோது ஜுவைரிய்யா அவர்கள் ஹழ்ரத் தாபித் இப்னு கைஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டார்கள். தான் ஒரு கைதியாக்கப்பட்டு, அடிமையாக எழுதி வாங்கப்பட்டு, தாபித் இப்னு கைஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உடமையாக்கப்பட்டவுடன் கவலையோடு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! ‘‘பனீமுஸ்தலக்’’ என்ற கூட்டத்தின் தலைவரான ஹாரிஸ் எனது தந்தை, அவருடைய மகள் நான், ஜுவைரிய்யா. உங்களுக்கு எதிராக நாங்கள் தொடுதத யுத்தத்தில் தோல்வியடைந்தோம். இது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது நான் தாபித் இப்னு கைஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உடமை யாக்கப்பட்டு 9 அவாக்கிற்குப் பகரமாக என்னிடம் எழுதி வாங்கியுள்ளார். ஆகையால் (கண்ணியமான குடும்பத்தைச் சார்ந்த) என்னை விடுதலை செய்வதற்கு உதவி செய்யுங்கள் என்றார்.

உனக்கு விடுதலை கிடைப்பதை விட சிறந்த உதவியை நான் செய்யட்டுமா? என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கேட்க, அது என்ன உதவி? என்று ஜுவைரிய்யா அவர்கள் கேட்டார்கள்.

நீ (தாபிதுக்கு) செலுத்த வேண்டிய அபராதத் தொகையை நான் கொடுத்து விடுகின்றேன், உன்னையும் நானே திருமணம் செய்துகொள்கிறேன், என்று சொன்னார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! இதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று ஜுவைரிய்யா அவர்கள் சம்மதம் தெரிவிக்கவே, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஜுவைரிய்யா அவர்களுக்கு விடுதலை வாங்கிக்கொடுத்து தாங்களே திருமணம் செய்து கொண்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்த நிகழ்ச்சி சஹாபாக்களுக்கு தெரிந்தவுடன் (ஜுவைரிய்யா அவர்களின் சொந்தக்காரர்கள், திருமண உறவால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு உறவினர்களாக ஆகிவிட்டார்கள்) திருமண உறவால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குச் சொந்தமான (பனீ முஸ்தலக்) இவர்களை நாம் அடிமைகளாக வைத்திருக்கலாமா? என்று எண்ணிய சஹாபாக்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மரியாதை செய்யும் முகமாக தங்களுக்கு கீழ் இருந்த ''பனீ முஸ்தலக்'' கூட்டத்தார். அனைவரையும் விடுதலை செய்து விட்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தலைவரின் மகள் ஜுவைரிய்யா அவர்களைத்

திருமணம் செய்ததால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மரியாதை செய்யும் முகமாக சஹாபாக்கள், தங்களுக்கு விடுதலையளித்ததைக் கண்ட, பனீமுஸ்தலக் கூட்டத்தார்கள் ஆச்சரியப்பட்டார்கள். இத்தகைய உத்தம சஹாபாக்கள் இருக்கும் இஸ்லாம் மார்க்கம் தான் உண்மையாக உயர்வானது என்று கூறி உடனே புனித இஸ்லாம் மார்க்கத்திலே, விடுதலை பெற்ற பனீமுஸ்தலக் கூட்டத்தைச் சார்ந்த 100 குடும்பத்தார்களும் இணைந்து உன்னதமான முஸ்லிம்களாக ஆகிவிட்டார்கள்.

எங்கள் உத்தம நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது களங்கம் கூறும் குறுகிய அறிவுள்ளவர்களே! சிந்தித்துப்பாருங்கள்! எங்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 100 குடும்பத்தார்களின் விடுதலையின் இலட்சியத்திற்காகவும், அவர்களை இரு உலக அழிவிலிருந்து பாதுகாக்கவே ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்தார்கள் என்பதை உணருங்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா
முஹம்மதிவ் வஅலா ஆலி ஸய்யிதினா
முஹம்மதிவ் வ பாரிக் வ ஸல்லிம் அலைஹி.

அன்னை ஸபிய்யா பின்த் ஹுயய்யி இப்னுஅக்தப் ரழியல்லாஹுஅன்ஹா அவர்கள்.

ஹிஜ்ரீ 9ம் ஆண்டு, முஸ்லிம்களுக்கும் குப்பார்களுக்கும் மத்தியில் நடந்த கைபர் யுத்தத்தில் ஸபிய்யா அவர்களின் கணவர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டார். ஸபிய்யா அவர்களும் அவர்களைச் சார்ந்தவர் (எதிரி)களும் கைதிகளாக்கப்பட்டார்கள். கைதிகள் சஹாபாக்களுக்கு பங்கு வைக்கப்பட்டு உடமையாக்கப் பட்டார்கள். சபிய்யா அவர்களும் ஒரு சஹாபிக்கு பங்கு வைக்கப்பட்டார்கள்.

ஸபிய்யா அவர்கள் ''பனீகுரைளா'' கூட்டத்தின் தலைவியாக இருந்ததால் சில சஹாபாக்கள் ஆலோசனை செய்து சபிய்யா அவர்களை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் ஒப்புடைத்து விட வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சஹாபாக்களின் யோசனையை ஏற்று சபிய்யா அவர்களை அழைத்து இரண்டு விஷயங்களைக் கூறி இதில் எதையும் தேர்ந்தெடுக்க உனக்கு உரிமையுண்டு என்று கூறினார்கள்.

ஒன்று: ஸபிய்யா அவர்கள் விடுதலையடைந்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மனைவியாகுவது. இரண்டாவது: விடுதலை யடைந்து தன்னுடைய கூட்டத்தார்களோடு சேர்ந்து கொள்ளுதல். இதில் எதையும் தெரிந்தெடுத்துக் கொள்ள உனக்கு உரிமை உண்டு என்று கூறினார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உயர்ந்த குணத்தை அறிந்து கொண்ட ஸபிய்யா அவர்கள், தான் விடுதலையடைந்து நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மனைவியாக இருப்பதையே விரும்பினார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அன்பான பாதுகாப்பைக் கண்ட ஸபிய்யா அவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஸபிய்யா அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற நேரத்தில் கணிசமான ஜனங்களும் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

வேறொரு அறிவிப்பில் கீழ்காணும் முறையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸபிய்யா அவர்கள் கைதியாக ஆக்கப்பட்ட நிலையில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். ஸபிய்யாவைப் பார்த்த நபியவர்கள், யஹூதிகளிலே உன் தந்தைதான் என் மீது கடின பகையுடையவராக இருந்தார். கடைசியில் அல்லாஹு தஆலா உன் தந்தையை (கைபர் யுத்தத்தில்) கொலை செய்தான் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே!

ஓர் ஆத்மாவின் (பாவச்) சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது(6–164) என்று அல்லாஹு தஆலா கூறியுள்ளான் என்று ஸபிய்யா அவர்கள் சொன்னார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஸபிய்யா அவர்களிடம் நீ இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் உன்னை எனக்கு மனைவியாக ஆக்கிக் கொள்கிறேன், அல்லது உன்(யூத) மதமே உனக்குப் பிரியமென்றிருந்தால் உனக்கு விடுதலை தருகிறேன். உனது கூட்டத்தார்களோடு சேர்ந்து கொள், என்று தங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே!

இஸ்லாத்தை நான் விரும்புகிறேன். என்னை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதற்கு முன்பே நானே என்னை உங்களிடம் ஒப்படைக்கத் தயாராகியிருந்தேன். என்னுடைய (யூத) மதத்தில் எனக்கு யாரும் பாதுகாப்பாளராக இல்லை. எனக்கு பெற்றோர்களோ, சகோதரரோ இல்லை. ஈமானுக்கும் குப்ருக்கும் மத்தியில் எனக்கு சுய உரிமை கொடுத்து இருக்கின்றீர்கள். நான் விடுதலையடைந்து எனது கூட்டத்தார்களோடு சேருவதைவிட, அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் எனக்கு மிகப்பிரியமாகும் என்று சபிய்யா அவர்கள் சொன்னார்கள்.

சுய அறிவோடு, ஸபிய்யா அவர்கள் விடுதலையடைந்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மனைவியாக இருப்பதை விரும்பியதால் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஸபிய்யா அவர்களுக்கு விடுதலையளித்து பின்பு தங்களுக்கு மனைவியாக்கிக் கொண்டார்கள்.

அன்னை உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இஸ்லாத்திற்கும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கடும் பகைவராகயிருந்த அபூசுப்யான் அவர்களின் மகளாராகும் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். (அபூசுப்யான் அவர்கள் மக்காஹ் வெற்றியின் போது இஸ்லாத்தைத் தழுவினார்கள்) அபூசுப்யான் கடும் பகைவராக இருந்தபோது அவரது மகளார் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தில் இணைந்து விட்டார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் தங்கள் ஈமானை

பாதுகாப்பதற்காக வேண்டி முஸ்லிம்கள் மக்காவைத் துறந்து அபீசீனியா நாட்டில் தஞ்சம் புகுந்தார்கள். அதன் அடிப்படையில் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் அவர்களுடைய கணவரும் மக்காவைத் துறந்து அபீசீனியா நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அபீசீனியா நாட்டிலிருக்கும்போது ஹழ்ரத் உம்முஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கணவர் வபாத்– மரணமடைந்து விட்டார்.

(ஒருவர் தான் ஏற்றுக்கொண்ட ஈமான் – இறை நம்பிக்கை இஸ்லாத்தை பாதுகாக்க தான் பிறந்த தாயகத்தை வெறுத்து பாதுகாப்பான ஊரைத் தேடி செல்வதற்கு "ஹிஜ்ரத்" என்று கூறப்படும்).

இஸ்லாத்திற்காக அல்லாஹு தஆலாவுக்குப் பின் தன் கணவரை மட்டும் துணையாகக் கொண்டு அபீசீனியா நாட்டில் தஞ்சம் புகுந்த ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு கணவரின் மரணத்தால், விதவையான அவர்களுக்கு இரக்கம் காட்டக்கூடிய, பாதுகாப்புத் தரக்கூடிய எவரும் அங்கு (அபீசீனியா நாட்டில்) இல்லை.

இஸ்லாத்திற்காக ஹிஜ்ரத் செய்த ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ஏற்பட்ட சோதனை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு தெரிந்தது. கணவரை இழந்து விதவையாகி, ஆதரவற்றிருக்கும் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து கொள்ள பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் விரும்பினார்கள். தங்களின் விருப்பத்தை அபீசீனியா மன்னர் நஜ்ஜாஷிக்கும் தெரியப்படுத்தினார்கள்.

தனது தந்தை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கடும் பகை

வராகயிருந்தும் விதவையான தன்னை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்யப்போவதை கேள்விப்பட்ட ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்கள். அந்நேரம் அவர்களடைந்த சந்தோஷத்தின் அளவை அல்லாஹ் ஒருவனே நன்கறிந்தவன்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள். ஆதரவற்ற விதவையான, அதுவும் தன் எதிரியின் மகள் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்த செய்தியறிந்து மன்னர் நஜ்ஜாஷி சந்தோஷப்பட்டார். 400 தீனார்களையும் பல அன்பளிப்பு பொருள்களையும் கொடுத்து. பாதுகாப்பாளர்களோடு ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மதீனாவுக்கு மன்னர் நஜ்ஜாஷி அனுப்பி வைத்தார்.

ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மதீனா வந்ததும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள். அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

(ஹழ்ரத் உம்மு ஹபீபாவின் திருமண இடம் சம்பந்தமாக வரலாற்றில் இரு கூற்றுகளுண்டு. அபீஸீனிய நாட்டிலேயே அபிஸீனிய அரசர் நஜ்ஜாஷி தானே நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு திருமணம் முடித்து மஹரையும் கொடுத்து மதீனாவுக்கு அனுப்பி வைத்ததை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஏற்றுக் கொண்டதாக மற்றொரு கூற்று)

தனது மகளை ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள், என்ற செய்தியறிந்த அபூசுப்யான்

(அப்பொழுது எதிரியாக இருந்தும்) தனது சம்மதத்தைத் தெரிவித்தார். தன் எதிரியாக (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்) இருந்தாலும் தன் மகளைத் திருமணம் செய்து கொண்டதில் பெருமைப்பட்டார். ஏனெனில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உண்மை நிலையை அபூசுப்யான் அறிந்திருந்தார்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்ததில் பலவிதமான தத்துவங்கள் இருக்கின்றன. அன்னை உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், தன் தந்தை அபூ சுப்யான்(எதிரிகளின்) தலைவராகயிருந்தும் அவரது கொள்கைக்கு மாற்றமாக தன்னை இஸ்லாத்தில் இணைத்துக்கொண்டு, தன் கணவரோடு அபிஸீனியா நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அங்கே ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கணவர் இறந்து விடவே, பாதுகாப்பற்ற நிலையில் இருந்தார்கள். இந்நிலையில் தன் பாதுகாப்பிற்காக, மீண்டும் மக்காவுக்குத் திரும்பி வந்தால் தன் தந்தையும் உறவினர்களும் சித்திரவதை செய்வார்கள். அல்லது எல்லோரும் சேர்ந்து இஸ்லாம் மார்க்கத்தை விடும்படி வற்புறுத்துவார்கள். இவ்வாறு பாதுகாப்பற்ற நிலையிலிருந்த ஒரு பெண்ணின் ஈமானைப் பாதுகாப்பதற்காக வேண்டி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் உம்மு ஹபீபா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

ஏற்கனவே, அபூசுப்யான் இஸ்லாத்திற்கும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் சஹாபாக்களுக்கும் கடும் பகைவராக இருக்கிறார். அவரது மகளைத் திருமணம் செய்வதின் மூலம் அவரின் எதிர்ப்புணர்வு குறையக்கூடும். ஏனென்றால் அவருடைய மகளை திருமணம் செய்ததின் மூலம் குடும்ப உறவும் பலப்பட்டுவிட்டது.

ஆகையால், அவரது குடும்பத்தார்களும் முஸ்லிம்கள் மீது காட்டக்கூடிய எதிர்ப்பை குறைப்பார்கள், என்பதற்காகவே அபூசுப்யான் அவர்களின் மகள் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

மகத்தான இவ்விரு காரணங்களுக்காகவே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அபூசுப்யான் மகள் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்தார்கள்.

(அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதிவ் வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்)

முஃமின் (விசுவாசி) களின் தாய்மார்கள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கென்று பெண்களிலே சிறந்தவர்களாக அப்பெண்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்தான். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கண்ணியப்படுத்தும் முறையிலும், அவர்களின் மனைவிமார்களை சிறப்பிக்கும் முறையிலும், அல்லாஹ் அப்பெண்களை முஃமின்களுக்கு தாய்மார்களின் அந்தஸ்தில் வைத்துள்ளான்.

அல்லாஹு தஆலா குர்ஆன் ஷரீபில் கூறுகிறான்;

اَلنَّبِيُّ اَوْلٰى بِالْمُؤْمِنِيْنَ مِنْ اَنْفُسِهِمْ
وَاَزْوَاجُهٗۤ اُمَّهٰتُهُمْ ؕ

இந்த நபீ விசுவாசிகளுக்கு அவர்களுடைய உயிர்களை விட மேலானவராக இருக்கிறார். இன்னும் அவருடைய மனைவிமார்கள் அவர் (விசுவாசி)களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர்.

(அல் குர்ஆன்.33-6)

மேலும், அல்லாஹு தஆலா பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களை சிறப்பிக்கும் முறையில் குர்ஆன் ஷரீபில் கூறுகின்றான்;

وَمَا كَانَ
لَكُمْ اَنْ تُؤْذُوْا رَسُوْلَ اللّٰهِ وَلَآ اَنْ تَنْكِحُوْٓا اَزْوَاجَهٗ
مِنْۢ بَعْدِهٖٓ اَبَدًا ؕ اِنَّ ذٰلِكُمْ كَانَ عِنْدَ اللّٰهِ عَظِيْمًا ۝

அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. அவருடைய மனைவிமார்களை அவருக்குப் பின்னர் நீங்கள் திருமணம் செய்வது கூடாது. நிச்சயமாக இது அல்லாஹ்விடத்தில் மிகப் பெரிய (பாபமான) காரியமாகும்.

(அல்குர்ஆன். 33-53)

அல்லாமா குர்துபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் தப்ஸீரீல் (அல் ஜாமிஃ லி அஹ்காமில் குர்ஆன்) கூறுகிறார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களை சிறப்பிக்கும். முறையில் அல்லாஹ்! அவர்களை முஃமினீன்களுக்கு தாய்மார்களாக ஆக்கியுள்ளான். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கண்ணியப்படுத்தும் முறையில் அவர்களுக்குப் பின் யாரும் அப்பெண்களைத்

திருமணம் செய்வதை ஹராமாக்கியுள்ளான். இது அல்லாஹ்! அப்பெண்களுக்குக் கொடுத்துள்ள மிகப்பெரிய சிறப்பாகும்.

விசுவாசிகளின் தாய்மார்களின் பெயர்கள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்த பரிசுத்தமான அப்பெண்களின் பெயர்கள்:

1. ஹழ்ரத் கதீஜா பின்த் குவைலித் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
2. ஹழ்ரத் ஸவ்தா பின்த் ஜம்ஆ ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
3. ஹழ்ரத் ஆயிஷா பின்த் அபூபக்கர். ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
4. ஹழ்ரத் ஹப்ஸா பின்த் உமர் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
5. ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
6. ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
7. ஹழ்ரத் உம்மு ஸல்மா (ஹின்து பின்த் அபீ உமையத்துல் மக்ஜூமிய்யா) ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
8. ஹழ்ரத் உம்மு ஹபீபா (ரம்லா பின்த் அபூசுப்யான் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.
9. ஹழ்ரத் மைமூனா பின்த் ஹாரிதுல் ஹிலாலிய்யா

ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.

10. ஹழ்ரத் ஜுவைரிய்யா பின்த் ஹாரித் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.

11. ஹழ்ரத் சபிய்யா பின்த் ஹுயய்யி இப்னு அக்தப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்.

1. அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் முதல் மனைவியாவார்கள், நபிபட்டம் (இறைத்தூதர்) வழங்கப்படுவதற்கு 15 வருஷத்திற்கு முன் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 25 வயதாக இருக்கும் போது அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்தார்கள். அப்பொழுது கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வயது 40.

அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இதற்கு முன் அபூஹாலா என்பவரிடம் வாழ்ந்தார்கள். அவரது மரணத்திற்குப் பின் அதீக் இப்னு ஆயித் என்பவரோடு வாழ்ந்தார்கள். இவரும் மரணமடைந்து விட்டார். எனவே ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இரு தடவை விதவையாக ஆனார்கள்.

அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கூர்மையான, நுட்பமான அறிவுத் திறமைக்காகவே அருமை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவர்களைத் திருமணம் செய்தார்கள். இத்திருமணம் இரு அறிஞர்களுக்கு மத்தியில் நடந்த திருமணமாகும். இவர்களுக்கு மத்தியில் வயது வித்தியாசம் (25–40) ஒரு

தடையாக இருக்கவில்லை. மற்றவர்களைப்போல மனோ இச்சைக்காக இத்திருமணம் நடைபெறவில்லை. அல்லாஹ்வே இத்திருமணத்திற்கு வழி காட்டினான்.

ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்அல்லாஹ்வின் ரஸூலாக இருக்கும். அல்லாஹ், தனது கட்டளையை (தூதுவத்தை) ஏற்று மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதற்காக வேண்டியே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் படைத்தான்.

ஆகவே இத்தகைய உயர்ந்த இலட்சியத்திற்காக வேண்டி அனுப்பப்பட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு தஃவத்–மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும்போது ஏற்படும் சோதனைகளுக்கு உறுதுணையாக இருக்கவே, அல்லாஹ்! அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் துணைவியாக ஆக்கினான். ஏனென்றால் அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவுத் திறன் படைத்தவர்கள். அவர்களின் அறிவுத் திறமையினால் தொலைதூர நாடுகளுக்கு வாணிபத்தை நடத்தி பொருளாதாரத்துறையில் மிக- உயர்ந்த அந்தஸ்திலிருந்தார்கள்.

அவர்களின் சிறந்த, கூர்மையான அறிவுக்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காணலாம். அவர்கள் இயற்கையிலேயே சிறந்தவர்களாகவும், கூர்மையான அறிவுத் திறமை படைத்தவர்களாகவுமிருந்தார்கள். அவர்களின் அறிவுத் திறமையினால் அருமை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கொண்டு (அல்லாஹ்வின் பேரருளால்) முதன் முதலாக (பெண்களில்) ஈமான் கொண்டார்கள்.

அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கூர்மையான, திறமையான அறிவுக்கு எடுத்துக்காட்டாக:

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பலமாதங்கள் ஹிராக் குகையில் தனித்திருந்து தியானம் செய்யும் வேளையில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு (40 வயது ஆனபோது) வானவர் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் (முதன் முதலாக) வஹீ (இறைவனிடமிருந்து கட்டளைகள்) கொண்டு வந்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வானவர் கோமான் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கண்டவுடன் உள்ளம் நடுங்கியவர்களாக வீட்டிற்கு வந்து, தங்கள் மனைவி ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!! என்று சொன்னார்கள். பயம் நீங்கிய பிறகு ஹிராக் குகையில் தாங்கள் கண்ட காட்சியை ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சொன்னார்கள். தங்களுக்கு ஏதோ (ஆபத்து) என்று பயப்படுவதாகவும் சொன்னார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறியதைக் கேட்ட அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள்; நீங்கள் பயப்படுவது போன்று உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. அல்லாஹு தஆலாவின் மீது ஆணையாக அவன் எந்தக் காலத்திலும் உங்களை இழிவு படுத்த மாட்டான். நீங்கள் உறவினர்களோடு சேர்ந்து இருக்கிறீர்கள்; உண்மையைச் சொல்கிறீர்கள்; கஷ்டங்களைத் தாங்கிக் கொள்கிறீர்கள்; நலிந்தவர்களுக்கு உபகாரம் செய்கின்றீர்கள்; விருந்தளிக் கின்றீர்கள். சத்தியத்தை நிலை நாட்டுவதற்காக உதவி செய்கின்றீர்கள், என்று தங்கள் கணவர் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஆறுதலான

வார்த்தைகளைக் கூறி, அன்னாரது பயத்தைப் போக்கினார்கள்.

இது போன்ற அறிவுப் பூர்வமான, ஆறுதலான வார்த்தைகளை இக்கட்டான அந்த வேளையில் எந்தப் பெண்ணும் தன் கணவருக்கு இந்த முறையில் கூறி ஆறுதலைத் தர முடியாது. ஆனால் அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் திறமையான அறிவினால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறி அமைதிப் படுத்தினார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் வாலிப கால முழுவதும் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களோடு வாழ்ந்தார்கள். அவர்களோடு வாழ்ந்த காலத்தில் வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்யவில்லை. ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பிரியப்பட்டது போன்று (அவர்களது மரணத்திற்குப் பின்) வேறு எந்த மனைவியரையும் பிரியம் வைத்ததில்லை.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது ரோஷமுடையவர்களாக இருந்தார்கள். ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் காலத்தில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மனைவியாக இல்லை. ஏன்? ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பார்க்கக்கூட இல்லை (பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் எல்லா மனைவிமார்களை

விடவும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை விரும்புவது ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ரோஷமாக இருந்தது) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அந்தக் காலத்தில் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் (உங்களுக்கு மனைவியாக இருக்கும்போது) கிழவியாக இருந்தார்கள். அல்லாஹ், அவர்களை விட சிறந்த பெண்ணை (என்னை) உங்களுக்கு மனைவியாக தந்திருக்கின்றான்; என்று சொன்னதும் நபீ ஸல்லல்லாஹுஅலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு கோபம் வந்தது. நீ சொல்வது போன்று இல்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக அல்லாஹ், எனக்கு கதீஜாவை விட சிறந்த பெண்ணை (மனைவியாக) தரவில்லை. மக்கள் எனது ‘‘தஃவத்’’ இஸ்லாமிய அழைப்பை ஏற்காமல் என்னை நிராகரித்தபோது அவர்கள் (கதீஜா) என்னைக் கொண்டு ஈமான் கொண்டார்கள், மக்களெல்லாம் என்னைப் பொய்யன் என்று சொன்னபோது என்னை உண்மைப்படுத்தினார்கள்.

மக்கள் என்னை அல்லாஹ்வின் நபீ, ரஸூல் என்று ஏற்காமல் நிராகரித்தபோது தனது பொருளைக் கொண்டு எனக்கு உபகாரம் செய்தார்கள், அல்லாஹ்! எனக்கு எந்த மனைவிமார்கள் மூலமும் குழந்தையைத் தராமல், அவர்கள் மூலமே குழந்தைப் பாக்கியத்தைத் தந்தான். இவ்வாறு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னதும் இதற்குப் பின் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பற்றி எதையும் (லேசாகக் கூட) நான் சொல்வதில்லை என்று ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்; கதீஜா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்கள் மீது ரோஷப்படுவது போன்று யார் மீதும் நான் ரோஷப்படுவது கிடையாது. மேலும் அவர்களை நான் பார்த்ததுமில்லை. பெருமானார் ஸல்லல்லாஹுஉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவர்களைப் பற்றி அதிகமாக நினைவூட்டிக் கொண்டே இருப்பார்கள். ஆடு அறுத்தால் அதன் இறைச்சியை அவர்களுடைய உறவினர்களுக்கு கொடுத்தனுப்புவார்கள். சில நேரம், இவ்வுலகில் கதீஜா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்களைத் தவிர வேறு மனைவி உங்களுக்குக் கிடையாதா? என்று கூறுவேன். அப்பொழுது நபீ ஸல்லல்லாஹுஉ அலைஹி வ ஸல்லம் அவர்கள், அவர்கள் (கதீஜா) இப்படி..... இப்படி.... இருந்தார்கள் என்று (அவர்களின் சிறப்புக்களைக்) கூறுவார்கள். அல்லாஹ்! எனக்கு அவர்கள் மூலமே குழந்தைப் பாக்கியத்தைத் தந்தான் என்றும் கூறுவார்கள்.

அன்னை கதீஜா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹுஉ அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் 25 வருஷம் வாழ்ந்துள்ளார்கள். (15 வருஷம் நபீ பட்டம் வழங்கப்படுவதற்கு முன்பும் 10 வருஷம் நபீயாக ஆன பிறகும் வாழ்ந்துள்ளார்கள்.) அன்னை கதீஜா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் பெருமானார் ஸல்லல்லாஹுஉ அலைஹி வ ஸல்லம் அவர்கள் வேறு பெண்ணைத் திருமணம் செய்யவில்லை.

அன்னை கதீஜா ரழியல்லாஹுஉ அன்ஹா அவர்கள், அல்லாஹ்வுக்கும் அண்ணல் நபீ ஸல்லல்லாஹுஉ அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் திருப்தியான முறையில் இவ்வுலகை விட்டுச் சென்ற வேளையில் நபீஸல்லல்லாஹுஉ அலைஹி வ

ஸல்லம் அவர்களுக்கு வயது 50. அந்நேரம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு வேறு மனைவியுமில்லை. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மரணத்திற்குப் பின்பே பல பெண்களைத் திருமணம் செய்தார்கள். அதுவும் முன்னால் நாம் எழுதிய பிரகாரம்.

அவதூறு கூறுபவர்களே! சிந்தித்து உண்மையைப் பேசுங்கள்!

(எல்லாம் வல்ல ரஹ்மான் அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பொறுத்திக் கொள்வானாகவும், ஆமீன்!)

2. அன்னை ஸவ்தா பின்த் ஜம்ஆ ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்கள் ஹழ்ரத் சக்ரான் இப்னு அம்ருல் அன்சாரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மனைவியாக இருந்தார்கள். இஸ்லாத்திற்காக முதன் முதலாக தனது கணவரோடு மக்காவைத் துறந்து அபிசீனியா நாட்டுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். பின்பு அபிசீனியா நாட்டிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

மதீனா வந்த பின்பு அவர்களது கணவர் மரணமடைந்தார். தனது கணவருக்குப் பின் அவருக்கு உதவி செய்பவர் யாருமில்லை. இஸ்லாத்திற்காக தனது ஊர் மக்கா, உற்றார் உறவினர்கள், பொருள் அனைத்தையும் துறந்து இரு தடவை ஹிஜ்ரத் செய்த இவர்கள், அவர்களின் கணவரின் மரணத்தால் நிற்கதியாக்கப்பட்டார்கள்.

தனக்குப் பாதுகாப்புத் தேடி மீண்டும் மக்கா(ஹ்)வுக்குச் சென்றால் அவர்களின் உறவினர்கள் இஸ்லாத்தை விடும்படி வற்புறுத்துவார்கள். அல்லது இஸ்லாத்தில் இணைந்ததற்காக வேண்டி துன்புறுத்துவார்கள். இத்தகைய இக்கட்டான நிலையில் இருந்தார்கள். ஆகையால் அவர்களின் ஈமானின் உறுதிக்காக, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக வேண்டி அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், அவர்களைத் தங்களுக்கு மனைவியாக்கிக் கொண்டார்கள். இவ்வாறு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் செய்தது அப்பெண்ணுக்குச் செய்த சிறந்த உபகாரமாகும்.

ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மரணத்திற்குப் பின் இவர்களை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், இச்சைக்காகவே திருமணம் செய்தார்கள், என்று இஸ்லாத்தின் விரோதிகள், குறுகிய அறிவு படைத்தோர் கூறுவது உண்மையாக இருந்தால் விதவையான ஹழ்ரத் சவ்தா பின்த் ஜம்ஆ ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்குப் பகரமாக வேறு பெண்ணைத் திருமணம் செய்திருப்பார்கள். ஏனெனில் சவ்தா அவர்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை விட மூத்தவர்கள். ஆகவே உறுதி மிக்க ஈமானுக்காகவே அவர்களைத் திருமணம் செய்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள். அவர்களைத் திருமணம் செய்யும்போது அன்னாரது வயது 55. அன்னை ஸவ்தா பின்த் ஜம்ஆ ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 54ம் ஆண்டு ஷவ்வால் மாதம் மதீனாவில் வபாத் ஆனார்கள்.

அறிவுடையோர் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் இச்சைக்காக, இன்பத்திற்காக இத்திருமணம் நடைபெற வில்லை என்பதை உணர்வார்கள்.

3. அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களுக்கு 6 வயது அல்லது 7 வயதாக இருக்கும்போது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், இவர்களைத் திருமணம் செய்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்த மனைவிமார்களில் இவர்களே கன்னிப் பெண்ணாவார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களில் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூர்மையான அறிவுள்ளவர்களாகவும், அதிக ஞாபக சக்தி படைத்தவர்களாகவும் இருந்தார்கள். பெரும் பெரும் சஹாபாக்கள் தங்களுக்கு சிக்கலான சில மார்க்கச் சட்டங்களை இவர்களிடமிருந்து கேட்டுக் கொண்டு தெளிவு பெறுவார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், சஹீஹான பல ஆயிரம் ஹதீஸ்களை மனனம் செய்திருந்தார்கள். இவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்ட 2110, ஹதீஸ்கள், ஹதீஸ் கிரந்தங்களில் காணப்படுகிறது.

(நூல்: ஸய்யிதாத் பைத்துன் நுபுவ்வத்)

ஹழ்ரத் அபூ மூஸல் அஷ்அரிய்யி ரழியல்லாஹு அன்ஹு

அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: அவர்கள் கூறுகிறார்கள், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் சஹாபாக்களான எங்களுக்கு ஹதீஸில் (விளக்கம் தெரியாமல்) சிக்கல் ஏற்பட்டு ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்று விளக்கம் கேட்போமேயானால் அதன் விளக்கத்தை நாங்கள் பெற்றுக் கொள்வோம்.

ஹழ்ரத் மஸ்ரூக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து ஹழ்ரத் அபுள்ளுஹா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்; பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெரும் சஹாபாக்களெல்லாம் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்று மார்க்க விஷயங்க (Fபராயிள்)களைப் பற்றி கேட்பார்கள்.

ஹழ்ரத் உர்வத் இப்னு ஜுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், வைத்தியம் சம்பந்தப்பட்டதிலோ, பிக்ஹு சட்டங்களிலோ, கவிதை புனைவதிலோ ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை விட சிறந்த எந்தப் பெண்ணையும் நான் பார்த்ததில்லை. ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் அறிவை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மற்ற மனைவிமார்களின் அறிவோடு கவனித்துப் பார்த்தால், மேலும் எல்லாப் பெண்களின் அறிவோடும் கவனித்துப் பார்த்தால், ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் அறிவே சிறந்ததாக இருக்கும், என்று இமாம் ஜுஹ்ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ஹதீஸ்களை அறிவிக்கக்கூடிய சஹாபாக்களில் ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இவ்விரு சஹாபாக்களையும் கிதாபுகளில் அதிகமாக காண முடிகிறது. இவ்விருவர்களும் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலமே அதிகமான ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள். இதுவே ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறந்த அறிவுக்கு எடுத்துக்காட்டாகும்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், தங்களின் மனைவிமார்களில் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது அதிகம் பிரியம் வைப்பவர்களாயிருந்தார்கள். ஆனால் தங்கள் எல்லா மனைவிமார்களுக்கிடை(குடும்பவாழ்க்கை)யில் நீதமாக நடந்துகொள்வார்கள். யா அல்லாஹ்! இது (நீதமான குடும்ப வாழ்க்கை) எனது ஆதிக்கத்தில் உள்ளதாகும். ஆனால் நான் ஆதிக்கம் செலுத்த முடியாததில் (உள்ளம் உனது ஆதிக்கத்திலுள்ளது. என் உள்ளம் ஆயிஷாவின் மீது அதிகம் பிரியம் வைக்கிறது.) என்னைப் பிடித்து விடாதே! என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறுவார்கள்.

உலக வழக்கப்படி பெண்கள் ஆடை அலங்காரம், அலங்காரப் பொருட்களான நகைகள் அணிகலன்களை விரும்புவது போன்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் தங்களின் விருப்பத்தைக் கூறி, அனைத்து மனைவிமார்களுமே மனக்கஷ்டத்தையளித்தபோது,

அல்லாஹு தஆலா தனது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களுக்கு இரு உலக வாழ்க்கைக்கு மத்தியில் இஷ்டம் கொடுத்து ஆயத்தை இறக்கியபோது முதன்முதலாக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் தான் சொன்னார்கள். யா ஆயிஷா! நான் ஒரு விஷயத்தை உன்னிடம் கூறுகின்றேன்; உனது பெற்றோர்களிடம் ஆலோசனை கேட்காமல் அவசரப்பட்டு முடிவு செய்துவிடாதே! என்றார்கள். எனது பெற்றோர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு வாழ வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள் என்பதையும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அறிந்திருந்தார்கள், என்று ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் திருவசனத்தை ஓதிக் காட்டினார்கள்;

நபியே! உங்களுடைய மனைவியரிடம் நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் நாடுவீர்களே யானால், வாருங்கள்! நான் உங்களுக்கு வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகிய முறையில் உங்களை நான் விடுதலை செய்துவிடுகிறேன். ஆனால் நீங்கள் அல்லாஹ் வையும் அவன் தூதரையும் மறு உலக வாழ்வையும் விரும்புவீர்களேயானால் அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ்! உங்களின் நன்மையாளர்களுக்காக மகத்தான நற்கூலியை தயார் செய்து வைத்திருக்கின்றான்.

(அல் குர்ஆன் 33-28, 29)

இவ்வாறு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் திருவசனத்தை ஓதிக்காட்டி தங்களோடு சேர்ந்து வாழ்வதில் விருப்பமா, இல்லையா? என்பதில் தன் பெற்றோர்களிடம் யோசனை கேள், என்று சொன்னதும் உடனே ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இவ்விஷயத்தில் என் பெற்றோர்களிடம் நான் ஆலோசனைக் கேட்க வேண்டுமா! நிச்சயமாக நான், அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் ரஸூலையும் மறு உலக வாழ்க்கையும் நாடுகிறேன், என்று சொன்னார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், நபியாக அனுப்பப்பட்டு 4, அல்லது 5 ஆண்டுகளுக்குப் பின் மக்காவில் பிறந்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹிஜ்ரத்துக்கு 3 ஆண்டுகளுக்கு முன் மக்காவில் வைத்து திருமணம் செய்தார்கள். அப்பொழுது ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வயது 6 என்றும், 7 என்றும் சொல்லப்படுகிறது.

ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டு ஒன்பதாவது வயதில் பருவமடைந்து மதீனா சென்று 18வது மாதம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் சேர்ந்து வாழ்ந்தார்கள். (மதீனா சென்றபின் 7வது மாதம் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது).

மரணம்

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் 9 வருஷம் வாழ்ந்தார்கள். ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு 18 வயதாக இருக்கும்போது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வபாத் (மரணம்) ஆனார்கள்.

ஹிஜ்ரீ 57ஆம் ஆண்டு (ஹிஜ்ரீ 58 என்றும் சொல்லப்படுகிறது.) ரமழான் மாதம் பிறை 17, செவ்வாய்க்கிழமை இரவு மதீனாவில் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், தங்களின் 66 வயதில் வபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

தங்களை இரவில் நல்லடக்கம் செய்யவேண்டும் என்று கூறியிருந்தார்கள்.

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்னாருக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள்.

(நூல்: மிர்காத்)

1. ஹழ்ரத் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்
2. ஹழ்ரத் உர்வா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சகோதரி ஹழ்ரத் அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மகனார்கள்.
3. ஹழ்ரத் காஸிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.
4. ஹழ்ரத் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

இவர்கள், ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சகோதரர் ஹழ்ரத் முஹம்மது ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனார்கள்.

5. ஹழ்ரத் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

இவர், ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சகோதரர் ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மகனார்.

இந்த ஐந்து சஹாபாக்களும், கப்ரில் இறங்கி அன்னாரை (ஜன்னத்துல் பகீயில்) நல்லடக்கம் செய்தார்கள்.

(நூல்: ஸய்யிதாத் பைத்துன் நுபுவ்வத்)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்ததின் மூலம் இவ்வுலகில் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சிறந்த உபகாரம் செய்துள்ளார்கள். தங்களின் பரிசுத்தமான வாழ்க்கையை உலக மக்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்காக வேண்டி, குறிப்பாக பெண் சமுதாயத்திற்கு சிறந்த ஆசிரியைகளை உருவாக்குவதற்காக ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை சிறந்த ஆசிரியையாக ஆக்கியதைக் கொண்டும், ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் இந்த உம்மத்துக்கும் நல்லதொரு உபகாரம் செய்துள்ளார்கள்.

(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதிவ் வஅலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்)

4. அன்னை ஹப்ஸா பின்த் உமா இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களுடைய கணவர் குனைஸ் இப்னு ஹதாபதுல் அன்ஸாரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களாக இருக்கும். இவர்கள் பலமிக்க வீரராயிருந்தார்கள். இவர்களின் வீரத்தை சரித்திர ஆசிரியர்கள் பாராட்டியுள்ளார்கள். பத்ரு யுத்தத்தில் கடுமையான காயங்கள் ஏற்பட்டு ஷஹீதானார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது: ஹழ்ரத் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கணவர் ஹழ்ரத் குனைஸ் இப்னு ஹதாபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அந்த யுத்தத்தில் ஏற்பட்ட (கடுமையான) காயத்தினால் மதீனாவில் ஷஹீதானார்கள். தங்கள் மகள் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் 18 வயதில் விதவையானதால் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சந்தித்து நீங்கள் விரும்பினால் உங்களுக்கு (என் மகள்) ஹப்ஸாவைத் திருமணம் செய்து தருகிறேன் என்றார்கள். அதற்கு ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எனது நிலைமையை கவனித்துக் கூறுகிறேன் என்றார்கள். சில நாட்கள் கழித்து இப்பொழுது எனக்கு திருமணம் செய்யும் எண்ணமில்லை என்று கூறிவிட்டார்கள்.

(பின்பு, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இன்னொரு மகள், உம்மு குல்தூம் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்து கொண்டார்கள்.)

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம், நீங்கள் விரும்பினால் (என் மகள்) ஹப்ஸாவை உங்களுக்குத் திருமணம் செய்து தருகிறேன் என்று நான் சொன்னதும், ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எதுவுமே பதில் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள். என் மகளை திருமணம் செய்துகொள்ளுமாறு உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் நான் சொன்னபோது, அவர்களது பதிலைவிட, ஹழ்ரத் அபூபக்கர் அவர்கள் எந்தப் பதிலையும் கூறாதது எனக்கு வருத்தமாக இருந்தது. சில நாட்கள் சென்றபின் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே என் மகள் ஹப்ஸாவை பெண் கேட்டார்கள். ஆகவே ஹப்ஸாவை (ஹிஜ்ரீ 3வது ஆண்டு ஷஃபான் மாதம்) திருமணம் முடித்துக் கொடுத்தேன்.

பின்பு ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னை சந்தித்தார்கள். தங்கள் மகள் ஹப்ஸா அவர்களை நான் திருமணம் செய்து கொள்ளும்படி என்னிடம் தாங்கள் சொன்னபோது தங்களுக்கு நான் பதில் சொல்லாததினால் என்மீது வருத்தப்பட்டிருக்கலாம். என்று சொன்னபோது நான் ஆம்! என்று சொன்னேன். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹப்ஸாவை திருமணம் செய்யும் நோக்கத்தை என்னிடம் சொன்னார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஹப்ஸாவை திருமணம் செய்யும் எண்ணமிருந்ததாலேயே தாங்கள் என்னை நாடியபோது நான் எந்தப் பதிலும் கூறவில்லை.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய இரகசியம் வெளியில் (என் மூலம்)

தெரியக்கூடாது என்பதாலே பெருமானாரது எண்ணத்தை தங்களிடம் கூறாமல் மௌனமாக இருந்தேன். அவர்கள் ஹப்ஸாவைத் திருமணம் செய்யாமலிருந்தால் நான் அவர்களைத் திருமணம் செய்திருப்பேன் என்று ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்

(நூல்: புகாரீ)

அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 45ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் தங்களின் 60 வயதில் வபாத் ஆனார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்).

திருமணம் என்பது சிறந்த நல்ல காரியம். சிறந்த இருவர்களுக்கு மத்தியில் திருமணம் நடந்தால் பல சிறப்புக்களை உண்டாக்கும். ஆகையால் திருமணம் நடக்கும்போது சாலிஹான நல்ல ஆணையோ, சாலிஹான நல்ல பெண்ணையோ தேடிச் செல்வது ஒரு முஸ்லிமின் மீது கடமையாக இருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனக்கு எந்தவித இழிவையும் கருதாமல் தன் மகளுக்காக நல்ல துணைவரை நாடியுள்ளார்கள். தன் மீதுள்ள (மகள்) பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்றவே, தயக்கமின்றி தெளிவான முறையில் தம் மகளைத் திருமணம் செய்யும்படி சிறந்தவர்களை நாடியுள்ளார்கள்.

இவர்களது இந்தச் செயல் நமக்கொரு படிப்பினையாகும். முஸ்லிம் என்று கூறிக்கொண்டு வாழக்கூடிய நமது கொள்கை எங்கே? நம்மிடம் மாப்பிள்ளையிருந்தால், பணக்காரப் பெண்ணைத் தேடிச் செல்கிறோம். அல்லது நம்மிடம் பெண் இருந்தால் பணக்கார

மாப்பிள்ளை வரமாட்டானா? என ஏங்கிக்கொண்டு மகளை நீண்ட நாட்களாக வீட்டிலே வைத்துக்கொண்டு காலங் கடத்துகிறோம். இப்படிப்பட்ட அறியாமைக் காலத்திலே வாழக்கூடிய நம்மவர்களுக்கு ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் (நல்ல) முயற்சி நல்லதொரு படிப்பினையாகும்.

5. அன்னை ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

பலமிக்க சஹாபியான உபைதத் இப்னுல் ஹாரித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனைவியாக இருந்தார்கள். இவர்கள் பத்ரு யுத்தத்தில் முன்னணி வீரர்களில் இடம் பெற்றிருந்தார்கள். பத்ரு யுத்தம் நடக்கும்போது, இவர்களது மனைவியான ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், சண்டையில் காயமடைந்த வீரமிக்க சஹாபாக்களுக்கு வைத்தியம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

இவர்களும் தைரியமான, வீரமிக்க பெண்ணாக இருந்தார்கள்.

பத்ரு யுத்தத்தில் ஹழ்ரத் உபைதத் இப்னு ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதானார்கள். தனது கணவர் ஷஹீதானதைப் பார்த்தும், தனது பணியான காயமடைந்த சஹாபாக்களுக்கு மருத்துவம் செய்வதிலே ஈடுபட்டிருந்தார்கள். எவ்வளவு பெரிய துக்கம்! (கணவர் மரணம்) ஏற்பட்டும் தனது பணியை (அல்லாஹ், ரஸூலுக்காக) விடவில்லை. இறுதியில் அல்லாஹு தஆலா முஸ்லிம்களுக்கு மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்தான்.

அல்லாஹ்வின் விரோதிகளான முஷ்ரிகீன்களோடு நடந்த முதல் யுத்தத்திலே (313) சஹாபாக்கள் வெற்றிவாகை சூடினார்கள்.

பத்ரு யுத்தகளத்தில் தனது கணவர் ஷஹீதானாலும் தனது பணியை விடாமல் தைரியத்தோடு, பொறுமையைக் கடைப்பிடித்து, காயமடைந்த சஹாபாக்களுக்கு வைத்தியம் செய்த ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சேவையையும், தைரியத்தையும் தியாகத்தையும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அறிந்தார்கள். தனது கணவரின் மரணத்தால் எவ்வித உதவியுமின்றி நிற்கதியான அவர்களுக்கு, அவர்களின் பாதுகாப்பைப் கருதியும் அவர்களின் தியாகத்திற்காகவும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்துகொண்டார்கள்.

அல்லாமா ஷைகு முஹம்மது மஹ்மூதுஸ் ஸவாப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களுடைய (ஜவ்ஜாத்துன் நபியுத் தாஹிராத்) கிதாபில் ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் உயர்ந்த அந்தஸ்துகளைப் பற்றியும் கூறுகிறார்கள்; ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் 60வது வயதில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். இத்திருமணம் நடந்து இரண்டு வருஷத்திற்குப் பின் அன்னை ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் (தங்களது 62 வது வயதில்) அல்லாஹ், ரஸூலுக்குத் திருப்தியான முறையில் வபாத் ஆனார்கள். நபீ

ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு இரண்டு வருஷம் மட்டுமே வாழ்ந்தார்கள்.

இந்தப் புனிதமான, சிறப்பான திருமணத்தில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்ட இஸ்லாத்தின் விரோதிகள் சொல்லக்கூடிய கருத்து என்ன? இந்த உயர்ந்த புனிதமான திருமணத்தில், இட்டுக்கட்டக்கூடிய இஸ்லாத்திற்கெதிரான அந்தப் பொய்யர்கள் எதையாவது தவறைக் கூற முடியுமா?

இத்திருமணம், மனோ இச்சைக்காக, ஆசைக்காக, நடைபெற்றது என்று அவர் (பொய்யர்)கள் கூறுவார்களா?

அல்லது உலகிற்கே அருட்கொடையாக வந்த அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உயர்ந்த நல்லெண்ணம், இரக்கம், உபகாரம் இவைகளுக்காகவே இத்திருமணம் நடந்தது என்பதை அந்த பொய்யர்கள் உண்மையை ஏற்றுக்கொள்வார்களா?

எங்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது தேவையில்லாமல் அவதூரானவைகளைக் கூறக்கூடிய பொய்யர்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளட்டும்! அல்லாஹ்! (அவர்) பொய்யர்களுக்கு கொடுத்த அறிவில் மோசம் செய்ய (பொய்சொல்லா)மல் (பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது) உண்மையைச் சொல்வார்களாக!

6. அன்னை உம்மு சல்மா ரழியல்லாஹுஅன்ஹா அவர்கள்

ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும், அவர்களுடைய கணவர் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள். அதாவது 10 நபர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் மனைவி உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் போது அல்லாஹ், ரஸூலுக்காக மக்காவைத் துறந்து மனைவியுடன் அபிசீனியா நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

அபிசீனியா நாட்டிற்குச் செல்லும் வழியில் இவர்களுக்கு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சல்மா என்று பெயரிட்டனர்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்துல் அஸத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் உஹத் யுத்தத்தில் கலந்து கொண்டபோது கடுமையான காயம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டார்கள். அதன் காரணமாக ஹிஜ்ரீ 4ஆம் ஆண்டு மரணமடைந்து விட்டார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்).

ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தங்கள் கணவரின் மரணத்தால் உதவி செய்பவர் யாருமின்றி

அனாதையாகிவிட்ட தங்கள் நான்கு (1. பர்ரா, 2. சல்மா 3.உம்ரா 4. தர்ர(ஹ்) மக்களோடு வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் சிரமமான சூழ்நிலையைக் கருதி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் செய்துகொள்ள முன் வந்தார்கள். தான் மீண்டும் வாழ்க்கைப்பட விரும்பவில்லை. ஏனெனில் நான் வயதானவராக இருக்கிறேன். மேலும் நான் எனது அனாதைப் பிள்ளைகளுக்குத் தாயாக இருக்கிறேன். மேலும் நான் அதிகமான வெட்கமுடையவர் என்று ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள். அவர்களின் கவலையான காரணங்களுக்கு நபீஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பதில் சொல்லி அனுப்பினார்கள். அதாவது உங்கள் (அனாதைப்) பிள்ளைகளை நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். உங்களின் உள்ளத்திலிருக்கும் (மறுமணம்) வெட்கம் நீங்குவதற்கு அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்கிறேன். உங்கள் வயதைப் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொல்லி அனுப்பிய பிறகு ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் திருப்திக்குப் பின் திருமணம் செய்துகொர்ண்டார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் (அனாதைப்) பிள்ளைகளை மிகவும் அன்பாக ஆதரித்து வளர்த்து வந்தார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அன்பான ஆதரவால் தங்களின் தந்தையின் பிரிவை எண்ணி வருத்தப்பட வேண்டிய நிலை அக்குழந்தைகளுக்கு இல்லை. ஏனெனில் அவர்களின் தந்தையைவிட மிகவும் இரக்கம் காட்டக்கூடிய தந்தையாக

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

அன்னை உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு எத்தனையோ சிறப்புகள் இருக்கின்றன. அவர்கள், அறிவு ஞானமுடையவர்களாகவும், சிந்தனை ஆற்றல் பெற்றவர்களாகவும் சிறந்த ஆலோசகராகவும் இருந்தார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய கவலை இவர்களின் ஆலோசனையின் பிரகாரமே நீங்கியது.

ஹழ்ரத் அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பு

ஹிஜ்ரீ 6ஆம் ஆண்டு ஹுதைபிய்யா உடன்படிக்கை

மக்காவிலிருந்து எவர் முஸ்லிமாகி மதீனாவுக்கு வந்தால் அவரை மக்காவிற்கு திருப்பியனுப்பி விடவேண்டும். எவர் மதீனாவிலிருந்து இஸ்லாத்தை விட்டு மக்காவுக்கு வந்தால் மதீனாவுக்கு திருப்பியனுப்ப வேண்டக்கூடாது. மேலும் இந்த ஆண்டு முஸ்லிம்கள் மக்காவிற்குள் நுழையக் கூடாது. இது போன்று எல்லா நிபந்தனைகளும் எதிரி (முஷ்ரிகீன்)களுக்கு சாதகமாகவே இருந்தன.

அல்லாஹ்வின் நாட்டத்தின் பேரில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முஷ்ரிகீன் களின் நிபந்தனைகளை ஏற்று கையெழுத்திட்டார்கள்.

இந்த ஆண்டு மக்காவுக்கு நுழைய முடியாததால் இஹ்ராமிலிருந்த முஸ்லிம்கள் அனைவர்களும் மொட்டையடித்து, அல்லது முடியைக் குறைத்து ஹலாலாகி,

குர்பானி கொடுத்துவிட்டு, மீண்டும் மதீனாவுக்குத் திரும்பவேண்டும் என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

தீர்மானங்கள் எல்லாம் எதிரிகளுக்கு சாதகமாக இருந்ததாலும் தங்களை மக்காவுக்கு அநியாயமாக நுழையக்கூடாது என்று தடுக்கப்பட்டதாலும் சஹாபாக்கள் ஆவேசப்பட்டார்கள். ஆகையால் (மொட்டையடித்து அல்லது முடியைக் குறைத்து) தாங்கள் ஹலாலாகாமல் இருந்தார்கள். இவ்விஷயம் பெருமானார் ஹல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மிகப் பெரிய கவலையாக இருந்தது.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் (கவலையோடு) தங்கள் மனைவி ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் வந்து மனிதர்கள் அழிந்துவிட்டார்கள்! ஹலாலாகி விடுங்கள்! என்று சொன்னேன். ஆனால் ஹலாலாகாமல் இருக்கிறார்களே! என்று சொன்னார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கவலை நீங்குவதற்கு ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் யோசனை சொன்னார்கள்; அதாவது தாங்கள் சஹாபாக்களிடம் சென்று முதலில் நீங்கள் மொட்டையடித்து ஹலாலாகிவிட்டால் சஹாபாக்கள் எவ்வித மறுப்புமின்றி உங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களும் மொட்டையடித்து ஹலாலாகிவிடுவார்கள் என்று சொன்னார்கள்.

ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் ஆலோசனை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு நல்லதாகத் தெரிந்தது.

முடி இறக்கக்கூடியவரை அழைத்துக் கொண்டு (சஹாபாக்களுக்கு மத்தியில்) முதலில் மொட்டையடித்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மொட்டையடித்து ஹலாலாவதைப் பார்த்த சஹாபாக்கள் எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு மொட்டையடித்து (சிலர் முடியைக் குறைத்துக்கொண்டு) ஹலாலானார்கள்.

ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறந்த யோசனையின் பேரில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த மிகப் பெரிய கவலை நீங்கியது.

மரணம்

அன்னை உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 59 ஆம் ஆண்டு தங்களின் 84ஆம் வயதில் மதீனாவில் வபாத் ஆனார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) அன்னாரின் ஜனாஸா ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

7. அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களுடைய முதல் பெயர் பர்ரா என்பதாகும். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஜைனப் என்று பெயர் மாற்றம் செய்தார்கள். இவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய மாமி மகளாராக இருக்கும். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஜைது இப்னு ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு திருமணம் முடித்து வைத்தார்கள். இவர்களின் வாழ்க்கையில்

மகிழ்ச்சி தொடரவில்லை. ஆகையால் அல்லாஹ்வின் நாட்டத்தின் பேரில் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தலாக் கூறிவிட்டார்கள். (இதன் விபரம் முன்னால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது).

ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தலாக் விட்டது அவ்விருவர்களுக்கு மத்தியில் நடந்த மன வருத்தங்களே யாகும். இஸ்லாமிய விரோதிகள் கூறுவது போன்று வேறு எந்த காரணமும் கிடையாது. இஸ்லாத்தின் விரோதிகள் கூறக்கூடிய அனைத்து கூற்றுகளை விட்டும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள்.

ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள். சில நாட்களுக்கு முன் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அடிமையாக இருந்தார்கள். இஸ்லாத்தில் தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்று வித்தியாசமில்லை என்பதை நிலைநாட்டுவதற்காவும் அறியாமை காலத்திலிருந்த வளர்ப்புப் பிள்ளை விஷயத்தின் தவறான வழிமுறையை ஒழிப்பதற்காக இவ்விருவர்களுக்கு மத்தியில் அல்லாஹு தஆலாவின் நாட்டத்தின் பேரில் (முதலில்) திருமணம் நடந்தது.

ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களைத் திருமணம் செய்துகொள்ளுமாறு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னபோது தனது குடும்பத்தின் சிறப்பைக் கருதி முதலில் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சம்மதிக்க மறுத்துவிட்டார்கள்.

அப்பொழுது அல்லாஹ்வின் திருவசனம் இறங்கியது:

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப் பற்றி கட்டளையிட்டுவிட்டால் அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்ட எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. ஆகவே அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் மாறு செய்வார்களே யானால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.

(அல் குர்ஆன் 33–36)

இவ்வாறு இறைவசனம் இறங்கியதும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் சொல்லுக்காக ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு (மனைவியாக) சம்மதித்தார்கள். உடலை ஜைதுக்கு கொடுத்தார்களே தவிர மனப்பூர்வமாக உள்ளத்தைக் கொடுக்கவில்லை. இவ்விருவர்களின் வாழ்க்கையில் (முன்கூறியபடி) மகிழ்ச்சி தொடரவில்லை. இவர்களுடைய குடும்ப வாழ்க்கையில் அதிருப்தி அதிகரிக்கவே அல்லாஹ்வின் நாட்டத்தின் பேரில் ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தலாக் கூறி விட்டார்கள்.

வளர்ப்பு பிள்ளை விஷயத்தில் தவறான வழிமுறையை ஒழிப்பதற்காக, இஸ்லாமிய விரோதிகளின் பழிச்சொல்லையும் பொருட்படுத்தாமல் அல்லாஹு தஆலா, ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை (ஹிஜ்ரீ 5ஆம் ஆண்டு அன்னாருக்கு 35 வயதாக இருக்கும்போது) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டோம் என்ற ஆயத்தை இறக்கினான்.

அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களின்சிறப்பு

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஹழ்ரத் உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சொன்னார்கள்; ஜைனப் பின்த் ஜஹ்ஷ் அவர்கள் "அவ்வாஹத்துன்" என்றார்கள். அப்பொழுது ஒரு சஹாபி, அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! "அவ்வா ஹத்துன்" என்றால் என்ன? என்றார். பணிவானவர், அல்லாஹ்வைப் பயப்படக் கூடியவர், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். பின்பு நிச்சயமாக (நபீ) இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) இரக்கம் உடையவராகவும், பொறுமையும், சாந்தமும் உடையவராகவும் இருந்தார் (9–114) என்ற இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

(நூல்: அல் இஸ்தீஆப்)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்; தீன் விஷயத்தில் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் அவர்களைவிட சிறந்த பெண்ணை நான் பார்த்ததில்லை. அவர்கள் அல்லாஹு தஆலாவை அதிகம் பயப்படுவார்கள், உண்மை பேசுவார்கள், உறவினர்களோடு சேர்ந்து இருப்பார்கள், அதிகமாக தர்மம் செய்வார்கள். இன்னும் அல்லாஹு தஆலாவின் நெருக்கத்தை உண்டாக்கக்கூடிய அனைத்து நல்ல காரியங்களுக்காகவும் தங்களை தயார்ப்படுத்திக் கொள்வார்கள்.

(நூல்: புகாரீ–முஸ்லிம்)

ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அன்பளிப்பாக 12 ஆயிரம் திர்ஹம் அனுப்பி வைத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்ட ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், யா அல்லாஹ்! அடுத்த ஆண்டு இந்தப் பணம் என்னிடம் வர வைத்து விடாதே! என்று துஆச் செய்தார்கள். மேலும் அது "பித்னா" துன்பமானது என்று கூறினார்கள். பின்பு 12 ஆயிரம் திர்ஹம் அனைத்தையும் உறவினர்களுக்கும், தேவையுடையவர் களுக்கும் தர்மம் செய்து விட்டார்கள்.

இவ்விஷயம் ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தெரிந்ததும் ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டிற்குச் சென்று சலாம் சொல்லிவிட்டு நான் அனுப்பிய 12 ஆயிரம் திர்ஹம் அனைத்தையும் தர்மம் செய்துவிட்டீர்கள் என்று அறிந்தேன். ஆகையால் மேலும் ஆயிரம் திர்ஹம் அனுப்பி வைக்கிறேன், பெற்றுக்கொள்ளுங்கள், என்று கூறிவிட்டுச் சென்றார்கள். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆயிரம் திர்ஹம் அனுப்பி வைத்தார்கள். அதையும் ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தர்மம் செய்துவிட்டார்கள்.

ஹழ்ரத் ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு மரணம் நெருங்கியபோது, எனக்காக என்னிடம் "கபன்" துணி இருக்கிறது. அமீருல் முஃமினீன் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் எனக்காக

“கபன்” துணி அனுப்புவார்கள். இரண்டில் ஒன்றை தர்மம் செய்து விடுங்கள். உங்களுக்கு முடிந்தால் நான் உடுத்தியிருந்த ஆடையையும் தர்மம் செய்து விடுங்கள் என்று கூறினார்கள்.

(நூல்: ஸய்யிதாத் பைத்துன் நுபுவ்வத்)

மரணம்

அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், ஹிஜ்ரீ 20வது ஆண்டு (ஹிஜ்ரீ 21 என்றும் சொல்லப்படுகிறது). தங்களின் 53வது வயதில் மதீனாவில் வபாத் ஆனார்கள். ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்னாருக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். இவர்களின் மரணத்தால் மதீனாவாசிகள் ஜன்னத்துல் பகீவிற்கு கூட்டமாக திரண்டு விட்டார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மரணமடைந்த பிறகு அன்னாரின் மனைவிமார்களில் இவர்களே முதலில் மரணமானார்கள்.

இவர்களிடமிருந்து ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா இன்னும் மற்ற சஹாபாக்களும் ஹதீஸ்களை (ரிவாயத்) அறிவித்துள்ளனர்.

8. அன்னை ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களின் முதல் பெயர் பர்ரா என்பதாகும். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஜுவைரிய்யா என்று பெயர் மாற்றம் செய்தார்கள்.

அன்னை ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், ஹிஜ்ரீ 56ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் தங்களின் 65வது வயதில் மரணமடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

இவர்களிடமிருந்து ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள், ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகியோர் ஹதீஸ்களை ரிவாயத் செய்துள்ளனர்.

(இவர்களைப் பற்றி முன்னால் தெளிவாக எழுதப்பட்டுள்ளது)

9. அன்னை ஸபிய்யா பின்த் ஹுயய்யி இப்னு அக்தப்

ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

அன்னை ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 50வது ஆண்டு மரணமடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

அன்னாரின் ஜனாஸா மதீனாவில் ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவர்களிடமிருந்து ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு

அன்ஹு அவர்கள், ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் ஆகிய இருவரும் ஹதீஸ்களை ரிவாயத் செய்துள்ளனர்.

(இவர்களின் இஸ்லாத்தைப் பற்றியும் திருமணத்தைப் பற்றியும் முன்னால் தெளிவாக எழுதப்பட்டுள்ளது)

ஹழ்ரத் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹழ்ரத் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், ஹழ்ரத் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பற்றி "யஹூதி மகள்" என்று கூறினார்கள். இதை அறிந்த ஹழ்ரத் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அழுதார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்ற போது அவர்கள் அழுது கொண்டிருக்க எதற்காக அழுகிறாய்? என்று கேட்டார்கள். ஹப்ஸா என்னை யஹூதி மகள் என்று கூறுகிறார் என்று சொன்னார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், (ஸபிய்யா அவர்களிடம் அவர்களின் முன்னோர்களான நபீ இஸ்ஹாக் நபீ ஹாரூன் அலைஹிமுஸ் ஸலாம் அவ்விருவர்களை கவனித்து) நீ நபியுடைய மகளாக இருக்கிறாய். உன்னுடைய (ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் முன்னோர்களான நபீ இஸ்மாயில், நபீ மூஸா அலைஹிமுஸ் ஸலாம் இவ்விருவர்களை கவனித்து) பெரிய தகப்பனார் நபியாக இருக்கும். இப்பொழுது நீ ஒரு நபிக்கு (எனக்கு) மனைவியாக இருக்கிறாய். (இவ்வளவு சிறப்புகள் உனக்கு இருக்க) எதன் காரணத்தால் ஹப்ஸா உன்னைவிட

பெருமைப்படுகிறார்? என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வினவினார்கள்; பின்பு, ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் யா ஹப்ஸா அல்லாஹ்வைப் பயந்துகொள்! என்று கூறினார்கள்.

(நூல்: திர்மிதி – நஸாஈ)

10. அன்னை உம்மு ஹபீபா

ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களின் முதல் பெயர் ''ரம்லா'' என்பதாகும். இவர்கள் தனது கணவர் ஹழ்ரத் உபைதுல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு (இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில்) அபிசீனிய நாட்டுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அபிசீனிய நாட்டில் ஹழ்ரத் உபைதுல்லாஹ் இப்னு ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மரணமடைந்துவிடவே, ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் விதவையானார்கள். இவர்களின் இக்கட்டான நிலையைக் கருதி இவர்களின் ஈமானின் பாதுகாப்புக்காக அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களே திருமணம் செய்துகொள்ள முன் வந்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் விருப்பத்தின் பேரில் அபிசீனிய நாட்டு மன்னர் நஜ்ஜாஷி அவர்கள் 4 ஆயிரம் திர்ஹம்களை கொடுத்தனுப்பி ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்து கொடுக்க உதவினார். இவர்களின் திருமணம் ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு மதீனாவில் நடந்தது. அதிகம் மஹர் பெற்றவரும் இவரே.

(இவர்களைப் பற்றி முன்னால் விபரமாக எழுதப்பட்டுள்ளது.)

அன்னை உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 44ஆம் ஆண்டு மதீனாவில் வபாத் ஆனார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) இவர்களிடமிருந்து பல சஹாபாக்கள் ஹதீஸ்களை (ரிவாயத்) அறிவித்துள்ளனர்.

11. அன்னை மைமூனா பின்த் ஹாரிதுல் ஹிலாலிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர்களுடைய பெயர் “பர்ரா” என்பதாக இருந்தது. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மைமூனா என்று பெயர் வைத்தார்கள்.

விதவையான இவர்களை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹிஜ்ரீ 7ஆம் ஆண்டு, துல்கஃதா மாதம், மக்காவிலிருந்து 9 மைல் தொலைவிலுள்ள “உம்ரத்துல் களா” என்ற இடத்தில் திருமணம் செய்தார்கள். அதே இடத்தில் ஹிஜ்ரீ 61–ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். அன்னாரது ஜனாஸாத் தொழுகையை அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் நடத்தினார்கள். இவர்களிடமிருந்து ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் போன்ற கணிசமான சஹாபாக்கள் ஹதீஸ்களை ரிவாயத் செய்துள்ளனர்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் எல்லா மனைவிமார்களும் பரிசுத்தமானவர்கள். அல்லாஹுதஆலா, அப்பெண்களுக்கு பெருமானார்

ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மூலம் தனி அந்தஸ்த்தை கொடுத்து முஃமீன்களுக்கு தாய்மார்களாக ஆக்கினான்.

يٰنِسَآءَ النَّبِيِّ لَسْتُنَّ كَاَحَدٍ مِّنَ النِّسَآءِ

நபியின் மனைவிமார்களே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப்போல் இல்லை என்று அல்லாஹ் கூறினான்

(அல் குர்ஆன் 33–32)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் செய்தபோது முனாபிக்களில் தல்ஹத் இப்னு உபைதுல்லாஹ் என்பவர் முஹம்மதுக்கு என்ன? அவர் நமது பெண்களைத் திருமணம் செய்கிறார். அல்லாஹ் மீது சத்தியமாக அவர் (முஹம்மது) இறந்து விட்டால் அவர் மனைவிகளை நமக்கு சீட்டுப்போட்டு எடுத்து (மனைவி யாக்கி)க் கொள்ளவேண்டியதுதான் என்று கூறினார்.

அப்பொழுது அல்லாஹு தஆலா;

وَمَا كَانَ لَكُمْ اَنْ تُؤْذُوْا رَسُوْلَ اللّٰهِ وَلَآ اَنْ تَنْكِحُوْٓا اَزْوَاجَهٗ مِنْۢ بَعْدِهٖٓ اَبَدًا ؕ اِنَّ ذٰلِكُمْ كَانَ عِنْدَ اللّٰهِ عَظِيْمًا ۝

அல்லாஹ்வின் தூதரை நோவினை செய்வது உங்களுக்கு ஆகுமானதல்ல. மேலும் அவருடைய மனைவிகளை அவருக்குப் பின்னர் நீங்கள் திருமணம்

செய்வதும் கூடாது. நிச்சயமாக இது அல்லாஹ் இடத்தில் மிகப் பெரிய (பாபமான) காரியமாகும் என்ற (33–53) வசனத்தை இறக்கி வைத்தான்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் செய்த திருமணங்களெல்லாம் பலவிதமான இலட்சியங்களுக்காகவே நடைபெற்றன. இஸ்லாம் மார்க்கத்தின் நல்ல இணக்கத்திற்காகவும் இஸ்லாம் மார்க்கத்தில் நல்லதொரு வழிமுறையை உருவாக்குவதற் காகவும் மாறுபட்ட உள்ளங்(மனிதர்)களை ஒன்று சேர்ப்பதற்காகவும், பெரும்பெரும் கூட்டத்தின் சிறந்த தலைவர்களையெல்லாம் தங்கள் (இஸ்லாத்தின்) பக்கம் கொண்டு வருவதற்காகவும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 11 திருமணங்கள் செய்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவிமார்களில் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தவிர அனைவர்களும் விதவையானவர்களே. மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகே அதாவது ஹிஜ்ரீ 2ஆம் ஆண்டுக்குப் பின்னரே (மேலே கூறப்பட்ட இலட்சியங்களுக்காகவே) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 11 பெண்களைத் திருமணம் செய்தார்கள்.

ஹிஜ்ரீ 2ஆம் ஆண்டிலிருந்து ஹிஜ்ரா 8ஆம் ஆண்டுவரை முஸ்லிம்களுக்கு (சத்தியத்திற்கு)ம் குப்பார்களுக்கும் (அசத்தியத்திற்கும்) மத்தியில் பல யுத்தங்கள் நடந்தன. இடைப்பட்ட ஆறு ஆண்டுகளில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரி (காபிர்)களால் சொல்லொண்ணா துன்பங்கள் ஏற்பட்டன. அத்தகைய சோதனையான காலங்களில் எதிரிகளின் எதிர்ப்பை குறைப்பதற்காக, மனிதர்களின் (கொள்கை

மாறுபட்ட) உள்ளங்களை இஸ்லாத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ப்பதற்காக (இன்னும் மேலே கூறப்பட்ட பல இலட்சியங்களுக்காக) ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 11 திருமணங்கள் செய்தார்கள். அவர்கள் செய்த ஒவ்வொரு திருமணத்தின் மூலமும் உயர்ந்த இலட்சியங்களைக் காண முடியும்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் 11 பெண்களைத் திருமணம் செய்து கொண்ட காலங்கள்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மரணத்திற்குப் பின் ஹழ்ரத் சவ்தா ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, இருவர்களையும் திருமணம் செய்தார்கள். ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சிறிய வயதின் காரணமாக திருமணத்திற்கு பின்னும் தங்களுடைய வீட்டிலேயே இருந்துவிட்டார்கள். சில வருஷங்களுக்குப் பிறகுதான் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு மதீனாவில் ஹிஜ்ரீ 2ஆம் ஆண்டு சேர்ந்து வாழ ஆரம்பித்தார்கள். இந்த நேரத்தில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வயது 54ஆக இருந்தது. இந்த வயதில்தான் பலதார மணம் ஆரம்பமானது.

இதற்குப் பின் ஒரு வருடம் கழித்து ஹழ்ரத் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்தார்கள். பின்பு சில மாதங்கள் சென்றபின் ஹழ்ரத் ஜைனப் பின்த் குஜைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்தார்கள். (இவர்கள் 18 மாதங்கள் மட்டும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு வாழ்ந்து, பின்பு மரணமடைந்துவிட்டார்கள்)

பிறகு ஹிஜ்ரீ 4ஆம் ஆண்டு ஹழ்ரத் உம்மு சல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்தார்கள். ஹிஜ்ரீ 5ஆம் ஆண்டு ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்தார்கள். இந்நேரம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் வயது 58ஆக இருந்தது.

பின்பு, ஹிஜ்ரீ 6ல் ஹழ்ரத் ஜுவைரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்தார்கள். ஹிஜ்ரீ 7ல் ஹழ்ரத் உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் சபிய்யா ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் மைமூனா ரழியல்லாஹு அன்ஹா இம்மூன்று பேரையும் மணந்தார்கள். இத்தனை எண்ணிக்கைகளும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கடைசி காலத்தில் ஏற்பட்டது.

ஆகவே, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் 11 திருமணங்களில் பல தத்துவங்கள் நிறைந்திருப்பதை அறிய முடிகிறது. மற்ற மனிதர்களின் திருமண நோக்கங்களை விட்டும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள்.

அறிவுள்ளவர்கள் உண்மையை ஏற்றுக்கொள்வார்கள்

உள்ளங்கள் இருளடைந்து இறுகிப்போன இஸ்லாத்தின் விரோதிகள் கூறுவது போன்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மனோ இச்சைக்காக திருமணம் செய்தார்கள் என்றிருந்தால் விதவைகளைத் திருமணம் செய்யாமல் கன்னிப்பெண்களையல்லவா? திருமணம் செய்திருப்பார்கள். என்றாலும் உண்மையைச் சொல்லாமல் பொய் பேசியே பழக்கப்பட்ட, இருளடைந்த இதயம் பெற்ற இஸ்லாத்தின் விரோதிகளின் கண்கள் உண்மையைக் காணாமல் குருடாகிவிட்டன.

بَلْ نَقْذِفُ بِالْحَقِّ عَلَى الْبَاطِلِ فَيَدْمَغُهُ فَإِذَا هُوَ زَاهِقٌ ۚ وَلَكُمُ الْوَيْلُ مِمَّا تَصِفُونَ

நாம் சத்தியத்தைக் கொண்டு அசத்தியத்தின்மீது வீசுகிறோம். அதனால் அசத்தியம் அழியக்கூடியதாகும். (இஸ்லாத்தின் விரோதிகளான) நீங்கள் (பொய்யை) இட்டுக் கட்டிக் கூறுங்காரணத்தால் உங்களுக்கு (வைல்) என்னும் நரக ஓடை உண்டு, என்று அல்லாஹ் (எச்சரிக்கை செய்து) குர்ஆன் ஷரீபில் கூறுகின்றான்.

அன்னை மாரியத்துல் கிப்திய்யா

ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எகிப்திலுள்ள கிப்தி அரசர் முகவ்கிஸ் என்பவருக்கு இஸ்லாமிய அழைப்பைக் கொடுத்தார்கள். கி.பி. 628. ஹிஜ்ரீ 7ல் ஹழ்ரத் ஹாதிப் இப்னு அபீ பல்த்தஆ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் இஸ்லாத்தை ஏற்கும்படி தூது அனுப்பினார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இஸ்லாமிய அழைப்புக் கடிதத்தைப் பெற்று மரியாதையாக தன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டார். பிறகு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அவர் அனுப்பிய பல அன்பளிப்புகளில் மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் இருந்தார்கள்.

கிப்தி நாட்டிலிருந்து மதீனாவுக்கு வரும் வழியில் மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

ஹழ்ரத் ஹாதிப் இப்னு அபீ பல்த்தஆ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஹிஜ்ரீ 8ஆம் ஆண்டு மதீனா வந்து சேர்ந்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தமக்கு சொந்தமாக்கிக்கொண்டார்கள். இவர்கள் மூலம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு இப்ராஹீம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹிஜ்ரீ 8, கி.பி. 630,ஏப்ரல் மாதம் பிறந்தார்கள். இப்ராஹீம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒன்றறை வயது ஆகும்போது இறந்து விட்டார்கள். நபீயவர்கள் தம் மகனாரின் மரணத்தால் பெரிதும் கவலையடைந்தார்கள்.

ஹழ்ரத் மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஹிஜ்ரீ 16ல் வபாத் ஆனார்கள். இவர்களின் ஜனாஸாத் தொழுகைக்காக ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜனங்களை சேகரம் செய்து தாங்களே தொழுகை நடத்தினார்கள். அன்னாரின் புனித உடலை "ஜன்னத்துல்" பகீயில் நல்லடக்கம் செய்தார்கள்.

"அஹ்லுபைத்"

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் குடும்பத்தார்கள்

ஹழ்ரத் ஸஃது இப்னு அபீ வக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; முபாஹலா ஆயத்: நபீயே! முழு விபரம் உமக்கு வந்து சேர்ந்த பின்னரும் எவரேனும் ஒருவர் உம்மிடம் இதைக் குறித்து தர்க்கம்

செய்தால்! வாருங்கள்! எங்கள் புதல்வர்களையும், உங்கள் புதல்வர்களையும் எங்கள் பெண்களையும், உங்கள் பெண்களையும், எங்களையும் உங்களையும் அழைத்து (ஒன்று சேர்த்துக் கொண்டு) பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்! என்று நாம் பிரார்த்திப்போம், என்று நீங்கள் கூறுங்கள்.

(அல் குர்ஆன் 3–61)

அல்லாஹ்வின் இவ்வசனம் இறங்கியபோது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அலீ, பாத்திமா, ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹும் இவர்களை அழைத்து யா அல்லாஹ்! இவர்கள் எனது "அஹ்லுபைத்" – குடும்பத்தார்கள் என்று கூறினார்கள்.

(நூல்: முஸ்லிம்)

(முபாஹலா: ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அசத்தியத்தில் இருப்பின் தமக்கு அழிவு ஏற்படட்டும் என்று சாபமிட்டுக் கொள்வது)

ஹழ்ரத் அபூதர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; (இவர்கள் 5வது நபராக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்) அன்னார் கஃபாவின் வாசலைப் பிடித்துக் கொண்டு கூறினார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொல்ல நான் கேட்டேன், அறிந்துகொள்ளுங்கள்! உங்களிடத்தில் எனது குடும்பத் தார்களுக்கு உதாரணமாகிறது. நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் கப்பலைப் போன்றதாகும். நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் கப்பலில் (ஈமான் கொண்டவர்) ஏறியவர் வெற்றியடைந்தார். (ஈமான் கொள்ளாதவர்) அதில் ஏறாதவர் அழிந்தார். (அதைப் போன்று எவர் எனது குடும்பத்தார்கள் மீது அன்பு வைத்து ஆதரவு கொடுப்பாரோ அவர் இரு

உலகிலும் வெற்றியடைவார். எனது குடும்பத்தார்களை எவர் வெறுத்து, இடையூறு செய்வாரோ அவர் இரு உலகிலும் அழிவார்) என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஹழ்ரத் ஜைது இப்னு அர்கம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; (இறுதி ஹஜ்ஜை முடித்துவிட்டு மக்காவிலிருந்து மதீனா திரும்பும் வழியில் தண்ணீர் உள்ள) ஒரு இடத்தில் நபீஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எங்களுக்கு உபதேசம் செய்தார்கள். முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். அல்லாஹ்வுக்கு நன்றி கூறினார்கள். பின்பு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள், அறிந்து கொள்ளுங்கள்! ஜனங்களே! நான் உங்களைப் போல மனிதன்தான், (இப்பொழுது எனக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் அறிவிப்பு வந்துள்ளது. என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (இZஜ்ராயீல் அலைஹிஸ் ஸலாம்) வரப்போகிறார். அவர் அழைப்புக்கு (இவ்வுலகத்தை விட்டு அல்லாஹ்விடம் செல்ல) சம்மதம் தெரிவிப்பேன்.

உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்லுகிறேன். (அதில் ஒன்று) அல்லாஹ்வின் வேதம், அதில் (வழிகேட்டைவிட்டு) நேர்வழியும் (மறுமையில்) பிரகாசமும் இருக்கிறது. ஆகையால் அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு அதன்படி நடந்து கொள்ளுங்கள், என்று ஆர்வமூட்டிப் பேசினார்கள். (இரண்டாவது) எனது குடும்பத்தார்கள் "அஹ்லுபைத்" என்று கூறினார்கள். எனது குடும்பத்தார் விஷயத்தில் அல்லாஹ்வை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். எனது குடும்பத்தார்கள் மீது அன்பு வைத்து உதவியாக இருங்கள். அவர்களுக்கு இடையூறு செய்யாதீர்கள். எனது குடும்பத்தார்கள்

விஷயத்தில் அல்லாஹ்வை மீண்டும் நினைவூட்டுகிறேன், என்று (மீண்டும் மீண்டும்) நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்;

அல்லாஹு தஆலா உங்களுக்கு அளித்த நிஃமத்துக்காக அவனைப் பிரியப்படுங்கள். அல்லாஹ்வைப் பிரியப்பட்டதற்காக என்னைப் பிரியப்படுங்கள். என்னைப் பிரியப்பட்டதற்காக எனது குடும்பத்தார்களைப் பிரியப்படுங்கள், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: திர்மிதீ)

நபீ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மக்கள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் எல்லாக் குழந்தைகளும் ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலமே பிறந்தவர்கள். இப்ராஹீம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மட்டுமே ஹழ்ரத் மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலம் பிறந்தார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பிள்ளைகளில் மூத்தவர். காஸிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். நபீ பட்டம் கிடைப்பதற்கு முன் பிறந்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பிள்ளைகளில் முதலில் காஸிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் (குழந்தையாக இருக்கும் போது) இறந்தார்கள்.

அன்னை ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இவர்கள் பிறக்கும்போது நபியவர்களின் வயது 30.

அன்னை ருகையா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். இவர்கள் பிறக்கும்போது நபியவர்களின் வயது 33.

அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். இவர்கள் பிறக்கும்போது நபியவர்களின் வயது 35.

அன்னை உம்மு குல்ஸூம் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள். அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மகனார் காஸிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இறந்த பின்பு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் இறந்து விட்டார்கள். மாரியத்துல் கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மூலம் பிறந்த இப்ராஹீம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்து 16வது மாதத்தில் ஹிஜ்ரீ 10வது ஆண்டில் வபாத் ஆனார்கள். கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கடைசி பிள்ளையாகும்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெண் மக்கள் எல்லோரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு ஹிஜ்ரத் செய்தார்கள்.

ஹழ்ரத் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் அபூ அய்யூப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், கியாமத் நாளில் (மஹ்ஷர் மைதானத்தில்) ஓர் அறிவிப்பாளர் அர்ஷின் உட்புறத்திலிருந்து,

ஓ கூட்டத்தார்களே! உங்களுடைய தலையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்! உங்கள் பார்வையை கீழ் நோக்கி வைத்துக் கொள்ளுங்கள்! முஹம்மதுடைய மகள் பாத்திமா (சொர்க்கத்திற்கு) சிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் செல்லப் போகிறார், என்று கூறுவார். 70 ஆயிரம் (ஹூருல் ஈன்) சுவர்க்க கன்னிப் பெண்களுடன் பாத்திமா சிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் மின்னல் வேகத்தில் சென்று விடுவார். என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல்: மிர்காத்)

ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் உக்பத இப்னுல் ஹாரித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்அஸர் தொழுத பின் வெளியில் வந்தார்கள். அவர்களுடன் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்தார்கள் (வெளியில்) ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தோள் மீது தூக்கி வைத்துக் கொண்டு எனது தந்தை உங்களுக்கு அற்பணமாகட்டும். (ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்) நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் போன்று இருக்கிறார்கள் அலீ அவர்களைப் போன்று இல்லை, என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சிரித்தார்கள்.

(நூல்: புகாரீ)

ஹழ்ரத் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ரமழான் மாதம் மதீனாவில் பிறந்தார்கள். ஹிஜ்ரீ 50ஆம் ஆண்டு (ஹிஜ்ரீ 49 என்றும் சொல்லப் படுகிறது) மரணமடைந்தார்கள். ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹழ்ரத் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்

ஹழ்ரத் உம்முள் பள்ல் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்; (இவர்கள் ஹழ்ரத் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்ட இரண்டாவது பெண் இவர்களேயாகும். மேலும் இவர்கள், உம்முல் முஃமினீன் ஹழ்ரத் மைமூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சகோதரியாவார்கள்).

ஹழ்ரத் உம்முல் பள்ல் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! நேற்று இரவு கனவு கண்டேன். அது மிக துக்கமானதாக இருந்தது, என்று கூறினார்கள். அது என்ன? என்று கேட்டார்கள். அதைக் கேட்பதற்கே கஷ்டமாக இருக்கும் என்று ஹழ்ரத் உம்முல் பள்ல் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள். மீண்டும் அது என்ன? என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கேட்டார்கள். உங்களுடைய உடலிருந்து ஒரு பகுதி வெட்டப்பட்டு எனது மடியில் வைக்கப்பட்டது. இவ்வாறு கனவு கண்டேன் என்று கூறினார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இது நல்ல கனவு என்று கருதுகிறேன். இன்ஷா அல்லாஹ்! பாத்திமா ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பார் அது உனது மடியில் இருக்கும் என்று கூறினார்கள் (நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னது போன்று) பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹுஸைனைப் பெற்றெடுத்தார்கள். அக்குழந்தை எனது மடியில் இருந்தது.

பின்பு ஒரு நாள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்றேன். அக்குழந்தையை (ஹுஸைன்) தங்கள் மடியில் வைத்து இருந்தார்கள். (சிறிது நேரத்தில்) நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களை என்னை விட்டும் திருப்பிக்கொண்டார்கள். நான் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பார்த்தேன். கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் நபீ அவர்களே! என் தாயும் தந்தையும் தங்களுக்கு அற்பணமாகட்டும்! எதன் காரணத்தால் அழுகிறீர்கள்! என்று கேட்டேன், ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் என்னிடம் வந்து, என் உம்மத்தினர்கள் இதோ என் மகனை (ஹுஸைனை) அநியாயமாக கொலை செய்வார்கள், என்று கூறினார்கள். ஜிப்ரயீல் அவர்களே! அவர் (ஹுஸைன்) என் மகன்! என்று சொன்னேன். ஆம்! உங்கள் மகனைத்தான் (ஹுஸைன் கொலை செய்யப்படுவார்) என்றார்கள். மேலும், இவர் எந்த இடத்தில் கொலை செய்யப்படுவாரோ அவ்விடத்திலுள்ள சிவந்த மண்ணை என்னிடம் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் கொண்டு வந்து காட்டினார்கள், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் (அழுதவர்களாக) கூறினார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹழ்ரத் ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள். நான் ஒரு நாள் ஹழ்ரத் உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்றேன், அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். எதனால் அழுகிறீர்கள் என்று கேட்டேன். நான் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் களவில் பார்த்தேன். அவர்களுடைய தலையிலும், தாடியிலும் மண் இருந்தது. அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! இது என்ன? என்று கேட்டேன். சிறிது நேரத்திற்கு முன் ஹுஸைனை (பாவிகள்) கொலை செய்த (கர்பலா) யுத்த களத்திற்கு சென்றிருந்தேன், என்று கூறினார்கள். (இதன் காரணமாக நான் அழுகிறேன் என்று ஹழ்ரத் உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்)

(நூல்: திர்மிதீ)

ஹழ்ரத் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 4 ஆம்ஆண்டு, ஷஃபான் மாதம் பிறந்தார்கள்.

ஹிஜ்ரீ 61ஆம் ஆண்டு முஹர்ரம் ஆஷூரா தினம் வெள்ளிக்கிழமை கர்பலா என்ற இடத்தில் (பதவி ஆசை பிடித்த கொடியோர்களால்) ஷஹீதாக்கப்பட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

நபீ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மருமகனார்கள்

ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை அபுல் ஆஸ் இப்னு ரபீஃ என்பவருக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்

கொண்டார்கள். ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு வபாத் ஆனார்கள்.

நபீ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பெண் மக்களில் ஹழ்ரத் உம்மு குல்ஸூம் ரழியல்லாஹு அன்ஹா, ஹழ்ரத் ருகையா ரழியல்லாஹு அன்ஹா இருவரையும் அபூலஹபுடைய இரு மகன்கள் உத்பா, உதைபா இருவருக்கும் திருமணம் முடித்துக் கொடுத்து இருந்தார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் (நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை ஏற்க மறுத்த) அபூலஹப் இஸ்லாத்தை ஏற்க மறுத்ததுடன் நபீ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை கடுமையாக ஏசி விட்டார். இதை கண்டித்து அல்லாஹு தஆலா ''தப்பத் யதா அபீலஹப்'' (அபூலஹபுடைய இரண்டு கரங்களும் நாசமாகட்டும்) என்ற சூராவை இறக்கினான். இதனால் கோபமடைந்த அபூலஹபும் அவரது மனைவியும் தங்களது இரண்டு மக்களிடத்தில் (நபியவர்களின் இரண்டு மக்களை) தலாக் விடச் சொல்லிவிட்டனர். அதனால் அவ்விருவரும் ருகையா ரழியல்லாஹு அன்ஹா, உம்மு குல்ஸூம் ரழியல்லாஹு அன்ஹா இருவரையும் தலாக் விட்டனர்.

(இருவரும் கணவன் மனைவியாக வீடு கூடவில்லை)

ஆதாரம்: முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்)

பின்பு நபீ பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மக்காவில் ருகையா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹழ்ரத் உத்மான ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். அவ்விருவரும் அபீசினியா நாட்டுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள்.

இவர்களுக்கு அப்துல்லாஹ் என்ற குழந்தை பிறந்தது. ஆறு வயது ஆகும் போது அப்துல்லாஹ் இறந்துவிட்டார்கள்.

அபீசினியா நாட்டிலிருந்து ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் ருகையா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் மதீனா வந்தார்கள். ஹிஜ்ரீ 2 ஆம் ஆண்டில் பத்ரு யுத்தத்தின் போது ருகையா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நோயுற்றிருந்தார்கள். தனது மனைவியை கவனிப்பதற்காக ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பத்ர் யுத்தத்திற்கு செல்லாமல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அனுமதியுடன் மதீனாவில் தங்கி விட்டார்கள். அல்லாஹு தஆலா பத்ர் யுத்தத்தில் இஸ்லாத்திற்கு அமோக வெற்றியைத் தந்தான். இந்த நற்செய்தியை சொல்வதற்காக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் ஜைது இப்னு ஹாரிதா ரழியல்லாஹு அன்ஹு அவர்களை மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அந்த வேளையில் நோயுற்றிருந்த பெருமானாரின் அருமை மகளார் ருகையா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வபாத் ஆனார்கள்.

(இன்னா லில்லலாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) (மகத்தானவெற்றி கிடைத்த போதும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை இவ்விஷயம் கவலையில் ஆக்கியது. அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத், வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபிஹி அஜ்மயீன்)

பின்பு உம்மு குல்ஸூம் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். இவர்கள் மூலம் குழந்தை பிறக்கவில்லை.

உம்மு குல்ஸூம் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டில் வபாத் ஆனார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் அருமை மகளாருக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இரண்டு மக்களை (ஒன்றன் பின் ஒன்றாக) உத்மான் ரழியல்லாஹு அன்ஹு திருமணம் செய்ததால் அவர்களுக்கு "துன்நூரைன்" (இரண்டு பிரகாசமுடையவர்) என்ற பட்டப்பெயர் ஏற்பட்டது.

பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். இவர்கள் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், என்ற அருமை மக்களைப் பெற்றெடுத்தார்கள். அன்பு நபியின் வமிசம் இவர்கள் மூலம் தொடர்கிறது.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மூன்று பெண்மக்களும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காலத்திலே மரணமடைந்து விட்டார்கள்.

அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மரண மடைந்து 6 மாதம் கழித்து வபாத் ஆனார்கள்.

(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதிவ் வஅலா ஆலி முஹம்மதிவ் வ பாரிக் வ ஸல்லிம்)

ஹழ்ரத் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் (ஹிரா குகையில் இருக்கும் போது) ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்தார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே இதோ! கதீஜா அவர்கள் மக்காவிலிருந்து தங்களுக்கு உணவு கொண்டுவருகிறார்கள். அவர்களிடம் ஒரு பாத்திரம் இருக்கிறது. அதில் உப்புக்கண்டமும், ரொட்டியும் இருக்கிறது. அவர்கள் வந்தவுடன் அல்லாஹ்வின் சலாத்தையும், என் சலாத்தையும் சொல்லுங்கள். எவ்வித சப்தமோ தீங்கோ ஏற்படாத முத்துக்களிலான மாளிகை சொர்க்கத்தில் அவர்களுக்கு இருக்கிறது என்று நன்மாறாயம் கூறுங்கள், என்று ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சொன்னார்கள்.

(நூல்: புகாரீ, முஸ்லிம்)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் காஸிம் இப்னு முஹம்மது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மனைவி மார்களில் நான் பத்து அந்தஸ்துகளைக் கொண்டு சிறப்பிக்கப்பட்டுள்ளேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னைக் கன்னிப்பெண்ணாகத் திருமணம் செய்தார்கள்.

எனது பெற்றோர்கள் ஹிஜ்ரத் செய்தவர்கள்.

ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பட்டுத் துணியில் எனது உருவத்தைப் பொரித்து, என்னை அடுத்து மணந்து கொள்ளுமாறு காட்டினார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் நானும் ஒரே பாத்திரத்தில் குளித்தோம்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் நானும் ஒரே துப்பட்டிலிருக்கும் போது ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வஹீ கொண்டு வந்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னை ஷவ்வால் மாதம் திருமணம் செய்தார்கள். சில ஆண்டுகளுக்குப் பின் அதே ஷவ்வால் மாதம் என்னோடு வாழ்க்கையை ஆரம்பித்தார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என் கழுத்துக்குக் கீழ் நெஞ்சுக்கு மேல் இருககும் நிலையில் வபாத் ஆனார்கள்.

என் மீது அவதூறாக கூறப்பட்டவர்களை கண்டித்து அல்லாஹு தஆலா, பல திருவசனங்களை இறக்கி வைத்தான்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எனது வீட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(நூல்: தப்ஸீர் கபீர்)

ஹழ்ரத் அபூசல்மா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், யாஆயிஷா! இதோ ஜிப்ரயீல், உனக்கு சலாம் கூறுகிறார் என்றார்கள். நான் வ அலைஹிஸ் ஸலாம் என்று (ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம்) அவர்களுக்குப் பதில் கூறினேன். அந்நேரம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நான் பார்க்காததைப் பார்த்தார்கள், என்று ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்.

(நூல்: புகாரீ முஸ்லிம்)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மரணம் நெருங்கும் (இறுதி) நேரத்தில் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் வந்தார்கள். அல்லாஹு தஆலாவிடம் நரகத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன், என்று ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள். யா! உம்மல் முஃமினீன் உங்களுக்கென்ன! நீங்கள் நரகத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறீர்கள். அல்லாஹ் உங்களை நரகத்தை விட்டும் பாதுகாத்து விட்டான், நீங்கள் தூய்மையானவர், மேலும் உங்களைப்பற்றி தூய்மையானவர் என்று அல்லாஹ் இறக்கிவைத்த வசனங்களை பள்ளிவாசல்கள் பூராவும் ஓதப்பட்டுக்கொண்டே இருக்கிறது. மேலும் நீங்கள் பரிசுத்தமானவர், நல்ல தூய்மையான பெண்கள் நல்ல தூய்மையான ஆண்களுக்கும் நல்ல தூய்மையான ஆண்கள் நல்ல தூய்மையான பெண்களுக்கும் தகுதியானவர்கள், என்று அல்லாஹ் கூறுகிறான்.

மேலும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களின் மனைவிமார்களில் உங்களையே

அதிகம் பிரியம் வைத்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நல்ல மணமானதையே பிரியப்படுவார்கள். உங்களின் காரணத்தாலே! தயம்மம் என்ற சட்டத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான் என்று அவர்களின் சிறப்புகளைக் கூறினார்கள்.

(ஈமான் கொண்டவர்களே!) நீங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், சுத்தமான மண்ணைத் தொட்டு உங்களுடைய முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவி தயம்மம் செய்துகொள்ளுங்கள் என்று அல்லாஹ் (4-43) கூறுகிறான்

(நூல்: தப்ஸீர் கபீர்)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும், ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் ஒருவருக்கொருவர் தாங்களே சிறந்தவர் என்று கூறிக்கொண்டனர். அல்லாஹு தஆலாவே என்னை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தான் என்று சொல்லி, நானே சிறந்தவர் என்று அன்னை ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள்.

என்மீது அவதூறு கூறப்பட்டதைக் கண்டித்து நான் பரிசுத்தமானவர் என்று பல வசனங்களையும் அல்லாஹ்! இறக்கி வைத்தான், ஆகவே நான்தான் சிறந்தவர் என்று அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள்.

நீங்கள் ஹழ்ரத் ஸப்வான் இப்னு முஅத்தல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் (பழிச்சொல்லுக்கு காரணமான நிகழ்ச்சி) ஒட்டகத்தில் ஏறும்போது என்ன

ஓதினீர்கள்? என்று ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கேட்டதற்கு "ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வகீல்" ஓதினேன் என்று கூறினார்கள். முஃமின்களின் சிறந்த கலிமாவை (அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடும் நல்ல வார்த்தையை) சொன்னீர்கள். (சொன்னதால் நீங்கள் பரிசுத்தமானவர் என்று அல்லாஹ் அறிவித்துவிட்டான்) என்று ஹழ்ரத் ஜைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள். (நூல்: தப்ஸீர் கபீர்)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா மீது அவதூறு கூறப்பட்ட நிகழ்ச்சி

ஹழ்ரத் சயீது இப்னு முஸய்யப் ரழியல்லாஹு அன்ஹு ஹழ்ரத் உர்வத் இப்னு ஜுபைர் ரழியல்லாஹு அன்ஹு, ஹழ்ரத் அல்கமா இப்னு வக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு, ஹழ்ரத் உபைதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோர் அறிவிக்கிறார்கள்:

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வெளியூர் பயணத்தை நாடினால் தங்கள் மனைவிமார்களுக்கிடையில் சீட்டுப்போட்டுப் பார்ப்பார்கள். எந்த மனைவியின் பெயர் வருகிறதோ அந்த மனைவியை அழைத்துக் கொண்டு பயணமாவார்கள். ஹிஜ்ரீ 5ஆம் ஆண்டு "பனீ முஸ்தலக்" கூட்டத்தார்களோடு யுத்தம் செய்ய நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சென்றார்கள். மனைவிமார்களுக்கிடையில் சீட்டுப் போட்டுப் பார்த்ததில் என் பெயர் வந்தது. ஆகவே நான் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு பயணமானேன். (அப் பயணம் கோஷா முறைக் கடமை

யாக்கப் பட்ட பிறகு நடந்தது) நான் ஒரு தொட்டியில் இருந்தேன். அதை ஒட்டகத்தின் மீது கட்டியிருந்தார்கள்.

யுத்தம் முடிந்து திரும்பி வரும் வழியில் மதீனாவுக்கு சற்று தொலைவில் படைவீரர் (சஹாபாக்)கள் தங்களின் சுயதேவைகளை நிறைவேற்றுவதற்காக தங்கினார்கள். அது இரவு நேரமாக இருந்தது. நான் எனது தொட்டியை விட்டும் கீழே இறங்கி எனது சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சிறிது தூரம் மறைவிடத்திற்கு சென்றேன். திரும்பும் வழியில் எனது நெஞ்சு மீது தடவிப் பார்த்தபோது எனது கழுத்து மாலை காணாமல் போயிருந்தது. ஆகவே அதை எடுப்பதற்காக நான் சென்ற இடத்திற்குச் சென்று தேடி எடுத்துவிட்டேன். எனது மாலையைத் தேடியதால் நேரம் அதிகமாகிவிட்டது.

சஹாபாக்கள் தங்கி இருக்குமிடம் திரும்பி வந்தேன். அங்கே யாரும் காணப்படவில்லை. எல்லோரும் மதீனா நோக்கி பயணமாகிவிட்டார்கள். நான் பயணமான எனது தொட்டியில் நான் உள்ளே இருக்கிறேன் என்ற எண்ணத்தில் எனது தொட்டியை ஒட்டகத்தின் மீது கட்டிக்கொண்டு பயணமாகிவிட்டார்கள். அக்காலப்பெண்கள், உணவில் மிதமுள்ளதையே சாப்பிடுவார்கள். ஆகையால் அப்பெண்கள் மிக இலேசாக இருப்பார்கள். ஆகவே நான் மெலிந்து இலேசாக இருந்ததால் (காலியான) அந்தத் தொட்டியில் நான் உள்ளே இருக்கிறேன் என்று எண்ணிக்கொண்டார்கள். எனது பயணத் தொட்டியில் நான் இல்லாததால் என்னைத் தேடி வருவார்கள் என்று எண்ணி அங்கேயே உட்கார்ந்துவிட்டேன். உட்கார்ந்த நிலையில் (சுருண்டு படுத்து) உறங்கி விட்டேன்.

ஹழ்ரத் ஸப்வான் இப்னு முஅத்தல் ரழியல்லாஹு அன்ஹு என்ற சஹாபி, சஹாபாக்களுக்கு பின்னால் சஹாபாக்களின் உடமைகள் தவறிவிட்டனவா? என்பதை கண்காணித்து, தவறி இருந்தால், எடுத்துவர பின்னால் வந்து கொண்டிருந்தார். நான் இருந்த இடத்திற்கு அவர் அன்று காலை வந்தார். உறங்கக்கூடிய மனிதன் போன்று கருப்பாக அவருக்கு நான் காணப்பட்டேன். அவர் என் பக்கம் வந்து பார்த்ததும் என்னை அறிந்துகொண்டார். கோஷா (பெண்கள், மற்ற ஆடவர் தங்களைக் காணாத முறையில் உடல் முழுவதையும் மறைத்துக் கொள்ளுதல்) முறை கடமையாக்கப்படுவதற்கு முன் அவர் என்னைப் பார்த்திருக்கிறார்.

அவர் என்னைப் பார்த்ததும் ஆச்சரியத்தால், அதிர்ச்சியால் இன்னா லில்லாஹி வ இன்னா அலைஹி ராஜிஊன், என்று சொன்னார். அவர் சப்தத்தைக் கேட்டு விழித்த நான், என் முகத்தை துப்பட்டியால் மூடிக்கொண்டேன். அவர் சொன்ன, “இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்” என்ற வார்த்தையைத் தவிர வேறு எந்த வார்த்தையும் அவர் பேசவில்லை. வேறு எந்தப் பேச்சையும் அவரிடமிருந்து நான் கேட்கவுமில்லை.

அவர் தன் வாகனத்தை என் பக்கம் கொண்டு வந்து படுக்க வைத்தார். நான் அதன் மீது ஏறிக் கொண்டேன். அவர் நடந்து கொண்டு வாகனத்தை இழுத்துக் கொண்டு சென்றார். கடைசியாக மதீனாவுக்கு வெளியில் சஹாபாக்(வீரர்)கள் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தோம். என் நிலையைக் கண்ட சிலர் என்மீது பழியைக் கூறிவிட்டனர். என்மீது பழியைக் கூறக்கூடிய கூட்டத்திற்கு முனாபிக்களின் தலைவன் அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு சலூல் என்பவன் முக்கிய நபராவார்.

மதீனாவுக்குள் வந்துவிட்டோம். முனாபிக்களின் சதியால் மதீனா முழுவதும் என் பேச்சாகவே இருந்தது. அழியக் கூடியவர்கள் அழிந்துவிட்டனர். என்மீது அவதூறு கூறுவதில் முனாபிக் தலைவன் முக்கிய நபராக இருந்தான். என்மீது இவ்வாறு அவதூறு கூறப்பட்டதும், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் எந்தவித அன்பையும் நான் காண முடியவில்லை.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னிடம் வருவார்கள். சலாம் சொல்வார்கள், எப்படி இருந்தீர்கள்? என்று கேட்பார்கள். பின்பு சென்று விடுவார்கள். இந்த கேள்வி எனக்கு மேலும் வருத்தத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கியது. எவ்வித தீமையையும் உணர்வால்கூட செய்யாத நான் அவதூறு கூறப்பட்டதால் உடல்நலம் பாதிக்கப்பட்டேன்.

ஒருநாள் நானும் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயாரும் மலம் கழிக்கச் சென்றோம். இரவு நேரத்தில் தான் சுயதேவைகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் செல்வோம். அப்போதைய அராபியர்களின் நிலை இவ்வாறே இருந்தது. (பைத்துல்கலா) கக்கூஸ் ஏற்படுத்தப்படவில்லை.

(மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் சக்ர் இப்னு ஆமிர் என்பவருடைய மகளாவார்கள். ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சிறிய தாயார். ஆகவே, மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அத்தம்மா–பாட்டிமுறை

நாங்கள் வெளியில் சென்று திரும்பும் வழியில் உம்மு மிஸ்தஹ் அவர்கள், தன் மகன் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஏசினார். பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட அவரை ஏன் ஏசுகிறீர்கள்? என்றேன். அவர் உன்மீது என்ன சொன்னார்? என்பதை கேட்கவில்லையா? என்று கேட்டார். அப்படி என்ன? என்மீது என்ன சொல்லி விட்டார்! என்றேன். உங்கள் மீது அவதூறு சொன்னவர்களில் என் மகனும் ஒருவர், என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும் கவலைக்கு மேல் கவலை அதிகமானது.

வீட்டிற்கு வந்ததும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வந்தார்கள். எப்படி இருந்தீர்கள்? என்று கேட்டார்கள். என் பெற்றோரிடம் செல்ல அனுமதி தாருங்கள் என்று கேட்டேன். ஏனெனில் நான் சிறியவளாக இருந்ததால் என் பெற்றோர்கள் மூலம் செய்தியை உறுதியாகத் தெரிந்துகொள்வதற்காக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் அனுமதி கேட்டேன். அனுமதி தந்தார்கள்.

எனது பெற்றோர்களிடம், என் அம்மா (என்னைப் பற்றி) மக்கள் என்ன பேசுகிறார்கள்? என்று கேட்டேன். என் மகளே! உன் மீது சுமையாக நினைக்காதே! ஒருவருக்கு (நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு) மனைவியாக இருந்து அவருக்குப் பல சக்களத்திகள் இருக்கிறார்கள். அவர்களில் அதிகமானவர் (பெண்கள்) அந்த அவதூரைச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். (சுப்ஹானல்லாஹ்!) அல்லாஹ்! பரிசுத்தமானவன். மக்கள் இதை (அவதூறு) பேசுகிறார்களா? என்று சொன்னேன்.

(என் பெற்றோர்களைச் சந்தித்த) அந்த இரவு முழுவதும் அழுதேன். விடிந்தும் விட்டது. என் கண்களில் கண்ணீர்

நிற்கவில்லை. (தூங்கும் போது சுர்மா போடுவது) தூக்கத்திற்காக சுர்மாவும் போடவில்லை. விடிந்த பிறகு காலையிலும் அழுது கொண்டிருந்தேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் ஹழ்ரத் உஸாமத் இப்னு ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் அழைத்து, வஹீ வருவதற்கு தாமதமானதால் தன் குடும்பத்தை (என்னை) பிரித்து வைத்த விஷயத்தில் ஒவ்வொருவரிடமும் "மஷ்வரா" ஆலோசனை செய்தார்கள். நான் பரிசுத்தமானவர் என்று ஹழ்ரத் உஸாமத் இப்னு ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! (அவதூறு கூறுபவர்கள்) அழிந்துவிட்டார்கள். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பற்றி நல்லதைத் தவிர வேறு ஒன்றும் தனக்குத் தெரியாது என்றார்.

ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், (அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே!) அல்லாஹு தஆலா உங்கள் மீது நெருக்கடியை உண்டாக்கவில்லை. அவரை (ஆயிஷாவை)த் தவிர மற்ற பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மேலும் ஹழ்ரத் பரீரா ரழியல்லாஹு அன்ஹா என்ற பெண்ணின் மூலம் விபரம் கேளுங்கள் என்றும் சொன்னார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், கூறுகிறார்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பரீரா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை அழைத்து, பரீரா! அவர் (ஆயிஷா) மீது சந்தேகமான எதையும் நீ பார்த்தாயா? என்று கேட்டார்கள். உங்களை நபீயாக

அனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக "இல்லை" என்று சொன்னார். அவர்கள் சிறிய வயதுடையவராக இருக்கின்ற காரணத்தால் மாவு அரைக்கும் போது தூங்கிவிடுவார்கள். அப்பொழுது "ஆடு" மாவைத் தின்றுவிடும். இதுவே நான் அவர்களிடம் கண்ட "குறை" என்று கூறினார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிம்பர் படி மீது அமர்ந்தவர்களாக எனக்கு அவரை விட்டும் (அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு சலூல். இவர் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்மீது அவதூறு சொன்ன முக்கிய நபர் முனாபிக்) உதவி செய்பவர் யார்? எனது குடும்பத்தாரை (ஆயிஷாவை) நோவினை செய்து விட்டார் என்றும் எனக்குத் தெரிய வந்தது. அல்லாஹ்வின் மீது சத்தியமாக எனது குடும்பத்தார் மீது நல்லவைகளைத் தவிர எதையும் நான் அறியவில்லை.

மேலும், அவர் (ஸப்வான் இப்னு முஅத்தல் ரழியல்லாஹு அன்ஹு) மீதும் (அவதூறு) கூறியுள்ளார்கள். அவரைப் பற்றி நன்மையைத் தவிர எதையும் நான் அறியவில்லை. அவர் என்னோடுதான் என் வீட்டிற்கு வருவார், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொல்கிறார்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இவ்வாறு சொன்னதும், ஹழ்ரத் சஃது இப்னு முஆத் ரழியல்லாஹு அன்ஹு எழுந்திருந்து, அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! அவர்களிடமிருந்து நான் உங்களுக்குப் பாதுகாப்பு தருகிறேன். (அவதூறு கூறியவர்) அவ்ஸ் கூட்டத்தைச் சார்ந்தவராக இருந்தால் அவர் கழுத்தை வெட்டி

விடுகிறோம். அல்லது எங்கள் கஜ்ரஜ் கூட்டத்தைச் சார்ந்தவராக இருந்தால் உங்கள் கட்டளை எதுவோ அதை செயல்படுத்துகிறோம் என்று சொன்னார்.

பின்பு, ஹழ்ரத் சஃது இப்னு உபாதத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்தார்கள், இவர் கஜ்ரத் கூட்டத்தின் தலைவராவார். சாலிஹான—அமைதியான மனிதர். ஆனால் இப்பிரச்சினையில் மிக சூடாக இருந்தார். சஃது இப்னு முஆது ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து நீ பொய் சொல்கிறாய். அல்லாஹ்வின்மீது சத்தியமாக இதை (நீ சொன்னதை) உன்னால் செயல் படுத்த முடியாது என்றார்.

ஹழ்ரத் உஸைது இப்னு ஹுலைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து (இவர் சஃது இப்னு முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறிய தகப்பனாரின் மகனாவார்) சஃதுஇப்னு உபாதத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து நீங்கள் பொய் சொல்கிறீர்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவரை (ஆயிஷா அவர்கள் மீது அவதூறு கூறிய முக்கிய நபரான முனாபிக் தலைவன்) கொலை செய்வோம், என்று சொன்னார். இவ்வாறு பேச்சு காரசாரமாக நடந்துகொண்டிருக்கும்போது "அவ்ஸ்", "கஜ்ரஜ்" இரு சாராரும் தங்களுக்குள் சண்டையிட கிளம்பிவிட்டார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிம்பர் படி மீது அமர்ந்து அவர்களை அமைதி காக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இரு சாராரும் அமைதியானார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிம்பர் படியிலிருந்து கீழே இறங்கினார்கள்.

அன்றைய நாளும் நான் அழுதுகொண்டிருந்தேன். கண்ணீர் நிற்கவில்லை. தூக்கத்திற்காக சுர்மா இடவில்லை. அதற்கு அடுத்த இரவும், சுர்மா போடாமல் அழுது

கொண்டிருந்தேன். மறுநாள் காலை என் பெற்றோர்கள் என்னிடம் வந்தார்கள். இரண்டு இரவு ஒரு பகல் தொடராக அழுததால் என் ஈரக்குலையே வெடித்துவிடுமோ என்று அஞ்சினேன். என் பெற்றோர்கள் என்னோடு இருக்கும்போது ஒரு அன்சாரிப்பெண் என்னிடம் வர அனுமதி கேட்டார். அனுமதித்தேன். அவரும் (என் நிலையை நினைத்து) அழுதார்.

இவ்வாறு நாங்கள் (கவலையால் கண்ணீர்விட்டுக் கொண்டு) இருக்கும்போது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வந்தார்கள். உட்கார்ந்தார்கள். ஆனால் என்மீது அவதூறு கூறப்பட்டதிலிருந்து என்னிடம் உட்கார்ந்ததில்லை. நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு என் விஷயமாக 1. மாதமாக வஹீ (இறைவனிடமிருந்து அறிவிப்பு) இறங்கவில்லை. நபீ ஸல்லல்லாஹு அலைஹி, வ ஸல்லம் அவர்கள் ஷஹாதத் (அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு) கூறி, பேச்சை ஆரம்பித்தார்கள். ஆயிஷா! உன்னைப் பற்றி இப்படி..... இப்படி.... செய்தி வந்தது. நீ தூய்மையானவராக இருந்தால் அல்லாஹ்! உன்னை அவதூறை விட்டு தூய்மைப்படுத்துவான். அல்லது நீ தவறு செய்திருந்தால் அல்லாஹு தஆலாவிடம் பாவ மன்னிப்பு தேடிக்கொள். ஏனென்றால் ஓர் அடியான் தனது பாவத்தை நினைத்து மனதார மன்னிப்புத் தேடினால் அவரது பாவ மன்னிப்பை அல்லாஹு தஆலா ஏற்றுக்கொள்கிறான், என்று சொன்னார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இவ்வாறு சொன்னதும் என் கண்ணீரே நின்றுவிட்டது. ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடுவதற்கு உணர்வில்லை. என் தந்தையிடம் நீங்கள்(நான் பரிசுத்தமானவள் என்று)

அவர்களுக்கு பதில் சொல்லுங்கள்... என்றேன். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களிடம் நான் என்ன? சொல்வதென்றே தெரியவில்லை என்று கூறிவிட்டார்கள். ஆகையால் என் அம்மாவிடம்; நீங்களாவது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பதில் சொல்லுங்கள் என்றேன். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களிடம் நான் என்ன சொல்வதென்றே தெரியவில்லை என்று என் தாயும் கூறிவிட்டார்கள்.

நான் சிறிய வயதுடையவராக இருந்ததால், குர்ஆன் ஷரீபில் அதிகமானதை ஓதாவிட்டாலும், நான் சொன்னேன். மனிதர்கள் என்னைப் பற்றி பேசுவதை அறிந்திருக்கிறேன். நீங்களும் அதைக் கேட்டு இருக்கிறீர்கள். அதை உங்களின் மனதால் நம்பிக் கொண்டு உண்மைப்படுத்தி விட்டீர்கள். நான் சுத்தமானவர் என்று நிரூபிக்க எப்படி சொன்னாலும் நம்பமாட்டீர்கள். நான் சுத்தமானவர் என்று அல்லாஹ் அறிவான். எனக்கும் உங்களுக்கும் மத்தியில் உதாரணமாகிறது யூசுப் (அலைஹிஸ் ஸலாம்) நபியின் தந்தையைப்போல என்று சொல்லி, நபீ யஃகூப் (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் சொன்னதைச் சொன்னேன். அல்லாஹ் கூறுகிறான், பொறுமையை மேற்கொள்வதே நலமாக இருக்கும். மேலும் நீங்கள் கூறும் விஷயத்தில் அல்லாஹ்விடமே உதவி தேடுகிறேன்.

(அல் குர்ஆன் 12-18)

இவ்வாறு கூறிவிட்டு படுக்கைக்குச் சென்று ஒருக்கணித்துப் படுத்துக்கொண்டேன்.

நான் சுத்தமானவர் என்று எனக்குத் தெரியும். அல்லாஹுத ஆலாவும் அறிவான். எனது பரிசுத்தத் தன்மையைப் பற்றி குர்ஆனில் இடம்பெற்று ஓதப்படக்கூடிய முறையில் நான் பரிசுத்தமானவர் என்று அ-லல்லாஹ்! பல

வசனங்களை இறக்குவான் என நான் எண்ணவில்லை. ஆனால் அல்லாஹ்! நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு கனவின் மூலம் என் பரிசுத்தத் தன்மையைப் பற்றி உணர்த்துவான் என எண்ணிக்கொண்டிருந்தேன்.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவ்விடத்தைவிட்டு நகரவில்லை. வீட்டைவிட்டு யாரும் வெளியாகவுமில்லை. அல்லாஹு தஆலா நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு வஹீயை இறக்கினான். வஹீ வரும்போது ஏற்படக்கூடிய கஷ்டம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஏற்பட்டது. வஹீ இறங்கிய பிறகு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சிரித்தவர்களாக சொன்ன முதல் வார்த்தை; யா ஆயிஷா! அல்லாஹ்வைப் புகழ்ந்துகொள், அவன் உன்னை தூய்மையானவர் என்று கூறிவிட்டான், என்றார்கள்.

என் தாய் என்னிடம், ரஸூலுல்லாஹ்விடம் சென்று அவர்களுக்கு நன்றி சொல் என்றார்கள். அல்லாஹ்! மீது சத்தியமாக நான் எழுந்திருந்து செல்ல மாட்டேன், அவர்களுக்கு நன்றி கூறவும் மாட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் புகழ மாட்டேன். நன்றி சொல்லவும் மாட்டேன். ஏனெனில் அவன்தான் நான் பரிசுத்தமானவர் என்று அறிவித்தான் எனக்கூறினார்கள். (அல்லாஹ்! பத்து வசனங்களை இறக்கினான்)

(நூல்: ரவாஇஉல்பயான்)

ஹழ்ரத் ஆயிஷா

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பரிசுத்தமானவர் என்று கூறி, அவதூறு கூறியவர்களை கண்டித்து அல்லாஹ் பத்துவசனங்களை இறக்கினான்.

எவர்கள் (ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது) அவதூறு கூறினார்களோ, அவர்களும் உங்களிலுள்ள ஒரு கூட்டத்தார்களே!

(முஃமின்களே! உங்களுடைய விரோதிகள் எண்ணிக் கொண்ட பிரகாரம்) உங்களுக்கு அதனால் தீங்கு ஏற்பட்டு விட்டதாக எண்ணவேண்டாம். (விரோதிகளுக்கு விரோதமாக) அது உங்களுக்கு நன்மையாகவே முடிந்தது. அவதூறு கூறியவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் (அவதூறு) கூறித் தேடிக்கொண்ட பாபத்தின் அளவுக்குத் தக்க தண்டனையுண்டு. இந்த அவதூற்றில் எவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டார்களோ அவர்களுக்கு மிகப்பெரிய வேதனையுண்டு.

இதனை நீங்கள் கேள்வியுற்ற நேரத்தில் (இதனை மறுத்து விசுவாசம் கொண்ட ஆண்கள், விசுவாசம் கொண்ட ஆயிஷாவைப் பற்றி) நல்லெண்ணம் வைத்து இது பகிரங்கமான அவதூறு என்று நீங்கள் கூறியிருக்க வேண்டாமா? அவதூறு கூறிய அவர்கள் இதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளை கொண்டு வந்திருக்க வேண்டாமா? இதற்குரிய சாட்சிகளை அவர்கள் கொண்டு வராததினால் நிச்சயமாக அவர்கள் தாம் பொய்யர்கள் என்று அல்லாஹ்விடமே ஏற்பட்டுவிட்டது.

இம்மையிலும், மறுமையிலும் உங்கள் மீது அல்லாஹ்வின் அருள் இல்லாமலிருக்குமேயானால் இதனை (அவதூறை) நீங்கள் கூறியதால் கடினமான வேதனை உங்களைப் பிடித்து இருக்கும்.

(அவதூறான) இதனை நீங்கள் (ஒருவரிடமிருந்து ஒருவராக) உங்கள் நாவுகளால் எடுத்துக்கொண்டு,

உறுதியாக நீங்கள் அறியாத விஷயத்தை உங்கள் வாயால் கூறிக்கொண்டு திரிகின்றீர்கள். இதனை நீங்கள் லேசாக எண்ணிக் கொண்டீர்கள். ஆனால் இதுவோ அல்லாஹ் விடத்தில் மிகப்பெரிய (பாபமான)தாக இருக்கிறது.

இதனை நீங்கள் கேள்வியுள்ள நேரத்தில் இத்தகைய (அவதூறை)விஷயத்தை நாம் (நமது வாயால்) பேசுவது நமக்கு ஆகாது. அல்லாஹ்! மிகப் பரிசுத்தமானவன். அவர்கள் கூறும் (அவதூறு) மிகப்பெரிய இட்டுக்கட்டாக இருக்கும் என்று நீங்கள் கூறவேண்டாமா?

உண்மையாக நீங்கள் முஃமின்களாக இருந்தால் இ(த்தகைய பழி சுமத்துவ)து போன்று மீளலாகாது என்று அல்லாஹ்! உங்களுக்கு உபதேசம் செய்கிறான்.

இவ்வாறு அல்லாஹ் தன்னுடைய வசனங்களை நன்கு விவரித்துக் கூறுகிறான். மேலும் அல்லாஹ்! மிகவும் அறிந்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கிறான்.

எவர்கள் (இதற்குப் பின்னும்) முஃமினீன்களுக்கிடையில் இத்தகைய மானக்கேடான அவதூறுகள் பரவ வேண்டுமென்று விரும்புவார்களோ அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் நோவினை செய்யும் வேதனை உண்டு. அல்லாஹ்! அனைத்தையும் நன்கறிவான். ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள்.

இன்னும் உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும், அவனுடைய ரஹ்மத்தும் இல்லாதிருந்தால் (உங்களை வேதனை பிடித்து இருக்கும்) மேலும் நிச்சயமாக அல்லாஹ், இரக்கமுள்ளவனாகவும் அன்புடையவனாகவும் இருக்கிறான்.

(அல் குர்ஆன் 24-11 to 20)

ஹழ்ரத் அபூபக்கர்

ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பெருந்தன்மை

அல்லாஹுதஆலா ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது அவதூறு கூறியவர்களைக் கண்டித்து (10) வசனங்கள் இறக்கியதும் ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் கொடுத்து வந்த உதவியை நிறுத்திவிட்டார்கள். ஏனெனில் ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவதூறு கூறியவர்களில் ஒருவர். மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர், மிக ஏழ்மையானவர். ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உதவியிலே அவரும் அவரைச் சார்ந்தவர்களும் வாழ்ந்து வந்தனர்.

அவதூறு கூறியவர்களைக் கண்டித்து ஆயத் — இறை வசனம் இறங்கியவுடன் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடமும் அவர்களைச் சார்ந்தவர்களிடமும், என்னை விட்டும் நீங்கள் எழுந்து சென்று விடுங்கள், நான் உங்களைச் சார்ந்தவனல்ல, உங்களில் யாரும் என்னிடம் வரக்கூடாது என்று கூறினார்கள்.

இவ்வளவு காலம் தங்களுக்கு உதவி செய்து வந்த ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்களை வெறுத்ததையறிந்ததும், ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் அபூபக்கர்

ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அல்லாஹு தஆலாவுக்காக, இஸ்லாத்திற்காக எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள். சொந்தக்காரர்கள், உற்றார் உறவினர்கள் என்பதற்காக எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள்; எங்களை வேறு எவரிடமும் உதவி கேட்க வைத்து விடாதீர்கள். (எங்களால் ஆரம்பத்தில் ஆயிஷா மீது) எந்தக் குற்றமும் ஏற்படவில்லை என்று மன்றாடினார்.

நீங்கள் எந்தக் குற்றமும் செய்யாவிட்டாலும் ஆயிஷா மீது அவதூறு கூறப்பட்ட போது சிரித்தீர்கள், என்று சொன்னார்கள். ஹழ்ரத் ஹஸ்ஸான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன ஆச்சரியமான ஒரு சொல்லைக் கேட்டு சிரித்தேன், என்று ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக் கொள்ள ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மறுத்து விட்டார்கள். மிஸ்தஹ், இன்னும் மிஸ்தஹைச் சார்ந்தவர்களே! இங்கிருந்து சென்று விடுங்கள். அல்லாஹு தஆலா உங்களுக்காக எந்த மன்னிப்பையும் சந்தோஷத்தையும் தரவில்லை, என்று கூறிவிட்டார்கள்.

தங்களின் மன்னிப்பை ஏற்காமல், உதவியை நிறுத்தி விட்டு, இடத்தையும் காலி செய்துவிடுங்கள்! என்ற ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டிப்புடன் கூறியதால், ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் இந்த பூமியில் எங்கே செல்வது? யாரிடம் செல்வது? என்று புரியாமல் தடுமாறியவர்களாக அவ்விடத்தை விட்டும் புறப்பட்டார்கள். இவர்களின் பரிதாப நிலையைக் கண்ட எல்லாம் வல்ல ரஹ்மான் இரக்கம் காட்டினான்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் முடிவை (மனவெறுப்பு) மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அல்லாஹ்! ஆயத்தை இறக்கி வைத்தான். மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் முன்புபோல உதவி செய்யுமாறு ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லாஹு தஆலா ஆயத்தின் மூலம் உணர்த்தினான், அல்லாஹ்வின் வசனம் இறங்கியவுடன் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஹஜ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு, அல்லாஹ்! உங்களின் (மிஸ்தஹ் மீது செய்த) முடிவைக் கூடாது, என்று ஆயத்தை இறக்கிவிட்டான் என்று சொல்லியனுப்பினார்கள். இவ்விஷயத்தை கேட்ட ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தக்பீர் சொன்னார்கள்; சந்தோஷப்பட்டார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லாஹ் இறக்கிய வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

உங்களில் (அல்லாஹ்வின்) கொடை அருளப் பெற்றவர்களும் தக்க வசதி உடையவர்களும், உறவினர் களுக்கும் ஏழைகளுக்கும் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எதுவும்) கொடுக்க முடியாது என்று சத்தியம் செய்யவேண்டாம். (அவர்கள் தவறு செய்திருந்தால்) அதை மன்னித்து (அதைப் பொருட்படுத்தாமல்) இருக்கவும். அல்லாஹ்! உங்களை மன்னிக்கவேண்டும் என்று விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ்! மிக மன்னிப்பவன், அன்பு மிக்கவன்.

(அல் குர்ஆன் 24–22)

அல்லாஹ்! உங்களை மன்னிக்கவேண்டும் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்களா? என்ற வசனத்தை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஓதியதும், ஆம்! யா அல்லாஹ்! என்னை மன்னிப்பதை நான் விரும்புகிறேன், என்று ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். இதற்குப் பின் அவர்களுக்கு ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மீது இருந்த வருத்தமும் நீங்கியது. (அல்லாஹ், ரஸூலுக்காக மனவருத்தத்தை நீக்கிக் கொண்டார்கள்).

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிற்குச்சென்று ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் அவரைச் சார்ந்தவர்களையும் அழைத்துவர ஆளனுப்பினார்கள். அல்லாஹ்வின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டதாகவும், அல்லாஹ்! உங்கள் மீது கோபப்பட்ட காரணத்தாலேயே உங்களை நான் வெறுத்தேன். இப்பொழுது அல்லாஹ்! உங்களை மன்னித்துவிட்டான். ஆகவே, உங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகட்டும், என்று ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்

(நூல்: தப்ஸீல் கபீர்)

மேற்கூறிய வசனத்தில் உறவினர்கள், ஏழைகள், அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்கள் என்று கூறியிருப்பது ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைத்தான். ஏனென்றால், ஹழ்ரத் மிஸ்தஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உறவினர். வசதி இல்லாதவர். அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவராகவும் இருந்தார்கள். (நூல்: தப்ஸீர் கபீர்)

அல்லாஹ்! கூறிய வசனத்தில் ''உலுல் பழ்ல்'' செல்வமுடையோர், கொடை அருளப்பெற்றவர்கள், என்று கூறப்பட்டிருப்பது ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் என்பதை ''உலுல்பழ்ல்'' என்ற வசனம் அறிவிக்கிறது. அல்லாஹ்! கொடை அருளப்பெற்றவர்கள் என்று பன்மையாகக் கூறி ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்ணியப்படுத்தியுள்ளான்.

(நூல்: தப்ஸீர் கபீர்)

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புகளைப் பற்றி

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்

முஸ்லிம்களின் குணங்களில் சிறந்தது மன்னிப்பு வழங்குவது, என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஓர் அடியான் தன்னைத் துண்டித்தவரோடு சேர்ந்து வாழாதவரை, தனக்கு அநீதம் செய்தவரை மன்னிக்காத வரை தன்னை வெறுத்தவருக்கு உதவி செய்யாத வரை சிறந்தவராக ஆகமாட்டார், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

உங்களில் எவர், நரகத்தை விட்டும் ஈடேற்றம் அடைந்தவரை பார்க்க விரும்பினால் அவர் அபூபக்கர் அவர்களைப் பார்க்கட்டும், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம்

ஒரு பெண் (உதவி கேட்டு) வந்தார், அப்பொழுது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அப்பெண்ணிடம் இன்னொரு தடவை வாருங்கள் (தருகிறேன்) என்றார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! (அப்பெண்ணின் வீடு தூரமாக இருக்கலாம்) நான் இன்னொரு தடவை வந்து உங்களைப் பெற்றுக் கொள்ளவில்லையானால் நான் என்ன செய்வது என்று எனக்குச் சொல்லுங்கள் என்றார் அப்பெண். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் இறந்து விடுவதை நினைத்து அவ்வாறு கேட்டார்.

நீ என்னைப் பெற்றுக் கொள்ளவில்லையானால் அபூபக்கர் அவர்களிடம் சென்று உனது தேவையைப் பெற்றுக்கொள், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜுபைர் இப்னு
முத்இம் ரழியல்லாஹு அன்ஹு
(நூல்: புகாரீ, முஸ்லிம்)

ஹழ்ரத் அபூபக்கர்

ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாத்திற்கு முன்னும் (ஷிர்க்கைவிட்டும்) தூய்மையானவர்களே!

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடத்தில் முஹாஜிரீன் சஹாபாக்களும் அன்சாரீ சஹாபாக்களும் ஒன்று கூடி இருந்தார்கள்.

அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! உங்கள் வாழ்வின் மீது சத்தியமாக நான் அறியாமைக் காலத்தில் (இஸ்லாத்திற்கு முன்) சாமிகளுக்கு அறவே ஸுஜூது

செய்ததில்லை, என்று தங்களுக்கு ஏற்பட்ட (பழைய) நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லிக் காட்டினார்கள்.

ஒரு நாள் என் தந்தை (அபூ குஹாபா அவர்கள்) என்னை அழைத்துக் கொண்டு மறைவான ஓர் இடத்திற்குச் சென்றார்கள், அங்கே சாமிகள் இருந்தது. இது உனது உயர்ந்த தெய்வங்கள். அதற்கு ஸுஜூது செய்! என்று சொல்லி என்னைத் தனியாக விட்டுவிட்டார்கள். நான் சாமியை நெருங்கி, நான் பசியாக இருக்கிறேன், எனக்கு உணவு கொடு என்றேன். அது எனக்கு பதிலளிக்கவில்லை. நான் ஆடையில்லாமல் இருக்கிறேன், ஆடை கொடு என்றேன். இதற்கும் பதிலளிக்கவில்லை. ஒரு கல்லை எடுத்து சாமியிடம் இதை உன் மீது போடப் போகிறேன், நீ கடவுளாக இருந்தால் உன்னைப் பாதுகாத்துக் கொள்! என்றேன், இதற்கும் பதில் தரவில்லை ஆகையால், அதன் மீது கல்லைப் போட்டேன். அது(சாமி) தலைக்குப்புற வீழ்ந்தது. என் தந்தை வந்தார். என் மகனே! இது என்ன என்றார். அதுதான் நீங்கள் பார்க்கிறீர்களே! என்றேன்.

என் தந்தை என்னை என் அம்மாவிடம் அழைத்துச் சென்று நான் நடந்து கொண்டதை சொல்லிக் காட்டினார். அப்பொழுது என் அம்மா என் தந்தையிடம் (என்னை) விட்டு விடுங்கள். என் மகன் விஷயத்தில் அல்லாஹ்! என்னோடு (முனாஜாத்) பேசினான் என்றார்கள்.

என் அம்மா, அல்லாஹ்! உங்களோடு என்ன? பேசினான் என்றேன். நேற்று இரவு நான் தனித்து இருந்தேன். யாரும் என்னிடம் இல்லை. அப்பொழுது (என்னை நோக்கி) அல்லாஹ்வின் அடிமைப் பெண்ணே! அதீக்கான குழந்தையைக் கொண்டு (அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு "அதீக்" என்ற பெயரும் உண்டு) மகிழ்ச்சி

(நன்மாறாயம்) பெறுங்கள்! வானலோகத்தில் அவரது பெயர் சித்தீக் (இறுதி நபியான) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு உற்ற தோழராவார், என்ற சப்தத்தைக் கேட்டதாகச் சொன்னார்.

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்; ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் பேச்சை முடித்ததும், ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் இறங்கி அபூபக்கர் உண்மை சொன்னார், என்று சொல்லி விட்டுச் சென்றார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹழ்ரத் கலீபத் ரஸூலுல்லாஹ் (அபூபக்கர்) அவர்களின் பிறப்பு, இறப்பு

மக்காவில் யானைப்படை சண்டை நடந்து 2 வருஷம், 4மாதம் (சில நாட்களைத் தவிர) சென்ற பின் மக்காவில் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் குறைஷி குலத்தில் 7வது தலைமுறையில் முர்ரா என்பவரோடு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடன் இணைகிறார்கள்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அவர்களது பெற்றோர்கள், மகனார், பேரர் எல்லோரும் முஸ்லிமாகி நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் தோழர்களாகவும் (சஹாபாக்களாக) ஆனார்கள். இத்தகைய (ஈமான் கொண்ட குடும்ப) பாக்கியம் வேறு எந்த சஹாபிக்கும் அமையவில்லை.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களோடு எல்லா

யுத்தங்களிலும் கலந்து கொண்டார்கள். இஸ்லாத்திற்கு முன்னும் பின்னும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை விட்டுப் பிரியாமல் இணைந்தே இருந்தார்கள். முதன் முதலாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டது இவர்களே!

மரணம்

அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு இரவு- பகல் எந்நேரமும் துணை பிரியாமல் இணைந்து வாழ்ந்து, தனது பொருட்களையெல்லாம் அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் ரஸூலையுமே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த இஸ்லாத்தின் முதல் கலீபா அமீருல் முஃமினீன் ஸய்யிதினா அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 13ஆம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் (முடிய 8 நாள் மீதமாக இருந்தது) செவ்வாய்க்கிழமை இரவு மஃரிபுக்கும் இஷாவுக்கும் இடையில் தங்களது 63வது வயதில் மதீனாவில் மரணமானார்கள் (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) தன் மனைவி ஹழ்ரத் அஸ்மா பின்த் அமீஸ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குளிப்பாட்ட வேண்டும் என்று வஸியத் செய்து இருந்தார்கள். ஆகவே அவர்களே அன்னாரை குளிப்பாட்டினார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் துயில் கொண்ட கட்டிலில் அன்னாரின் ஜனாஸாவை வைத்து சுமந்து செல்லப்பட்டது. இஸ்லாத்தின் இரண்டாம் கலீபா அமீருல் முஃமினீன் ஹழ்ரத் உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜனாஸாத் தொழுகை

நடத்தினார்கள். அன்னாரின் புனித உடல் இருலோக சர்தார் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பக்கத்தில் ‘‘மஸ்ஜிது நபவிய்யில்’’ நல்லடக்கம் செய்யப்பட்டது.

(யா அல்லாஹ்! ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல் லாஹு அன்ஹு அவர்களுக்கு உன்னிடத்தில் உயர்ந்த அந்தஸ்தைக் கொடுப்பாயாக! அவர்களை நீ பொருந்திக் கொள்வாயாக! அன்னாரின் பரக்கத்தால் எங்கள் வாழ்வை உன் திருப்திக்கு ஏற்ற முறையில் தந்து, எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அன்பைப் பெற்றவர்களாக எங்களை ஆக்கி, இரு உலகிலும் எங்களை வெற்றியடைந்தவர்கள் கூட்டத்தில் சேர்த்து வைப்பாயாக! ஆமீன், ஆமின், யா ரப்பல் ஆலமீன்!)

ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் 2 வருஷம், 4 மாதம் ஆட்சி செய்தார்கள். அவர்களின் ஆட்சியின் காலம் பொற்காலமாகும். இவர்களிடமிருந்து அதிகமான சஹாபாக்கள், தாபியீன்கள் ஹதீஸ்களை (ரிவாயத்) அறிவித்துள்ளனர். அண்ணல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பின் குறைந்த காலமே அன்னார் வாழ்ந்ததால் இவர்கள் மூலம் குறைந்த (142) ஹதீஸ்களே அறிவிக்கப்பட்டுள்ளது.

(நூல்: மிர்காத் ஷரஹ் மிஷ்காத்)

ஹழ்ரத் அமீருல் முஃமினீன்

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்பு

இவர்கள் உம்முல் முஃமுனீன் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தையாவார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு மா அவர்கள் அறிவிக்கிறார்கள்; அல்லாஹு தஆலா சத்தியத்தை உமருடைய நாவின் மூலமாகவும், அவருடைய (கல்பு) உள்ளத்தின் மூலமாகவும் வெளிப்படுத்துகிறான், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: திர்மிதீ)

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத், அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பின் மனிதர்களில் சிறந்தவரே என்று சொன்னார்கள். இதைக் கேட்ட ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், நீங்கள் என்னை இப்படிச் சொன்னால் “உமரைவிட சிறந்தவர் ஒருவர் மீது சூரியன் உதயமாவதில்லை” என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொல்ல, நான் கேட்டு இருக்கின்றேன் என்று ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். (நூல்: திர்மிதீ)

உமருடைய உணர்வின் அரவம் கேட்டு ஷைத்தான் மிரண்டு ஓடுகின்றான், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹுஅன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்; ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள், பத்ரு யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. முஷ்ரிகீன் (எதிரி)கள் 70 பேர் கைதியாக்கப்பட்டார்கள். பத்ரு கைதிகள் விஷயத்தில் என்ன செய்யலாம்? என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்கள் தோழர்களிடம் ஆலோசனை கலந்தார்கள்.

அப்பொழுது ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! இவர் (கைதி)கள், நமது தந்தையின் சகோதர மக்கள், நமது உறவினர்கள் சகோதரர்கள் ஆகையால் அவர்களிடமிருந்து அபராதத் தொகையை பெற்றுக் கொண்டு விடுதலை செய்து விடலாம், அபராதப் பணம் நமக்குக் கிடைத்தால் அதை எதிரிகள் மீது செலவழிக்க நமக்கு வசதியாக இருக்கும், மேலும் அல்லாஹ்! நாடினால் இவர் (எதிரி–கைதி) களுக்கு இஸ்லாத்தின் பக்கம் ஹிதாயத்–நேர்வழி காட்டுவான். அவர்கள் இஸ்லாமாகி விட்டால் நமக்குத் துணையாக இருப்பார்கள், என்று கூறினார்கள்.

கத்தாப் உடைய மகனே! உங்களின் யோசனை என்ன? என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! இவர்கள் விஷயத்தில் அபூபக்கர் அவர்களின் யோசனையைப் போன்று என் யோசனை இல்லை. இவர்கள் எதிரிகளின் தலைவர்கள். இவர்கள் மிகவும் வீரமானவர்கள், ஆகையால் இவர் (கழுத்து) களை நாம் கொலை செய்து விடவேண்டும் என்று சொன்னேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என் யோசனையை ஏற்காமல் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு

அன்ஹு அவர்களின் யோசனையின் பிரகாரம் அபராதத் தொகையைப் பெற்றுக் கொண்டு, எதிரி(கைதி)களை விடுதலை செய்து விட்டார்கள்.

இவ்விவகாரம் நடந்து முடிந்த மறுநாள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்றேன். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களும் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அழுது கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! என்ன காரணத்தால் நீங்கள் இருவரும் அழுது கொண்டிருக்கிறீர்கள், என்று கேட்டேன். உங்கள் அழுகையின் காரணம் தெரிந்தால் நானும் அழுவேன். உங்களின் அழுகையினால் எனக்கும் அழுகை வரும் போல் இருக்கிறது, என்று கூறினேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள்,

இதோ சமீபத்தில் உள்ள இம்மரத்தைவிட நெருக்கமாக உங்களின் மீது (இறைவனின்) அதாப்–வேதனையை எனக்கு எடுத்துக் காட்டப்பட்டது. (கீழ்காணும்) இறை வசனத்தின் மூலம் அல்லாஹ்வின் கருணையில்லை என்றால் (நாம் தப்ப முடியாது என்று கூறி) அல்லாஹ்வின் திருவசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

விஷமங்கள் செய்த விரோதிகளை சிறைபிடித்து, அவர்களுடைய இரத்தங்களை பூமியில் ஒட்டாமல் (கொலை செய்யாமல்) விடுவது எந்த நபீக்கும் ஆகுமானதல்ல. நீங்கள் இவ்வுலகத்தின் நீடிக்காத பொருட்களை விரும்புகிறீர்கள். அல்லாஹ், மறுமையில் (உங்களின் சுகத்தை) நாடுகிறான். அல்லாஹ்! மிகைத்தோனும்

ஞானமுடையோனுமாக இருக்கிறான், என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

(அல் குர்ஆன் 8–67)

(பத்ரு கைதிகள் விஷயத்தில் தீர்ப்பு முடிந்த) மறுநாள் நபீஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உமர் ரழியல்லாஹுஅன்ஹு அவர்களை வழியில் சந்தித்தார்கள். கைதிகள் விஷயத்தில் (அவர்களை கொலை செய்யாமல் அபராதத்தைப் பெற்று விடுதலை செய்ததால்) நமக்குச் சோதனை வந்துவிட்டது என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பத்ரு கைதிகள் விஷயத்தில் நான் எடுத்த முடிவுக்கு வானத்திலிருந்து தண்டனை இறங்கினால் உமரைத் தவிர யாரும் தப்பித்து இருக்க முடியாது, என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரத்துக்கு முன், நபித்துவம் வந்து 6ஆம் ஆண்டு (5ஆம் ஆண்டு என்றும் சொல்லப்படுகிறது) இஸ்லாமானார்கள். அந்நேரம் 40 ஆண்களும் 11 பெண்களும்இஸ்லாத்தில் சேர்ந்து இருந்தனர். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் இஸ்லாமானதைக் கொண்டு 40 (சஹாபாக்கள்) எண்ணிக்கை பூர்த்தியானது என்றும் சொல்லப்படுகிறது.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்; எக் காரணத்தால் உங்களுக்கு ‘‘பாரூக்’’ என்ற பட்டம் ஏற்பட்டது என்று ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வினவினேன். நான் இஸ்லாமாவதற்கு மூன்று நாளைக்கு முன் ஹழ்ரத் ஹம்ஜா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஸ்லிமானார்கள்.

பின்பு அல்லாஹு தஆலா எனக்கு முஸ்லிமாகும் பாக்கியத்தைத் தந்தான். வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. என்ற வசனத்தை (என் சகோதரி மூலமாக) கேட்டேன். அன்றைய தினத்திலிருந்து இவ்வையகத்தில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் "உயிரை" விட வேறு எவரின் உயிரும் எனக்கு அவ்வளவு பிரியமில்லை. அல்லாஹ்வின் ரஸூல் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று விசாரித்தேன், அவர்கள் "சபா" SAFA மலைக்குன்றுக்கு அருகில் அர்க்கம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டில் இருக்கிறார்கள் என்று என் சகோதரி சொன்னார்.

உடனே நான் அர்க்கம் அவர்கள் வீட்டிற்கு வந்தேன். அங்கே நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஹழ்ரத் ஹம்ஜா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்ற சஹாபாக்களும் இருந்தார்கள். கதவைத் தட்டினேன், எல்லா சஹாபாக்களும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். அவர் (சஹாபாக்) களிடம் ஹம்ஜா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஏன் இவ்வாறு ஒன்று சேருகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள் இதோ (என்னை) உமர் என்றார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வெளியில் (என்னிடம்) வந்தார்கள். எனது ஆடையைப் பிடித்துக் குலுக்கினார்கள். அதனால் நான் கீழே விழுந்து விடுவேனோ என எண்ணினேன். உமர் நீ இஸ்லாமாகி விடு! என்று சொன்னதும் நான், "அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு" என்று கூறி முஸ்லிமாகி விட்டேன். நான் கலிமா சொன்னதும் வீட்டிலுள்ளவர்கள் மகிழ்ச்சியால் தக்பீர்

சொன்னார்கள். அச் சப்தத்தை பள்ளி–கஃபாவில் இருந்த அனைவரும் கேட்டனர்.

அல்லாஹ்வின் ரஸூல் அவர்களே! நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் சத்தியத்தின் மீது இல்லையா? என்று கேட்டேன். என் ஆத்மா எவன் வசம் உள்ளதோ அவன் (அல்லாஹ்) மீது சத்தியமாக நீங்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் சத்தியத்தின் மீதே இருக்கிறீர்கள், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

லாத், உஜ்ஜா சாமிகளெல்லாம் மலைகளின் முகடுகளிலும் ஓடைகளிலும் வைத்து வணங்கப்படுகின்றன. நாம் ஏன்? ஏக வல்லவனான அல்லாஹ்வை மனிதர்களுக்குப் பயந்து கொண்டு மறைவாக வணங்கவேண்டும். ஆகையால் உங்களை நபீயாக அனுப்பியவன் மீது சத்தியமாக நாம் பகிரங்கமாக அல்லாஹ்வை வணங்க வேண்டும், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கூறினேன்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் (நாற்பது) சஹாபாக்களை இரு அணியாக ஆக்கினார்கள். ஒரு அணிக்கு ஹழ்ரத் ஹம்ஜா ரழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தலைவராகவும், இன்னொரு அணிக்கு என்னைத் தலைவராகவும் நியமித்தார்கள். இரு அணிகளாக மக்காவின் இரு திசைகளில் ஊர்வலமாகச் சென்று பின்பு கஃபாவில் நுழைந்தோம். எங்களின் பகிரங்கமான ஈமான், இஸ்லாத்தின் ஊர்வலத்தைக் கண்ட எதிரிகளுக்கு என்றுமில்லா மிகப்பெரிய பயம் ஏற்பட்டது. அன்றைய தினத்திலிருந்து நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எனக்கு பாரூக் (சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் மத்தியில் பிரித்து வைப்பவர்) என்ற பெயரை சூட்டினார்கள், என்று ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத்

இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களுக்கு விளக்கம் கூறினார்கள்.

(நூல்: மிர்காத்)

தப்ஸீர் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். ஒரு முனாபிக் ''பிஷ்ரு'' என்பவருக்கும் ஒரு யூதனுக்குமிடையே பிரச்சினை இருந்தது. அப்பிரச்சினையில் தீர்ப்பை பெறுவதற்காக யஹூதி, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் போகலாம் என்றார். யூதத் தலைவரான கஃப் இப்னு அஷ்ரப் என்பவரிடம் போகலாம் என்று முனாபிக் சொன்னார். இறுதியில் இருவரும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் வந்தார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் தீர விசாரித்து யஹூதிக்குச் சாதகமாக தீர்ப்புக் கூறினார்கள்.

இத்தீர்ப்பை முனாபிக் ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் நம் பிரச்சினையை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கொண்டு போகவேண்டும் என்று யஹூதியை அழைத்தான். ஆகையால் முனாபிக், யஹூதி இருவரும் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்றார்கள். நாங்கள் முதலில் எங்கள் பிரச்சினையை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் கொண்டு சென்றோம். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எனக்கு சாதகமாக தீர்ப்பளித்தார்கள். அதை ஏற்காமல் இவர் பிஷ்ரு மீண்டும் பிரச்சினையை உங்களிடம் கொண்டு வந்துள்ளார் என்று யஹூதி கூறினார். அப்படியா? எனறு முனாபிக் என்பவரிடம் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் ஆம்! என்று சொன்னார்.

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள், சிறிது நேரத்தில் வருகிறேன்

என்று கூறிவிட்டு வீட்டிற்குள் சென்று வாளை எடுத்து வந்து முனாபிக் தலையைச் சீவினார்கள் (முனாபிக் இரத்தத்தில் மிதந்து பிணமானான்) அல்லாஹ், அல்லாஹ்வின் ரஸூல் அவர்களின் தீர்ப்பை ஏற்காமல் என்னிடம் வந்தவனுக் (முனாபிக்)கு இப்படித்தான் தீர்ப்பு செய்வேன் என்று உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

அந்நேரம் அல்லாஹ் (கீழ்க்காணும் வசனத்தை இறக்கி வைத்தான்: நபியே! உம்மீது இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும் உமக்கு முன்னர் இறக்கப்பட்ட (வேதங்கள் அனைத்தையும்) நிச்சயமாக நம்புவதாக வாதித்துக் கொண்டிருப்போரை நீர் கவனிக்கவில்லையா? வழி கெடுப்போ(னான ஒரு ஷைத்தா)னைத் தீர்ப்பு கூறுபவனாக ஆக்க விரும்புகின்றனர். ஆனால் அவர்களோ அவனை நிராகரித்து விடவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கின்றனர். மேலும் அந்த ஷைத்தானோ (கஃபு பின் அஷ்ரப்) அவர்களை வெகு தூரமான வழிகேட்டிலேயே ஆக்கிவிட விரும்புகிறான்.

(அல் குர்ஆன் 4,60)

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள், உமர் தனது வீரத்தால் அவசரப்பட்டு ஒரு முஃமீனை கொலை செய்து விட்டாரே! என எண்ணினேன். அல்லாஹ்வின் வசனம் (4-60) இறங்கியதும் என் சந்தேகம் நீங்கியது. உமர் ஒரு முஃமீனை அநியாயமாக கொலை செய்யவில்லை என்ற சந்தேகத்தை விட்டுப் பாதுகாக்கப் பட்டார்.

ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (இறங்கி. சொன்னார்கள், நிச்சயமாக உமர், சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் மத்தியில் பிரித்துக் காட்டினார், என்று

கூறி "பாரூக்" என்ற பெயரை ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சூட்டினார்கள்.

(நூல்: மிர்காத்)

ஹிஜ்ரீ 13ஆம் ஆண்டு ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சி(கலிபா)ப் பொறுப்பை ஏற்றார்கள். அவர்களின் ஆட்சிகாலம் "பொற்காலமாகும்."

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 23ஆம் ஆண்டு துல்ஹஜ் (முடிய 4 நாள் இருக்கும்போது) அபூ லுஃலுஃ என்ற கொடியவனால் 63வது வயதில் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஹழ்ரத் சுஹைப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். அன்னாரின் புனித உடல் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சஹாபாக்களின் அந்தஸ்து

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொல்ல, தான் கேட்டதாக ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், எனது ரப்பிடம் எனக்குப் பின் என்னுடைய சஹாபாக்கள் மார்க்கச் சட்டங்களில் மாறுபாடு கொள்வதைப் பற்றிக் கேட்டேன். அல்லாஹ்! எனக்கு வஹீ அறிவித்தான். யா முஹம்மத்! உனது சஹாபாக்கள் என்னிடத்தில் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போன்று அந்தஸ்து உடையவர்கள். அவை (நட்சத்திரங்)கள் சிலதை விட சிலது (பிரகாசத்தால்) வலுவாக இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் பிரகாசம் இருக்கிறது. (அதைப் போன்று ஒவ்வொரு சஹாபாக்

களுக்கும் பிரகாசம் இருக்கிறது) எவர், அவர் (சஹாபாக்)களுடைய கருத்து மாறுதல்களில் எதைப் பின்பற்றினாலும் (அவர் என்னிடத்தில் நேர்வழியில் இருக்கின்றார்) என்று அல்லாஹ் கூறினான்.

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்; எனது சஹாபாக்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் (நீங்கள்) யாரைப் பின்பற்றினாலும் நேர் வழியடைவீர்கள், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள்

(நூல்: மிர்காத், ரஜீன்)

என் தோழர்களை ஏசாதீர்கள், உங்களில் ஒருவர் உஹது மலையளவு தங்கத்தைச் செலவு செய்தாலும் அவர் (சஹாபாக்)கள் செலவு செய்ததில் ஒரு சிரங்கையின் அளவு கூட நன்மையை அடையமாட்டார், என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹழ்ரத் அபூசயீதுனில் குத்ரீ ரழியல்லாஹு அன்ஹு

(நூல்: புகாரீ, முஸ்லிம்)

உத்தம சஹாபாக்களைப் பற்றி பெரியார்கள்

1. சஹாபாக்களை ஏசுவது ஹராம். அது மிகப் பெரிய பாவங்களில் கணிக்கப்படும்.

(ஷரஹ் முஸ்லிம்)

2. சஹாபாக்களை ஏசுபவர்களை கொலை செய்யவேண்டும்

(மாலிக் மத்ஹபைச் சார்ந்த சில அறிஞர்கள்)

3. சஹாபாக்களில் ஒருவரை ஏசுவது, இகழ்ந்து கூறினாலும் அது மிகப் பெரிய பாவமாகும்.

(காழி இயாழ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி)

4. ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் ஏசுபவர்களை கொலை செய்ய வேண்டும். (சில உலமாக்கள்)

5. காபிரான ஒருவன் தன் குப்ருக்கு பாவ மன்னிப்புத் தேடினால் அவனது முந்தைய பாவங்களெல்லாம் (அவன் ஈமான் கொண்டதால்) மன்னிக்கப்படும். ஆனால், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இருவரையுமோ, அல்லது இவர்களில் ஒருவரையோ ஏசுபவனின் மன்னிப்பு ஏற்கப்படாது.

(ஜைன் இப்னு நஜீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி)

6. ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு, ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு இவர்களின் "கிலாபத்தை" மறுப்பவர்கள் அல்லது இவ்விருவர்களையும் கோபிப்பவர்கள் காபிரானவர்களாகும்.

(நூல்: மிர்காத்)

அல்லாஹு தஆலா என்னை (மனிதர்களிலே சிறந்தவராகத்) தேர்ந்தெடுத்தான். எனக்கு சஹாபாக் (சிறந்த மனிதர்)களையும், உதவியாளர் (அன்சாரீ)களையும் தெரிந்தெடுத்தான். சில(துஷ்ட) மனிதர்கள் தோன்று வார்கள். அவர்கள் அவர்(சஹாபாக்)களை ஏசுவார்கள். ஆகையால் அவர்களோடு உட்காறாதீர்கள், அவர்களோடு சாப்பிடாதீர்கள், அவர்களிடம் திருமணம் செய்யாதீர்கள்

என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: மிர்காத்)

என் சஹாபாக்களில் ஒருவர் ஒரு பூமியில் இறந்துவிட்டால் அவர் அவர்களை இழுத்துக்கொண்டு வருவதற்காக அனுப்பப்படுவார். இன்னும் அவர், அவர்களுக்கு மறுமை நாளில் பிரகாசமானவராகவும் வருவார் என்று, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(நூல்: திர்மிதி)

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; என் சஹாபாக்களை ஏசுபவர்களை நீங்கள், கண்டால் அல்லாஹ்வின் சாபம் உங்கள் தீயோர்கள் (சஹாபாக்களை ஏசுபவர்) மீது உண்டாகட்டும்! என்று சொல்லுங்கள்.

அறிவிப்பாளர்: இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா

(நூல்: திர்மிதீ)

(அல்லாஹும்ம ஸல்லி வ ஸல்லிம் அலா ஸய்யிதினா முஹம்மதிவ் வஅலா ஆலிஹி, வ அஸ்ஹாபிஹி, வ அஜ்வாஜிஹி, வ அத்பா இஹி சலாத்தன் தாயிமத்தன், பி தவாமிஷ் ஷம்ஷி வல் கமர்)

வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

★★★

எமது வெளியீடுகள்

1. தமிழ் மூலம் சுலபமாக குர்ஆன் ஒதுவதற்கு கற்றுக்கொள்ளுங்கள் ரூ.23.00
2. மத்ஹபுகளை பின்பற்றுவது ஏன்? ரூ.20.00
3. நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பல திருமணங்கள் செய்ததேன்? ரூ.25.00
4. புனித ரமளான் நோன்பின் சிறப்புகளும் சட்டங்களும் (ஹனபீ–ஷாபியீ) ரூ.10.00
5. குர்பானியின் சிறப்புகளும் சட்டங்களும் (ஹனபீ–ஷாபீயீ) ரூ.10.00
6. சுன்னத், நபில்தொழுகையின் சிறப்புகளும் சட்டங்களும் ரூ.10.00
7. அவ்லியாக்களின் அற்புத வாழ்க்கை
8. அஹ்மது நபியின் அற்புத வாழ்க்கை
9. இறைமறை துஆக்கள் ரூ.6.00
10. இஸ்லாத்தின் ஐந்து கடமைகள் ரூ.15.00
11. கலிமா, தொழுகை, நோன்பு ரூ.6.00
12. ஜகாத் கொடுப்பது எப்படி? ரூ.6.00
13. அஸ்மாஉல் ஹுஸ்னாவின் அற்புத பலன்கள் ரூ.6.00
14. சொர்க்கம் செல்ல ஸலாம் கூறுங்கள் ரூ.6.00
15. யாஸீன், ஆயத் குர்ஸீ, ஸலவாத்துன் நாரிய்யா, (அரபு, தமிழ்) சிறப்புகள் ரூ.3.00

NB :

எமது நூல்களை மொத்தமாக வாங்கி அன்பளிப்பு செய்ய விரும்புவோருக்கு குறைந்த ஹதியாவுடன் அவர்களின் விளம்பரமும் பிரிண்ட் செய்து சப்ளை செய்யப்படும்.